आ.

*Sat Chit Ekam Brahma!*

# SAMARASA JNÂNA CHANDRIKA

## An Unsectarian Philosophical Treatise

*from the standpoint of the Adwaita-wada*

BY


VICHUR MUTHUCUMARASWAMY MUDR., B. A.,

*The Adwaita-Chanda Marudha*


WITH AN INTRODUCTION BY


**TANDALAM BALASUNDARA MUDR. AVL.,**

*Munshi to the Tamil Translator to Government and Chief Examiner to the University of Madras in Tamil for Several Years.*



மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.



*MADRAS:*

PRINTED BY THOMPSON AND CO.,

AT THE "MINERVA" PRESS, POPHAM'S BROADWAY.

1902.



[*All Rights Reserved.*]



e Re. 1] [Postage extra.

PRINTED BY THOMPSON AND CO. AT THE "MINERVA" PRESS,
33 POPHAM'S BROADWAY, MADRAS

# ஸமரஸ ஞான சந்திரிகை.

இது

சாம்பிரதாயமுடை

வெளிப்போந்ததோர் வைதிக தத்வ ஞான நூல்.

அத்வைத ரஸாம்ருதரா

ஸ்ரீமான்

விச்சூர்-முத்துக்குமாரசுவாமி முதலியார், பி. ஏ.,

அவர்களால் இயற்றப்பட்டு,

சென்னை:

மினெர்வா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

TO

# Rajah Sir S. Ramaswami Mudaliar Avl.

Knight, Companion to the most Eminent Order of the Indian Empire,

and Fellow of the Madras University,

*Patron of Literature and all Deserving Movements.*

THIS SMALL WORK

IS DEDICATED

WITH KIND PERMISSION

as a small token of sincere affection, great respect, and deep-felt esteem

**BY THE AUTHOR.**

## உரிமையுரை.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஓகையா னுளப் பூப்பன் கனே
யுரிமைகண் டியா னெழிவிலாதநல்.
லீகையா யுனக் குண்மையேருமன்
போபசமாச பானாதக்ரிமை
யூகையா னுயர் நாவலுணரினை
னுத்தபாவைய **ராமசா**மியால்
வாகையுற்றசீர் வள்ளமேசிவ
மன்னமேவியிதைக் கொளுவாயரோ.

ओं·

*Sat Chit Ekam Bramha !*

# INTRODUCTION.

As desired by my esteemed friend Mr. V. Moothoocoomaraswamy Mudaliar, B.A., the author of the *Samarasa Gnana Chandrika*, I venture to say a few words to the public—particularly to the English reading native Public—by way of introducing his work to them. I need hardly say that the appearance of this small and good work, which "is the precious life blood of a master-spirit embalmed and treasured up on purpose to a life beyond life" in the words of the great Epic Poet, is quite opportune, as it aims at the inculcation of broad and catholic views about the leading Religions embraced by the enlightened nations of the East and the West in consideration of the fact that no such religion is without inaccessible heights and unfathomable depths, that the cardinal virtues of all such Religions lead their votaries sooner or later to

"That end
Beginning, mean, and end to all things—*God.*"
—(*Bailey*).

And that

"All are but parts of one stupendous whole
Whose body *Nature* is, and *God* the *soul*"
—(*Pope.*)

I perused only the first few forms of this *work* while it was passing through the Press, and I feel perfectly sanguine that they are good samples of the sack. The readers of this *work* are not unaware of the fact that this is not the age in which the different sects of the same Religion, nay different Religionists themselves should carp and sneer at one another either by publishing pamphlets or by delivering lectures, and thus wound the feelings of their fellow subjects, in as much as all of us are the loyal subjects of a Gracious Sovereign whose avowed object is to govern us with a parental care and

without distinction of caste, creed or colour, and whose expectation is that all His Majesty's subjects should live in amity, fostering feelings of brotherhood towards one another. Such being the existing state of things, I make bold to say that this work which aims at universal love and brotherhood is, in my humble opinion, a desideratum of the present day, and that its author who is a *Graduate* in Arts of the University of Madras of *no ordinary attainments* and a *splendid* scholar in Tamil of no *sectarian tendencies* is, to say the least about him, a true lover of the Supreme Being and of all those who have a deference to that Being, be they of whatever country, caste creed, or colour. I may quote the memorable lines of Coleridge in speaking of his character as a true Advaithee.

"He prayeth well, who loveth well
Both man and bird and beast,
He prayeth best, who loveth best
All things, both great and small."

In conclusion, to those (the English reading native public—I mean) that would long to have a definite idea of the *Samarasa Gnana Chandrika* before going through the book, I may quote the following extracts from Jeremy Taylor and Tennyson, as they breathe the same sentiments that pervade the *work* before me.

"No man can hinder our private addresses to God; every man can build a chapel in his breast, himself the priest, his heart the sacrifice, and the earth he treads on the altar"—Jeremy Taylor.

"I take possession of man's mind and deed,
I care not what the sects may brawl,
I sit as God beholding no form of creed
But contemplating All"—*Tennyson*.

T. BALASUNDARAM,

*Munshi, Government Tamil Translator's Office,*
*(Chief Examiner in Tamil for the Madras University for several years).*

MADRAS,
*13th December 1901.*

# சாற்றுக்கவிகள்.

கிறிஸ்டியன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத் உ. வே. கா. ஸ்ரீ - கோபாலாசாரிய சுவாமிகள்

அருளிச்செய்த

## பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

(சிலேடை.)

குணவானம விசகுரா சிறக்கவரு மூர்த்தர் குரா [illegible] சிவாக [illegible] யெலாம்
கோதினற் பாற்கடலின் வாயமுக [illegible] குமுசய [illegible] திசை
தணவா துளத்தினிருள் பாறுசம ரசஞான சந்[illegible] சாறுலவுமால
சமயபே தத்தினவா [illegible] நிறை [illegible] காளகு [illegible] பாதுபகையா
துணாவேத மின்றிவை கொாறு [illegible] மு [illegible] விபு [illegible] வலம் [illegible] ழலவுரு
தொன்றியச சந்திரனை மேவிடல் [illegible] மயல [illegible] காமி
மணவா கீர்சுரப் பஞ்சபூதத்துக்கு [illegible] எனன் [illegible] செய [illegible] மேறு
வருமத்து விதசண்ட மாருதந் தனையட வாழூய் டாழுமனிகே.

மஹாவித்துவான் [illegible]

சபாபதி முதலியாரவர்கள் மாணாக்கர்களிலொருவராகிய

ஸ்ரீலஸ்ரீ

தண்டலம்-பாலசுந்தர முதலியாரவர்கள்

இயற்றிய

## பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

“ஆறுசமயக்கடவுள் வேறுவே றின்றியா
ரொருவனே யாங்கிரு
தன்பாகக் குமுகத்திருக் கிட்டெனத் தியாராவாக்கு
மறிவித்த” மூவிருமுகப்
பேறுபெறு முத்துக் குமாரசுவாமிதன
பெயருற்ற நறபுண்ணியப்

பெற்றியாற் பல்சமய நூலுண்மை யாய்ந்ததிற்
பிறங்குதனிமுத லொன்றெனக்
கூறுசம ரசஞான குணமருவி யக்குணங்
குலவயத் தெவருமெய்தக்
குலவுசம ரசஞான சந்திரிகை யென்னுநூல
கொள்ளுமெழில் விச்சூரில்வாழ்
தேறுபுகழ் முத்துக்கு மாரசா மிக்கவிஞன்
செய்துதவ வஃதுலகுளோர
சித்தவிரு ணீக்கியே கறைகுறையி லாவுவாத்
திங்களின் விளங்கியதரோ.

---

சென்னை இந்துதியலாஜிகலைஸ்கூல்தமிழ்ப்பண்டிதர்
**ஸ்ரீமான் கோ. வடிவேலுசெட்டியா**
ரவர்களியற்றிய

### அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அச்சூரு மூப்பிணியு மகற்றுமொரு நெறிகாட்டு மறவோர் கூற்று
ணச்சூரு மக்கமுளார் பொக்கமுளா ரென்றறன்ற னுடஞ் செப்பி
யச்சூரு மம்புயனு மகம்பாறக் குட்டிபிளந் தாண்டோ னத்தன்
மெச்சூராம் விச்சூர்வாழ் வேளாளர் குலதிலகன் மெய்ம்மை பூண்டோன். (1)

நினைக்க முத்தி தருமருணா சலப்பெயரான் கன்னனென நிறுவுஞ் சீரான்
பனைக்கையுரி யான்பதத்தைப் பரவுவார் பதம்பரவும் பான்மை யாளன்
மனைத்துரும்பென் போர்முதலோர் வழியொழுக வழியொழுகு மாட்சி யாளன்
முனைப்பவத்திற் புலனொடுங்கி யகமடக்கி யொருநிலையின் முன்னி நின்று (2)

நடையானைச் சினவிடையின் புடையானை யாவுமாய நண்ணு வானை
யுடையானை யுமையவளை யொருபாதி யுடையானை யோங்கு வானைக்
கடையானை முதலானைப் பெரியானைச் சிறியானைக் கருது வோரைப்
படையானைத் திரிசூலப் படையானைப் படைத்தழிக்கும் பண்பு ளானை. (3

சங்கரனே தற்பரனே சழக்கிலார்க் குதவிடுநற் றருவே முற்றும்
பொங்கரனே புத்தொழிக்கும் புத்திரனைத் தாவென்று போற்றுஞ் சீராற்
றங்கரனே யுடையிழந்தார்க் கெனவுதவுந் தகைமையினைத் தனதாக கொண்டவ்
வைங்கரனே யெனப்புவியி லவதரித்துப் பலகலையு மாய்ந்த பேரான். (4)

சாமிக்குஞ் சாமியாஞ் சங்கரன்றன் சாமியெனுஞ் சாமி பேரைப்
பூமிக்கு ணனிநிலவ வரும்பெயரா னங்கிலத்தைப் பூர்த்தி யாகக்
காமித்துக் கற்றுயர்ந்த வபிதானம் பெற்றவனற் றண்ணோட் டத்தா
னேமிக்கு நற்றமிழைப பாலசுந்த ரன்மனோங்க வி யைந்துட் கொண்டோன்.

முதுக்கு மாரசா மிப்பெயரா னன்னூலை நன்னூ லார்பா றின்றித்
பொதுக்கொள் ளாச்சிலவர் மதப்பிரதுத் தலைக்கொள்ள வொழுங்கொன்
றதுப்பிரசா ரவென்று பலகூறி நவைவிளைத்துச் சாலபு மோரா
யெத்துப்பு முடையானைப் பழிகூறிப் பழிநெறியி லேறல் நன்று. (6)

மருண்மனத்தோர் மனநெகிழ மாதவத்தோ ராசிசொல மதத்தின் றன்மை
தெருண்மனத்தோர் சிரம சைந்நத் தெய்வமறை யோர்ந்தவர்கள் செய்த வத்தி
னருண்மகிழ்ந்திந் நால்வடிவா மமைந்ததென வத்துவித மநத்தி லான
விருண்மடிக்குந் தமமனை வெர்பதமு மவிரோத வியப்பு மென்ன (7)

சத்துங்க ளோராக்கசம ரசஞான சந்தர்லகையைச் சதுரப் பாடா
யொத்திங்கு நிறைகுமத விருள்பாற நலமாரு வெவரு நட்பா
யொத்துங்கொண் டாடிமெய மூகமுர்குமங் கிரையுமா றுணர்ந்து ணர்ந்து
நத்திக்கு முடையு டையா னாலமடையவ ரர்ந்துசீர் நாணி மருமால. (8)

---

வித்வான்

## ஸ்ரீமான். முத்தூர். அ. சங்கரலிங்கம் பிள்ளை B. A. அவர்கள்

இயற்றிய,

### விருத்தம்.

அருணைச்சடங் கிரிவிட்டநன் றரணிஞ்றிழி நகிசா
றருணத்தொளிர் வருசத்திரத் தகையுக்கு யார் மறைநேர்
சரணத்திரு வொருவன்குநன் சாமத்திரு வறிவாங்
கிரணத்தொடு புவியிற்படி கிளர்வுமறை யொளிர்வும்.

### வேறு

கொண்டவன் குற்ற மில்லான் கொண்டலே யென்ன வாரித்,
தண்டமிழ் மாரி பெய்யுந் தகுதியான் மிகுதி யுற்று
மெண்டரு குணங்க டாங்கி யின்புரு வமைந்த பெற்றி
யண்டரே யன்றி வேறு ரலைதெடுத் துரைக்க வல்லார்.

### வேறு

மணியொன்று காலினிடை மணியொன்று சேற்றிரளு மயங்கி யோட
மணியொன்று பெருநயனச் சிறுமியர்க ணீர்குடைய மருங்கு பண்ணே
மணியொன்று கதிர்காட்டும் விச்சூர்வந் துதித்தமுத்துக் குமார சாமி
மணியொன்று தமிழாள னத்துவித மாருதங்கண் மணியே போல்வான்

### வேறு

எங்தெய்வ மெமது தெய்வ மெம்மத மதமே யென்றுத்
தங்தெய்வ முணர்கி லார்க்குச் சமரச ஞானந் தீட்டப்
புந்தியா லுன்னி யீந்தான் புதுவடி யென்ன மன்றோ
வந்திரு பாலு மொய்க்க வான்றமிழ் வல்லா ரெல்லாம்.

### வேறு

ஓதுவா ருயர்ந்தோ ருயர்மலே யுருக்கொண்டெழுன்றிடு மிருவாதம் பகையை
மாதுசோ பாக னகற்றின னென்று மைத்தடங் கிரியினிற் றேன்று
நீதிசேர் புதல்வன் நீணிலத் துதித்து நீக்கரு மாணவம் படிந்து
வாதுசெய் புல்லர் நம்பரை யாற்றல் வழக்கதே சழக்குறு முலகே.

சென்னை வேப்பேரி S. P. G. ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்.

ஸ்ரீமான்

## சிவபுரம். வித்வான் வேலாயுத முதலியாரவர்க ளியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தேரறிவு முனிவரருந் தேவருமற் றெத திறத்துச் செயல்வல் லோரும்
பாரறியப் படர்கானிற் கொடுந்தவத்தா லுயிர்சாம்பிப் பலன்கா ணுதப்
"பேரறிவை" யத்துவிதச் சண்டமா ருதப்புலமை பிறங்கச் செயது
சீரறிவாஞ் சமரஸஞா னச்சநதி ரிகையெனவே சிறந்த தம்மா! (1)

மணிதிகழும் பாலிநதி வளஞ்சுரக்கும் விச்சூரின் மாத வந்தான்
பணிதிகழும் பரமனருள் பெறுவருணை சலவேளின் பால னுகி
யணிதிகழும் B. A. வபி தானமொடு பிரசங்க மமைந்த சீர்த்தி
நணிதிகழும பாரதியுங் கேட்டுநனி களிகூர்ந்து நட்புற் றுளால். (2)

### வெண்பா.

வாய்வாத நோயரெலாம் வாயடங்கிப் போவரெனத்
தூய்தாஞ் சமரஸநூற் சொற்சான்றே—தாய்நேரு
முத்தமிழோ ருள்வியப்ப முத்துக்கு மாரனுளந்
தித்திக்கச் சொற்ற திறம். (3)

உ

சிவமயம்.

ஓம் பரப்பிரம்மணே நம:

வித்வான்

ஸ்ரீமான் வா. மகாதேவ முதலியா ரவர்களியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

## நிலைமண்டில வாசிரியப்பா.

உலக மேத்து முலவாச்சீர
வெழுங்க ரதனு ளேற்ற மிகுத்தே
கலைமுடி வுணர்ந்த கடவுண் மூதாட்டி
யறத்தா றீட்டு மரும்பொருள் வழங்கித்
தெங்கங் காயிற் றிதலையாரு
மகளிர் போக மாந்திப் பன்முறு
ளிம்மை யின்ப மெழில்பெறச் சிவணிச்
சித்திபுத் திகளிற் செரு மார்வ
நீத்தே முத்தியி னீங்காப்பேறு
நாமார் நமக்குள பந்தமியாண்டையதென்
றெழுமொன்றின்றி யுசாவியஞான்று
கண்ணுதலெந்தை கழலடியொன்றே
மெய்யெனக் காணூஉ மெய்யா யவிர்தர
லென்றறிந் தந்நிலை யெளிவர நிற்குஞ்
சான்றோ ருடைத்தெனச் சாற்றிய தொண்டைநன்
னாட்டிற் கவ்வள நல்கியே முட்டாட்
டாமரை மலர்மேற் றவிசமா கிற்கு
நான்முகன் முதலா நவிலுமண்டங்க
ளௌவையுமீன்றெடுத்த வெம்மோயுநித் து
முல்லை முகையின் மூரனீர்ப் பந்த
ரறுகான் மூசு மாரிளம் பொங்க
ரந்தண் பொய்கை யாதியறங்க
ளெட்டும் வளர்த்தற் கமையுறு மிடனாய்ப்
பிறக்கினு மிறக்கினும் பேணினு முத்தி
சிறக்க வுதவுஞ் செல்வக்காஞ்சி
மாநகர்க் கணித்தாய் மன்னியெவ் வளனுங்
காட்டி லைவங் கவினுர் விச்சூர்
வந்த செம்மல் வண்கொடையாளனு
மருணாசலனெனு மாசகல்குணவான்
போரூர் முருகர் போற்றுபுநூறு

திங்களவ்வூருட்சென்றத னுய
தவப்பய னேனென் றண்டமிழாரிய
மரிறபக் கற்றதோ டங்கிலபாடையில்
'பீ, ஏ' பட்டமும் பெற்றநுண்ணறிவோன்
யாவரு மெச்ச வவையகம் புக்குச்
சோர்வடையாமலுஞ் சொன்னெகிழாமலு
மெடுத்தவிடய மோர்பெற வளந்தளந்
தடுக்கு மாற்றா னுறையு மாற்றலின்
மிக்கோன்றக்கோன் மேக்குயா வனப்போன்
றன்னுயிரென்னச் சார்பிலெவ்வுயிரு
நோக்கிப் பரம்ட ரனுவலரு முண்மை
யகங்கொளீஇப்பாசத் தடைவைராக்ய
முற்றுஞான வொண்மயமாகிப்
பவக்கடல் கடந்த பானுவாகு
மெங்களாரிய னிராம கிருஷ்ண
பரஹம்ஸன் பண்புபாராக்தெடுத்த
வுத்தமனுயு முயர்சிவபோக
வெள்ளத் தழுந்திய விதத்தகனுயும்
வேதாந்தத்தின் வியன்பொருடெரிப்பத்
தேசமெங்குந் தினகர னென்னச்
சஞ்சரிக்குந் தகைமையனுயும்
விளங்குமத்வைத வென்றிச் சிங்கமாம்
விவேகா நந்த விமலனை நடரப்
பெற்றன்றோனைப் பிறங்கு குருவாய்ப்
போற்றி வாழுப் புனிதமுத்துக்
குமாரசாமிக் குரிசில் காராள
னமிழ்தினு நயக்கு மருளிலா நாட்டமு
முத்த நகையு மூரிவிற் புருவமு
மிந்து வதனமு மிசைதரு மிடறும
வார்கிழித்தோங்கும் வனசக்கொங்கையு
மிறுமிறு மெனவொசி யிட்டிடை யதுவும
பொறும்பொறு மென்னப் புலம்புமாறு போன்
றலம்பு சிலம்பு மரம்பையிற் றொடையும்
பஞ்சின்மெல்லடியும் பருவமும்போதிம.
நடையும்பெற்று நயஞ்சொலு மாதர்க்
கலந்து வாழ்ந்து கருத்தொருமைப்படப்
புணர்ந்து புணர்ந்து போதுபோக்கிடி

னதுவேமுத்தி யாமெனச்சோறு
மதிநலமுடையீர் யற்றிதுகைக்கொண
டுய்வீரென்றென் றோதுநர் சிலரு
மருட்டேலக்குறி யாரணிந்தத
லடாதடாதென வறைகுநர் சிலருங்
குறிகுண மில்லாக் கடத்தன் றனக்குப்
பலகுணமெய்யெனப் பகருநர் சிலரு
மெங்களீசனிணையொன்றில்லா
னுங்களீச னேயுழந்திடுவ
னென்று தெய்வ மிகழ்ந்துகிரியுஞ்
சழக்கர் பலருஞ் சத்துவமேலிட்
டுய்தற் குறுதியுணரு மாறுஞ்
சமரச பாவனை சார்ந்தெங்கெங்கு
மென்மெல வளர்ந்து மேவிமாறு
மைக்கிய ஞான மற்றோ ரன்னா
னருமை தெரிந்தே யடங்குமாறும்
பற்றவா முற்றும் பாறி யொழிமார்
தன்னைமறந்து தலைவனை நினைந்து
பொருளொன்றிரண்டெனும் பொக்கமி னெறியை
யெத்தகையினரு மெளிதிற் றெருண்டிடை
யூறுகெடுத்தங் குய்ந்து போமாறுங்
குயிற்று மெனச்சில குணமுமோரா கூறச்
செந்தமிழ் மொழியிற் றெள்ளிய நடையி
லோர்ந்திடு மழகெலா மொருங்கு சேர்ந்திடவுந்
தத்துவப் பகுதி தன்னிடைக் குலவவுஞ்
சமரசஞான சந்திரிகையெனு
மரிய நூலை யடைவி னியற்றி
நற்குணக் கடலாய நாடிப் பொருளா
வெறுப்ப வளித்து மிளிரவா னொட்டின்
பஞ்ச தருக்களைப் பசுவைச் சிந்தா
மணியை மாரிகொண்மழையை வென்ற
கரதல மமைந்த கருணை வள்ளலாய்க்
கீதை யருளிய கிரீடி பாக
னய கண்ணனம்சமாய்த் துலங்கும்
பெருந்தகைப் புண்ணியன் பெரியன் **ராஜாசர்**
**சவலை ராமசாமி**யண்ணற்குச்
சம்பிரமத்துடன் சமர்ப்பித்தனனே.

---

ओं.

*Ekamêvadvitiyâm Brahma!*

# PREFACE.

But one word by way of apology to the public, in the *Lingua Franca*, of the modern civilized world for launching this booklet at this most opportune moment on the troubled waters of Indian Religious controversy

Short-sighted and narrow-minded fanatics are even to-day crying out at the top of their voice against all healthy and sane movements intended to make for national unity, catholicity, and harmony Ever and anon some of these benighted baby-souls blabber forth all sorts of strange nonsense in the name of Country, God, and Religion.

Would you describe all fantastic myths, you have at once a large following? Would you sermon on the heterogenous mass of absurd ceremonies and customs and you surely turn a pretty penny in no time. Would you lecture on all imaginable superstitions and provoking customs, and you by all means lead the masses at once by the nose

The other day, an intelligent friend of mine was relating to me some of his experiences of popular *kalakshepams*, and by all means, I spent a very pleasant half hour in his sweet society. He had been once of late ushered into the sanctimonious presence of a man of God, a Hindu missionary forsooth, who, Lord bless his soul! spoke most astounding things in his hearing The sprightly audience was in ecstacies over the man's reverential exposition of Godhead: "yet methought" my friend remarked "I was either with Satan or Satan's own, all the while I heard the Tamil oration It was one blasphemy all through, and a hideous caricature of the Hindu religious systems." The pandit would have it, that his God Shiva was by no means an advocate of monogamy; Vishnu was always at his heels to follow up his brilliant example, and the lotus-born Bramha would most certainly not brook being placed on a lower level than either As the father, so the son

Chandra was a noble *beau*; and perchance would be no mean ornament even at a modern fashionable nautch-party. Indra the

*pauranikar* went on to add was a gentleman to the inch. He alone of all the gods knew to perfection what it was to revel in the charms of a sweet maiden's swimming eyes! Leaving Indra alone for a moment, what would become of the whole world without a *Manmatha*, bodiless as he was? Heaven Itself would metamorphose at once into a Hell, and the gods would change into Heaven knows what! "What! of a verity" the Hindu minister of the Aryan Gospels would seem to have observed in a breathless climax "Radha Krishna tops the list of lady loving gods: none like the thief Krishna who would have nothing less of his numberless lady-loves than their native simplicity denuded of all artificial beauty and modesty to boot."

Well, that is Religion reader as we often find it obtaining in this blessed land of blessed pandits (there are *pandits* and *pandits*); and much worse was the state of things when the Sun of the Indian Theistic church rose on the horizon of Bengal more than a century ago. Many noble souls had relapsed into materialistic agnosticism but that sort of opium-eating would not do for a couple of months, would not for a moment hold water.

It may be that it is given to man "to fill the heavens with commerce" "to rift the hills, roll the waters, flash the lightnings, and weigh the Sun." What our great-great grand-fathers spoke of as elements, we now know to be compounds: but what further can we say, about them. A thousand years ago our Acharya thought of water as one of the panchabûtas: but the modern graduate in the fulness of his wisdom lectures on hydrogen and oxygen. But what is hydrogen? what oxygen? who can say? and in the words of a departed friend of mine there seems to be in fact in almost every one of the various branches of human knowledge an imperial edict 'thus far shalt thou go and no farther' thundered forth in solemn majesty.

> "Veil after Veil will lift but there must be
> Veil upon Veil behind."

In the beginning of the 19th Century, the school-going population in India was terribly dissatisfied with its surroundings and Christianity stepped in with the Bible.

By hundreds and thousands enlightened men for a time found their way to the bosom of Christ's church. Now came in, in its train the Bramo Samaj movement, and so long as it was conducted on perfectly

national lines, people flocked to the Bhrámo standard in countless numbers. And yet neither of these churches could get at the heart of nation. Once the novelty ceased, they ceased to be attractive to the masses at large. But the contact of India with Christianity and modern science proved most beneficial in a deeply national sense otherwise.

The advent of the spiritual luminary Christ, and the lesser stars of Rajah Ram Mohun Roy and Keshub Chander sen and the Theosophical Society brought in time into existence by the *Mahathmas* of old woke up the sleeping lion of India's forests and the Advaita sent up its thundering roar far into the stillness of the night reigning all around. Paramahamsa Ramakrishna was born ; and he embodied in his own person the virtues of both Rama and Krishna they say.

Madame Blavatsky having already united the East with the West in a spiritual sense, and paved the way for the deification of *Science* in India aud Europe, the upheaval did much to help young men of Bengal to stem the tide of moral materialism that had threatened to inundate and engulf the land with its train of refined superstitions. *Sârâda* came down on Earth in a human form in the person of a noble English lady, the pride and glory of both the East and the West : the inspired pioneer of Vedanta moved the earth from end to end and lo! the religious situation is brightening here, there, everywhere ! The crusade against all trash is begun in right earnest. Down, down with immorality, down, down with superstition and ignorance. Down with hypocrisy ! Down with shopkeeping in religion !

My sectarian friends stand stupified, astounded at what they deem to be utter blasphemy! Are the thunders of Heaven spent already they ask themselves. Their pucca stories are very fine religion for young India to imbibe into their Blood and Being and how dare any busy-body treat them with his supreme contempt ?

Mine is only a feeble attempt at true reform and ere long Heaven willing, I hope to have made some impression in the circle of my own friends and acquaintances. I am at all events pretty sure I shall not have appealed to posterity in vain, and that is no doubt some consolation for a thankless enterprise. The many-headed world views some of us go-a-head reformers as they put it, with very much suspicion : they can't conceive how their gods could get on without perfectly sectarian followers to plead for them as occasion arose ; their

usual paraphernalia of show and sham the chief attraction to the unlettered Hindu in the godhead, and above all, you dare not dissociate your Shiva or Vishnu or their happy train from the notion of the dancing-girl element in which it would appear all religion is happily centred for the masses at large.

Young India, young Madras! a very fine religious situation to be sure! Sink all differences; move out of narrow grooves, grow out of your surroundings and rise superior to in-born prejudices, and unite in one chorus for the homage and adoration of Satchitananda the ocean of existence, knowledge, and bliss. This perennial font of spiritual ambrosia is flowing hard by, and dive deep into it, and drink deep of it for thy glory here and hereafter.

The Adwaita knows no race, creed or color: it reigns in the land of its cradle, it reigns in the land of its adoption, with science and no-science, with good and bad philosophy, with the man and with the brute the Adwaita reigns supreme

It talks of Mahomet the Prophet as no less than the Prophet of Allah the supreme, of Jesus the Christ, as by all manner of means at once the son of Man and God, of divine Budha as the holy manifestation of God in human flesh, of Lord Krishna as the mystery of mysteries, no human language could delineate, no human tall-talk ever reach and no human mind dare approach with levity and the supreme *Shivam* as That by the understanding of which everything conceivable is understood, as That which could be reached by attaining unto that Peace which in the words of St. Paul passeth all understanding and as the *Tat Sat* of the Aryan primeval revelation in and through which alone, we live and move and have our very Being.

Comfortable little religions are now shaking to their very foundations at the onward march of Modern Science, and the religion *par excellence* of *Shankara* the greatest metaphysician ever born stands unshaken in all its glory and sublimity like the veritable *Himalayas* of Bharata Varsha 'Hail! Hail! Swami Vivekananda! Hail! Hail! Mrs. Besant! Oh! World! Behold the glorious sight of *Western monism* shaking hands in all the sincerity of sincere friendship with the *Adwaita-Vâda* of India's intellectual giants.

I must express my deep sense of thankfulness to Messrs. Tandalam Balasundra Mudaliyar, K. Kuppusawmy Mudaliyar, B.A., K. S.

Gopalachariar, and W. Mahadeva Mudaliyar, for their kind and friendly services in revising the proof sheets for me. This edition has been hurried through the press at the instance of my friends and as a matter of course I doubt not but that many a typographic error has crept in here and there in my maiden work, but I sincerely hope my enlightened friends would condone my faults and failings, whatever they be, with a generosity worthy of their liberal education, a large-heartedness worthy of their noble traditions, now quickened into new life and activity, by a study of Positive Science, Comparative religion and Transcendental Philosophy.

Om Shanti Shanti Shanti !!

VICHUR MUTUCUMARASWAMY, B.A.,
*Joint Secretary,*
*The Madras Hindu Theistic Mission.*

---

## அவையடக்கம்.

---

கற்றோர் பிறர்குற்றங் கண்டிலரா மென்றுமே
மற்றோ ருரைமதிக்க மாட்டோமாற்-சற்றோர்ந்தே
ஓதிமத்திற் கொள்வீ ருல்கீரிந் நூறன்னைப்
பாதி மதிமிலைந்தாற் பாரத்து.

### சுகப்பிரம்மஸ்துதி.

"பிறந்தபொழு தேதுறந்து பிறைக்குழவி
போனடிப்பப் பின்போய்த்தொன் னூ
லறைந்தபுகழ் வியாதமுனி யாதரத்தான்
மதலா யென்றழைப்பச் செவ்வாய்.
திறந்துநறை பொழியுமலர்ச செழுந்தருவு
மேனென்ன வுயிர்கள்யாவும்;
நிறைந்தொளிருஞ் சுகமுனிவனிரை யிதழ்த்தா
மரைமலர்த்தா ணிணைதல் செய்வாம்.

---

ௐ.

ஓம் சச்சிதேகம்பிரஹ்ம!

ஓம் பரப்ரம்ஹணே நம:

# ஸமரஸ ஞான சந்திரிகை.

## பரசிவ வணக்கம்.

உலகம் யாவு மொளிர்தரத் தன்னுழை
யிலகு கான விடையென மென்னவே
நிலவ வைத்த நிராமய னருமெம்
மலகி லாச்சிவ மன்பென் றழைத்துமே.

## சற்குரு வணக்கம்.

வங்காள தேயத்தின் வந்து தோன்றி
வட்காராய் நின்றாரும் வணங்கி வெட்கக்
கங்காளந் தோண்மேலே காதலித்த
கண்ணுதலை யெங்குமாய்க் கண்டே யெம்மை
யிங்காளு மெய்ஞ்ஞான வேந்தறன்னை
யெங்கெங்கு முலவிவரு மேக மாய
மங்காத செழுஞ்சுடரை விவேகா னந்த
மன்னவனை முன்னவனை வழுத்தல் செய்வாம்.

## நூல்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவலகால வகையினானே."
"தொன்மையவாமெனு மெவையுநன்றாகா
இன்றுதோன்றியநூலெனுமெவையுந்தீதாகா."

"தொன்று தோன்றிய யாவவை தூயன
வின்று தோன்றிய யாவவை தீயன
வென்றி யம்புமி யல்புண ராமக
னன்றி மூதறி வாள ரறைவரோ."

என்பனவாதி திராவிடத் தொடர்களை நல்லறிவோடு மாராய்ந்த நல்லோர், தொன்று தொட்டு வந்துள்ளனவேனும், நந்தேசத்தின் ஐக்கியத்திற்கு முற்றும் விருத்தமும், கேவலம் அஸப்பியமும், ரஸாபாஸமுமான சிறுவ்ருமிகமும் சிறுகொள்கைகளைத் தழுவாது கைவிடக் கடமைப்பட்டுள்ளா ரென்பது கல்வியறிவுடையோர் யாவர்க்கும் திணணந்திற்றுணியத் தக்கதே.

சோமசூரியாதிக் கிரஹங்கள் இப்பூமியைச்சுற்றிச் சுழலாநின்றன என்ற பிராசீன கொள்கை இப்போது அடியோடு மாண்டுகிடக்கும் காக்ஷியைக் காணுதாருமுண்டோ!

சந்திராதித்யாகளை ராகு கேதுக்கள் சமயமறிந்து அவ்வக்காலங்களில் விழுங்கி யுமிழ்ந்து பழிவாங்காநிற்குமெனும, புராதன சம்பிரதாயம் இக்கலிகாலத்தில் அறிஞர் ஸதஸில் பயன்படாதொழிந்த தறியாதார் யாவரோவறியேம்.

ருஷி பத்நியை, அந்நியப் பார்ப்பனன் ஒருவன் காமாதுரனாய்த் தீண்ட, அதுகண்டு வெகுண்டெழுந்த ருஷிபுத்ரனை பழைமையை யனுசரித்துச்சீற்றங் கொள்ளாது சமாதானப்படுத்த முயன்ற ருஷிபுங்கவன் சரிதை இற்றைஞான்று யாவர்க்குப் பிரயோசனம் செயற்பால தென்பதை மெய்யறிவுடையோர் கூர்ந்து யோசிப்பாராக!

அருந்ததியைப்போல் உறுதியாய்ச் சத்தியம் பிறழாமல் வாத்திக்கவேண்டுமென்னும் விவாக லக்ஷணமாகிய மேதக்க கொள்கையை யாசிரயித்துத் தான் முதலில் விவாகம் செய்துகொண்ட கணவனை விசுவசித்துப் பதிவிரதையாய்க் காலங்கழித்தல் உத்தமமென்று கொணடொழுகும் உத்தமஸ்திரீ ரத்தினத்தைப் புகழ்ந்தெழுந்த உத்தம சாஸ்திர விதிவிலக்குகள் கைம்பெண்களில் சாமான்ய பக்குவிகளைக் கனவிலும் சாராவெனச் சித்தாந்தப்படுத்திய பண்டிட் ஈசுவரசந்திர வித்யாஸாகர், பாபுகேசவ சந்திரசேனா, பாபுபிரதாபசந்திர முஜும்தார், ஜட்ஜி ரானடே, முதலியோரான கிரந்தாராய்ச்சி, உண்மையாராய்ச்சி, ஈசுவரஞான வாராய்ச்சியுடைய வித்வமணிகளினது கூற்றன்றோ 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விவேகிகள் யாவராலும் தழுவப்பட்டு நின்றது? "அஹிம்ஸாப்பரமோதர்ம:" என முறையிடும் சாஸ்திர எச்சரிக்கையை யவலம்பியாது கைம்பெண்களை அவர்கள் தாங்கமுடியாத வைதவ்யாசாரத்தை அனுஷ்டிக்கும்படி பலவந்தப்படுத்துவது மதிமோசத்தையும் தீராத் துயரத்தையும் விளைக்கு மென்பது நிராக்ஷேபம்.

சஹகமனம் வேத சம்மதம், என்று கொண்டு நீண்டகாலமாய் ஹிந்துக்கள் தங்கள் தாய், தமக்கை, புத்திரி, பௌத்திரிமார்களை ஜடசம்பந்த மொழிந்த பதியினது சவத்தோடு உயிருடன் கொளுத்தி மகிழ்ந்த விஷயம், லோகப் பிரசித்தம்.

சூர்யனைத் தம் பெரிய ராஜ்யத்து அஸ்தமிக்காது நடக்க ஆஞ்ஞாபிக்கும் ஆற்றலுடையராய்ப் பிரகாசித்து லோக மாதாவாய் விளங்கிய சக்ரேஸ்வரி விக்டோரியா சக்ரவர்த்தினிப் பெருமாட்டியாரின் ஆணையால் இக்கொடு வழக்கம் பட்டுப் பூண்டற்றொழிந்ததூஉம் நம்மூதாதைகளிழைத்த நல்வினையின் பயனேபோலும். எனவே, பழையனயாவும் சத்தியம், புதியனயாவும அசம்பாவிதமென்று நம்மவர் பலர் கொஞ்சி மகிழும் கூற்றெல்லாம் வெறுங் கூற்றேயாமென் றொதுக்கப்பட்டதுணாக!

சாஸ்திரங்களின் மூலை முடுக்குகளைத் தாக்க சுத்தமாயும் தத்துவ ரீதியாயு மறியுமாற்ற லிழந்து, இஷ்டம்போல் சின்னபின்னப்படுத்தி மனம்போன தாத்பரியங்கள் அவை கொடுப்பதாய் மனப்பாலருந்திப் போலிப்பண்டிதர் சிலர் அப்போதைக்கப்போது காலதேச வர்த்தமானங்களையும் கவனியாது கஸ்மல ஆபாஸங்களை வைக்கும் அவைகள் பிரமாணமாமென்று காண்பிப்பாராக:—பழைய ஆசாரங்கள் அநார்யம் அநாகரீகமாயினுமாகுக:—அவையிற்றை நிராகரித் தொதுக்குவதால் எங்கள் குலம் க்ஷீணமடைந் தொழியுமெனப் புலம்பினர் பல்லோர். மாரியம்மையைக் களிப்பிப்பான் வேப்பஞ்சீலை யுடுப்பதேயாயினும், குடும்ப வழக்குங்களை யாதரவு செய்வான் குடக்கல்யாணம் செய்வதேயாயினும், நம் பூர்வீகர்களிற் சில்லோர் கையாண்ட ஆசாரத்தைப் பின்பற்றிப் பூசாரி பிரசாதிக்கும் பஸ்மத்தைப் பேய்கொண்டதாகக் கண்ட தம்பாலிகைகள் கொள்வதேயாயினும், பசுபலியிட்டுக் காளியைச் சிறப்பிக்கச் செய்வதேயாயினும், சித்திரத்தும் எழுதொணா வனப்பு வாய்ந்த சிற்றிடைச் சிறுமியை நன்மை தீமையறியா முற்றிளம் பருவத்தே யாண்டும் யெவராலும் எட்டுணையும் தீட்டவொண்ணு வவலக்ஷணம செறிந்தகழிசிறைக்கு மணவினை முடிப்பதேயாயினும், இன்னும் இவைபோன்ற ஹேய கர்மங்கள் எவைகளைச் செய்வதேயாயினும், என்செய்வேம்.—உலகத்தோடொத்து வாழ்வான் கருதி அத்தை, பாட்டி, அப்பாத்தை, தலைவி, பேரத்தி யிவர்கள் சொல்லைத்தட்டி நடக்கும் ஆற்றலில்லேம் எனப்புலம்பாநிற்பர், ஆங்கில பாஷா ஞானப் பயிற்சியுடையாருள்ளும் பலர். உலகம் அறிவுடையோர் மாட்டு என்ற வுண்மையைக் கனவினு முணர்ந்தன ரல்லர்போலும் இவ்விவேகிகள். பிராசீன சாஸ்திரங்கள் யாவுமே சத்தியமெனத் தழுவிய நம்மவர் பலர், அக்பர் சக்ரவர்த்தியின் தாட்சண்யத்திடுபட்டு அக்காலத்தே சிலர் செய்து வெளிப்படுத்திய அல்லா உபநிஷத்தை அநாதரவு செய்தலேனோ?

இத்தகைய அறிவாளிகளாய்ப் பிரகாசிக்கும் நம்மவர்களிற் பெரும்பாலார் ஆசாரானுட்டானங்களில் ஒருவரிலொருவர் எத்துணை மாறுபட்டவர்களாய்க் காணப்படினும், சமயம் வாய்த்துழித் தங்கடங்கள் மதசம்பந்தமான சண்டைச் சச்சரவுகளிற் றலையிட்டுக்கொண்டு ஏக வசனப் பிரயோகத்திலிறங்கி வாய்க்கு வந்தபடி பரஸ்பரம் காணகரேமொழிப் பிரயோகம் செய்து ஒருவரையொருவர் வைது சந்தோஷிப்பர். வேதத்தைத் தூஷிப்பர். அதைப் பசுநூல், மோகநூல், மயக்கநூல், அஞ்ஞானநூலென்று கோஷிப்பர். சிவனை நிந்திப்பர். அவரைச் சூத்திர தேவதை, சுடுகாட்டு தேவதையென்பர். ஹரியை நிந்திப்பர். அவரை க்ஷுத்திரதேவதை யென்பர். பிறந்திறந்துழலும் பசுவே யென்பர். சைவதிராவிட ஸூக்திகள் சூத்திர பரிக்கிரகம் என்பர். வைணவ ஸ்ரீ ஸூக்திகள் பசுமலம் மலிந்துள்ளன வென்பர். சாதுக்களை யேசுவர். குளிக்கப்போயச் சேற்றைப் பூசிக்கொள்வர்.. எதிர்ப்பட்டார் எவர்க்கும் பூசுவர். சமயம் சமயம் என்று வாயவிட்டரற்றுவர். சமயங்களெவையும் சமயாதீதப் பழம்பெரும்பொருளை அறியாதொழிந்தனவென்ப தறியார்போலும்.

"சமயமே பரமெனும் சமர்த்தராய்ச
சமயசாத்திரங் காட்டுரு சழக்கர்காள்!
சமயமென்னுரு சதுதாரதத முணர்கிலீர்
சமயமென்பது தன்னை யறிதலே."

என்ற மேலோர ஆணையை உலகம் ஆழ்ந்தறிந்திடுமாக.

இவருக்கென்னதெரியும் அவருக்கென்ன விளங்கும். இவரென்ன B. A. அவரென்ன M. A. இவரோ நன்னூல் வல்லார். யாமேயன்றோ சாரதாபீடம். தொல்காப்பிய மறியாரக்குத தொல்லையொழியுமோ. இலக்கிய முணரான் மோசம் போவதன்றி மோக்ஷம் போவதுண்டோவெனப் பொங்கி வழிந்து பெருங்குரற் பாய்ச்சிப் பிரலாபித்துக் கிடக்கும் ஆணவ சம்பந்திகட்கு அம்மம்ம! அறிவுசுடர்கொளுத்தி ஆணவத்தைச் சுட்டொழிக்க யாவராலாகும்.

தொண்டைநாட்டின் உயர்குல வேளாளர் மரபு விளங்கப் பரம்பரைச் செல்வமமைந்த நற்குடியிற்றோன்றி, "மகன்றந்தைக்காற்று முதவி யிவன்றந்தை - யென்னோற்றான் கொல்லெனுஞ்சொல்" என்ற குறளுக்கிலக்கியமாய் நின்று தமிழைத் தழுவித்தழுவி, இன்பமறமல் தந்தே பெற்று, அறம் பழுத்து நிறம்பழுத்துத் சிவம்பழுத்து விளங்கி தமியேற்குத் தவத்தைக்கூட்டிப்பவத்தை யோட்டி, சிவத்தைக்காட்டிச் சுகத்தையூட்டி யுபகரித்த பண்டிதசிரோமணி, எம்பெருந்தகைப் புண்யமூர்த்தம், ஸ்ரீலஸ்ரீ தண்டலம் பாலசுந்தர முதலியாரவர்கள், சமயதத்துவஞானத்தைச் சமயப்பொறுமை வளர்ப்பான் கருதி உலகிற்கு வழங்கிய போழ்தத்துச் சமயோசிதமாகக் கூறியாங்கு, சம

யம் - என்ற சொல், காலம், அவசரம் எனப் பொருள்படுமாக; ஒருவன் நாத்திகனுயிருந்த தொருசமயம், ஆத்திகனுய் நின்றதொருசமயம், சொல்லளவிலாத்திகம் பேசியதொருசமயம், உள்ளபடியே ஈசனைப் போற்றியேத்தியதொரு சமயம், உலகாயதனுயொழிந்த தொருசமயம், பௌத்தனு யொழுகியதொரு சமயம், வைணவனுய்ப் பிறந்ததொருசமயம், சைவனுகிப் பரனை யாசிரயித்த தொருசமயம் எனப் பலசமயங்கள் ஏற்படல் இயல்பேயாம்.

சமயப்பொறுமை யற்றோர் பலரால் கர்ணபரம்பரையாய் வழங்கப்பட்டு வரும் சூத்திரனொருவன் தவம்செய்யமுயன்று, சிரம் துணிக்கப்பட்டுச்சிவலோகம் சிரமமடையாது சேரப்பட்ட கதையையும், காலவரையறை யேற்படாத இறந்தகாலம் ஒன்றனில், வேதாத்தியயன சிரவணம் செய்யத்துணிந்த சூத்திரனது செவிக்கண் ஈயத்தையுருக்கிவிடு, வேதம் சொல்லத் துணிந்த சூத்திரனது நாவை யாங்கே கொய்தொழி, மந்திரத்தியானம் செய்வான் றுணிந்த ஸ்வதந்திர ஹீனனும் நாலாம் வருணத்தனது ஹ்ருதயத்தைப் பிளந்தொழி'' என்பனவாதி சத்காமங்களை விதித்ததாகப் பேசப்படும் சத்சாஸ்திரங்களையும் பிரமாணமாகக்கொண்டு, எங்கள் மதமே பிராசீன மங்கல மார்க்கம், ஏனைய மதங்கள் நவீன வமங்கல மார்க்கங்களே யெனக் கூப்பாடிட்டே வாதிட்டும், யாங்களின்னின்ன தெய்வங்களின் பரத்துவத்தை நாட்டிக் காட்ட வல்லேமெனச் சாதித்தும், யாங்கள்தாமே மெய்ஞ்ஞானமடைய யோக்யராவோம், ஏனையோர் ஈஸ்வரானுக்கிரஹத்தை யடைய அர்ஹராதல், மலடிமகன் கந்தர்ப்ப நகரையாண்டவழி, கிளிஞ்சல் வெள்ளிவழங்கியவா றுமெனப் பிரசங்கித்துச் சாமான்ய பாமரரை மயக்கி வருதலைக் கண்டும் கேட்டும் மனமடிவெய்தி மனம் பொறாது திருவருள் கூட்டத் திருவருளை முன்னிட்டு யிச்சிறு நூலைப் பரப்பிரயோசனார்த்தமாயெழுதி ஹம்சபட்சியினது குணம்வாய்ந்த அன்பர்களுக்கு விநியோகித்துச் சந்தோஷிக்கத் துணிந்தே வெளிப்போந்தேம்.

"எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண் - இப்பிறவி தப்பினல் எப்பிறவிவாய்க்குமோ யாது வருமோ வறிகிலேன்'' எனவன்றோ—தீந்தமிழ் உபநிடதம் திருவாய்மலர்ந்தருளிய ஞானத் திருவாளா, பிறவிகள் பலவற்றுள்ளும் மானிடப்பிறவியே பசுக்களுக்கு இன்றியமையாதாயும், அதிசிலாக்கியமானதாயு முள்ளதெனெ, உய்யுநெறிநோக்கி, உறுதிவழிதேறி, அறுதிமொழிகூறி, உண்மை உபதேசம் உலகினுக்கு வழங்கி யின்புற்று விஸ்ராந்தியடைந்தார். பெரும்பாலாரது அறிவு விளக்கம் காரணமாகவே, மக்கள், மனுக்களென்றழைக்கப் பெற்றெனரென்றும் வடமொழியின் தாது சூசிப்பிக்குமுண்மை சாஸ்திர வாராய்ச்சியுடையோர் கூறுகிற்பர். அவ்வறிவைமென்மேலும் பரிணமிப்படையச் செய்தற்குக் கல்வியே இன்றியமையாச் சாதனமாகுமன்றே?

"கற்க கசடற" எனக் கட்டளையிட்ட குறளாசிரியர் அநந்தரம் "கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக" என்றுபதேசித்த உண்மையே மீண்டு முக்கியமான சான்றாகுமென்ப.

"கற்க"—வென்றிருபாலாரையும் விளித்துக் கூறினாராக—நஞ்சிறுமியர் கல்விகற்கப் புகுதலடாதென்ப தவர்கருத்தன்று. நம்பெண் பெண்டாட்டிகள் வித்யாப்பியாசம் செய்வதால் பல துராசாரங்களை மேற்கொண்டவர்களாய் முடிந்து தூயவழியொறுத்துத் தீயவழியணுகி யவலமுற்றொழிவரென்ற பிரசங்கம் பிராசீனமன்று. கணக்கிடலருமையாய்க்கிடந்த அநந்தம் அசாஸ்திர, அநுசித, அயுக்த, அநாகரீக துராசாரங்களேயே தங்கடங்கள் மதக்கோட்பாடுகளின் முக்கியாம்ஸஙகளெனதெருட்டப்பட்டு மயங்கிக்கிடக்கும் பல பேதைமாக்களினது தற்காலததுச் செல்வக் கூச்சலே நம்பெண்மணிகளினது மனோவிசாலத்திற்கும், ஆதரவுமலாபத்திற்கும், அகத்தழகிற்கும் பெருநமனாய் முடிந்தது கண்டீர். பரபுருஷனைக் கண்காணுதொழியுமெனக் கருதி, அகமுடையாள் கண்ணையொழித்த அறிவிலிதானே பெண் கல்வியை நிராதரவு செய்யாநிற்பனென்க. கல்வியறிவற்றவளுடன் ஸம்ஸர்க்கம் செய்யப்பெறல், உயிர் நீங்கிய சவத்தைக் கலத்தலை யொக்குமென்பர் அறிவிற்சிறந்தார்.

> "நல்லறிவேயணி நன்னுதலாரக்கம்
> தில்லவரோடு மியைந்து கலத்தல்
> புல்லுயிர்நீங்கு புழுக்கொள் சவத்தைக்
> கல்லுருவைப்புணர் காமநிகர்த்தே"

எனவெடுத்தோதிய மேதாவியின் கருத்தைப் படிப்பாளிகள் கூர்ந்து யோசிக்கக்கடவர்.

"அன்னைதயையு மடியாள் பணியுமலர்ப், பொன்னினழகும்புவிப்பொறையும்—வன்னவுடல், வேசிதுயிலும் விறன்மந்திரிமதியும் - பேசிலிவையுடையாள் பெண்" என்று விளக்கிய ஆன்றோர் கூற்றும் எமதபிப் பிராயத்தை முற்றும் ஊர்ஜ்ஜிதப்படுத்துமென்க. படிப்பறியாதவளே பாதிவ்ரத்யத்தை வளர்த்துக்காக்கும் ஆற்றலுள்ளவளென்ற சித்தாந்தம் முன்பின்னறியா முழுமகனே சிவாநுபவச் செல்வனாய் நிற்பனென்றபடி. நிற்க!—

எண்ணிறந்த கலைகளில் ஒன்றையேனும ஒருவன் பூர்த்தியாயுணரப்பெறவொரு புருஷ ஆயுசும் போதாதாகையால் (கல்விகரையில—கற்பவர்நாட்சில) "கற்பவை கற்ற பின் நிற்கவதற்குததக" வென்றார் நாயனார். கற்பவையாவை தானேயோவென்ற விசாரம் எழுந்தவிடத்து "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ னற்றாடொழாஅரெனின்" என உண்மைகண்டெழுந்த திருக்குறளே ஏற்றவிடையிறுத்து உபகரித்ததென்ப.

"உடம்பினைப்பெற்றபயனாவதெல்லாம்
உடம்பினிலுத்தமனைக்காண்."

எனப்போந்த மூதாட்டியினமுதவுரையுமன்றே, பண்டிதர் பாமரர் பலர்க்கும் ஜநநமரண சம்சாரமான அநர்த்த பரம்பரைக்கு ஹேதுவாகும் அகம்பாவ மொழிந்து அருள்வடிவமெய்திச் சுகானந்தப்பெருவாரியிற்றோய்வான் அழியாப்பெருஞ்சாதனமாய் நின்றதுகண்டீர்

பரனடிக்கன்பிலாதார் அடைந்துள்ள ஊனக்கண்ணும் புண்ணேயென்பார் "கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லாதவர்" என்று கூறிப்போந்தார் வள்ளுவர்.

ஞானத்தை யபேக்ஷியாத விஷயத்துத் தாமதகுணமேலீட்டால் ஜனித்தொழியும் விலங்காதிகட்கும் மநுப்பிரஜாபதியினது வம்சத்தினர்க்கும் தாரதம்மியம் ஒன்றும் காணுவ தருமையருமை. மிருகாதிகளை மிருகத்தன்மையில் வென்றியங்கும் மனுஷ்யரூப மிருகங்களது செயல், எண்ணமுதலிய பிரவர்த்திகள்யாவுமே **உண்பதுமுறங்குவது** மென்னும் சொற்றொடரால் கணிக்கப்பெறுவதுண்மையாகையான், புருடர் அடையத்தக்கனவும், அடைய முயற்சிக்கவேண்டியனவுமாம் புருஷார்த்தங்கள் நான்கனுள் முக்கியமானதூஉம் முடிவானதூஉம் எனக்கோடற்பாலது, **வீடென்றே** (வீடு—விடுதலை) வேதாதிகள் விதந்தோதிடும்.

"ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருளெஞ்ஞான்றும், காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு, பட்டதேயின்பம் பரனை நினைந்திம் மூன்றும், விட்டதே பேரின்பவீடு."

என்றேற்கெனவே யெடுத்தாண்ட வான்றோர் (தர்மார்த்த காமமோக்ஷம்) எனப் பேசப்பெறும் புருஷார்த்தங்களினது பகுதிகளைப் பரப்பிரயோசனார்த்தமாகப் பரக்கப் பிரகாசப்படுத்தி யுள்ளதை யுலகம் உணர்ந்திடுமாக.

ஸ்வர்க்காதிபோக போக்யங்களை யடைவான் ஏராளமாய்க் காமிய கர்மங்களை யநுஷ்டித்து பல அரும் பெரும்பதவிக ளடைந்துக் களிப்பெய்தியிறுமாந்துகிடக்கும் இந்திராதிதேவர்களும் இறுதியில் முமுக்ஷுத்துவத்தை யுள்ளபடியே யாசிரயிப்பப் பூவுலகில் நரர்களாய்த் தோன்றித் தவங்கிடந்தே கதியடைவரென்பதொரு தலை.

சச்சிதானந்தப் பெருவாழ் வடைவான், பிரபஞ்சத் தோற்றங்களை அநார்த ஜட துக்காகாரமெனக் கோடற்கு இடைவிடாத நித்திய ஞானத்தை யவ்வப்போது ஆன்மகோடிகட் கூட்டி நித்தியஞானத்தைக் கூட்டும் இவ்வண்டத்துத் துக்காநுபவங்களே ஏற்ற தென்றபடி.

" புவனியிற்போய்ப்பிறவாமையினாளும்
போக்குகின்றோ மவமேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கிறவாறென்றுநோக்கித்
திருப்பெருந் துறையுறைவாய்திருமாலா
மவன்விருப்பெய்தவு மலரவனுசைப்
படவுநின்னலர்ந்தமெய்க்கருணையுநீயு
மவனியிற்புகுந்தெமையாட்கொள்ளவல்லா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே."

என்று கேட்கப்படும் ஸ்ரீ மணிவாசகப் பெருந்தகையாரது அநுபவ உபதேசத்தானும் இவ்வுண்மை இனிது போதருமென்க.

"புகைவண்டி யூர்ந்துலகை நொடிக்குள்ளே சுற்றுவோம் புகைக் கூண்டேறிக் ககனமிசைப் பறவையெனப் பறப்போமோர் புகைக்கலத்தாற் கடல கடப்போம், வகையாய் மின்னஞ்சலினு லெத்திசையுள்ளோரோடும் வார்த்தை சொல்வோம், மிகையானபுதுமை செயவோம் மரணமதை விலக்கறியோம் வியப் ீதன்றோ" வென்றெடுத்தாண்ட பண்டிதசிரோரத்நத்தினது ஹிருதயத்தை யீண்டைச் சிந்தித்துக் கிருதார்த்தாகளாவோமாக!

அதா அன்றியும் பிரமானுபூதிச் செல்வராயும் எமது ஞானவிக்ரஹமாயும் வீரசைவ சிரோரத்னமாயும் விளங்கிய எம்மையாட்கொண்ட அடிகள் அருளிச்செய்த திராவிட மந்திரத்தையும் யாம் சமயம் வாய்த்துழி யெடுத்தாள்வதும் நியதியேயாம்.

"பாலனென பருவம்போம் பன்னுகுமாரப் பருவம்போம், கோலமான தருணம்போம் கோலையூன்றிக் குனிந்தெழுந்து, காலன் மாயக்க வினைவர்களுங் கல்லென்றழுது பேர்மாற்றி, ஏலப்பிணமென் றொருபெயரிட் டிடுகாட்டிடுத லொருதலையே '

என்றோதிய ஞானவள்ளல் மீண்டும் ஸ்வாக்காதி போகங்களும் இவ் வண்டத்துப் போகத்தைப்போலவே ஒழியக்கிடப்பன வென்றருளிய திவ்யாவசரத்தையும் மனக்கணகொண்டு காண்போமாக.

"பஞ்சபூதமழிந்துபோம் பானுத்திங்க ளுடுக்கள்போம், வஞ்சவசுரர் மடிந்திடுவர் மாகர்பதமபோம் வல்லரக்கர், துஞ்சுவார்கள் போகிபதந் துஞ்சும்பிரமன் பதந்தானும், துஞ்துந் திருமால் பதந்துஞ்சுந் துஞ்சாதொன்றே பரம பதம்"

எனவே மோட்சத்தை யபேட்சித்து ஜென்மசாபல்யமடைவான் பெருஞ் சாதனமாகச் சர்வேஸ்வரன் பிரசாதித்த இவ்வரும் பெரும்பிறவியை யவ்வீசுவரார்ப்பணம் செய்தலே அமைவுடைத்தென்று துணிந்தாம்.

செய்வோபாசனைக் கருக ஞகாதொழிந்த ஒரு பேதை இழிந்த மிருகத்தையே தன்னினு முயர்ந்த சேதனபதார்த்தமாமென்று அறைகூவிச் சொல்லும் நிலைமையில் நின்றான் என்பதிற் றடையுண்டு கொலோ?

நன்மை தீமையறியும் பகுத்தறிவின்றித் தற்செயலாய் நேரிட்டதையுந்தி உடலைவளர்த்து அறிவைவளர்க்குமாற்றமொழிந்து குறிப்பொன்று மின்றியுலாவி உழன்று மாண்டொழியும் அல்பவிலங்கிற்கும், பகுத்தறிவடைந்தும் அடையாஞய்க் கண்டதே காட்சி கொண்டதேகோலம் என்று வாய்ப்பறையடித்து ஆணவப்படிகுழிப்படிந்து வாணுளை வாளாவொழித்துக் காலங்கழிக்கும் கிரியாகிமாஞம் அறிவிலிக்கும்யாது வித்யாசமுண்டு? தெய்வபக்தி மருந்துக்கும் கிடையாதொழிந்த யாதொரு சாமான்ய பேதையினது பிரவர்த்தகமுண்டோ அது மாலுமியையிழந்த மரக்கலத்தின் ஓட்டமே போலும் என்பர் மேலோர் என்றாலும், மனுஷ்யவர்க்கத்தின் சமூகத்திற் கற்பித்தவாறே ராம! ராம! நந்த! நந்த! அம்ப! அம்ப! எனக்கம் நீரமாய்க் கூஉய்ப்பூஜையைக் கண்டபோழ்தத்துந் தீர்த்தந்தீர்த்தென்று நந்நும் கிள்ளையைப் பேதைமையில் வென்று விளங்குநர் பந்தரக்னங்களைப் பார்க்கிலும், ஜடமே நித்தியம், அறிவே அநித்தியம், என்று பிரசங்கித்தும், பரஸ்திரீகமனமே கண்கண்டசுகம், ஏகபத்னிவிரதமே முழுமூடமென்று சாட்டியும் வெளிவரும் ஜடஞானிகளென்ன, உலகாயதரென்ன - இன்னோர்கள் யாவருமே எண்ணாயிரமடங்கு மேலான விவேகிகள் என்பது குன்றின்மேலிட்ட விளக்கெனவிளங்கும். ஜடஞானி சமீபித்த ஓர்காலவரையறையிற் கிருதார்த்தனுகக்கூடும். உலகாயதன் காலனையழைக்கும் கடும்பிணிவந்துற்றபோது காலகாலனைத் தேடியலைந்தலக்கண்படுவதும் அநுபவசித்தம். போலிபக்தன் போலியொழியப்பெற்று மெய்வாழ்வடைய எத்தனையெத்தனை மன்வந்தரம் கடக்கவேண்டுமோ பரனே யறிகிற்பான். பாகாதிதேசம்வரைபுமாறொருவன் பஸ்மாலங்காரம் செய்யப்பெற்றதாலென்? உடம்பெல்லாங் கண்மணியணியப்பெற்றதாலென்? ஆண்டாண்டுதோறும் காவிவஸ்திரங்களையே யுடுத்திக்காட்டியதாலென்? யாண்டும் ஜபமாலை யேந்திய கையராய் ஏகாக்ஷர பஞ்சாக்ஷர, ஷடாக்ஷர, அஷ்டாக்ஷராதி மந்திராநுசந்தானம் செய்யப்பெற்றதாலுமென்? உள்ளபடியே உள்ளன்பிலாத மூர்க்கர்க்கோ கிட்டும் கைலைவாழ்வு, பரமபதம், முக்திப்பெரும்பேறு? குங்குமம் சுமந்த விலங்கறியுங் கொல்லோ குங்கும வாசனை? வேசையையும்அவள் தாசியையும் பட்டியாடெனக் கட்டியழுபவர்சைவரென்றும் வைணவரென்றும் முந்துவது கண்ணனுக்கும் முக்கண்ணனுக்கும் சம்மதமாகுமோ கூறுவீருலகீர். இவா கொடுமையிருந்தவாறென்னே, என்னே. சத்காலக்ஷேபம் செய்யத் துணிந்தவா அசத்விஷய வியாபாரங்களில் மூழ்கிக்கி—ந்துச் சாமபியொழிவதைக்கண்டு தேசாபிமானிகள் யாவருமே துக்கிக்கிறார்களென்க. படிப்பது திருவாசகம் இடிப்பது சிவாலயமா? பேசுவது பதி

நாமம் பாடுவது காமக் கிழத்திநாமமா? சொல்வது சிவகதை அநுஷ்டிப்பது வியபசாரமா? நடிப்பது அன்பரைப்போல் குடிப்பது சாருயமா? இருப்பது பாகவத சிரோமணியென - கிடப்பது காலாந்தகபாதகிகளுடனென்னவா? தொடுப்பது ஏகேஸ்வரவாதம்-முடிப்பது முழுமூடா சம்வாதமா? செய்வது வேதாந்த சிரவணம், நைவது அந்யனது உத்தம பத்னியை யுன்னியோ?

ஜடஞானி சித்தன்றிச் சட்மில்லை, புருஷனன்றிப் பிரகிருதியில்லை, சிவனன்றிச் சக்தியில்லை, பிரமமன்றி மாயையில்லை, அறிவையன்றிப் பிரபஞ்சத் தோற்றமில்லை, 'எனையன்றி உலகமில்லை—என்ற ஞானத்தை முறைப்படி செய்த சத்சாஸ்திர விசாரணையின் பலனாக அதிசீக்கிர முணர்வானென்பது *நிராக்ஷேபம். இவ்விஷயங் கண்டவர் கேட்டவர் யாவருமே இவர் சாரதாம் ஸமாவரோ எனச் சங்கிக்கும்வண்ணம் விளங்கி, பூர்வாசிரம பூர்வஜன்மாந்திர சுகிர்தங்கள் நல்வினையைக்கூட்டச் சிவஞானிக ளநுகிரகத்தைப்பெற்றுச் சிவ ராஜயோகத்தமர்ந்த வழி சிவாநுபூதிச் செல்வராய் விளங்கி உலகெங்கும் சிவோத்கர்ஷமான பிரசங்கமாரி பொழிந்து செழிக்கச்செய்து தீவிரபக்குவிகட்குச் சிவாத்துவிதோபதேசம்செய்யாநின்று பிரம்ஹக்கியானசங்கத்துக் கதிர் விளக்கென்ன வொளிரும் லேடி ஆனிபெசன்ட் அம்மையினது திவ்யசரித்திர சிரவணத்தா லினிதுபோதருமென்க.

முழுமுதற் கடவுளின் லீலாவிபூதியாகும் அண்டாண்டங்களைத்தரிசித்து, தரிசித்தவழியே நல்லறிவு கைகூட க்ஷண நேரமேனும் நஞ்சரண்யனது நித்திய விபூதியைச் சிந்திந்து விஸ்ராந்தியடைந்துச் சுகித்தல்—சாமான்யதவமிழைத்தோர்க்கும் சிற்சிலசமயம் (மகத்தான துக்கம் நேர்ந்தபோதும், மகத்தான சந்தோஷம்பூத்தபோதும்) சாத்தியமாகு மென்றே அறிஞர் கூறுகிற்பர் கண்டீர்.

ஸ்ருஷ்டியில் அணுவும் ஹாஸ்சரியம் மகத்தும் ஹாஸ்சரியம். விசாரணையில் அணுவுமில்லை - மகத்துமில்லை. அணுவே—மகத்து: மகத்தே—அணு வென்ற சித்தாந்தமுமுண்டு. மக்கட்கணுவெனத் தோன்றுவது சில ஜீவராசிகட்கு மகத்தும், மக்கட்கு மகத்தாகத் தோன்றுவது பல ஆன்மகோடிகட்கு அணுவாகவும் தோன்றக்கூடும் என்று மேற்புலவிஞ்ஞானிகள் முடித்தார்கள். அணுக்கூட்டச் சேர்க்கையான பிரபஞ்சம் இப்போது நமக்கு விஷயமாகிறது இதுவே பரமாணுக்கூட்டமாய்த் திரிந்தால் இதையே நம்மிந்திரியங்களறிய மாட்டாவாம். நாமே மகத்துமணுவுமாக விருக்கின்றதை நாமேயறியாதொழிந்தது ஹாஸ்சரியம்! ஹாஸ்சரியம்! நம்மையடுத்தே நம்மை யூடுருவிச் சென்றே, நாமுணரப்பெறாத பரமாணுக்கூட்ட பிரபஞ்சங்கள் பலவிருக்கக்கூடுமென்று பல ஐரோப்பிய தத்துவஞானிக ளபிப்பிராயப்படுகிறார்கள். அவைகளைக்காண நமக்குக் கருவியில்லை. இருப்பினும் அது வெளிப்படா தொளித்தது. ஒளித்ததோகாலம் வெளிவரலும் சாலும். பரமாணுக்கூட்டப் பிரபஞ்

சங்களில் வாழப்பெற்ற ஜீவகோடிகளும் அணுக்கூட்டப் பிரபஞ்சமாம் நமதண்டாண்டங்களை யறியார்போலும். பகவத் சிருஷ்டி அதிவிநோதமானது. அணுவும் மகத்தும் தனிமுதற்கடவுள் மாட்டேயுள்ளன. "யாரே உன் அதிரேக மாயை யறிவார்" என்றார் கவிச்சக்ரவர்த்தியும்.

கீதாசார்யன் "நாந்தோஸ்தி மமதிவ்யாநாம் விபூதிநாம்பரந்தப"—என்னுடைய லீலாவிபூதிக்கு முடிவொன்று கிடையாது ஹே! பரந்தப—என்று கூறிய இரஹஸ்யத்தை யீண்டையுலகம் சிந்தித்துய்யுமாக. இதுகாறும் மக்கள் சிற்றறிவுக் கெட்டிய உண்மை, உண்மையை நஞ்சிற்றறிவு கொண்டளந்தறிவ தசாத்திய மென்பதேயாம்.

உள்ளபடியே உண்மையை யுணர்வான் நாம் சுற்றிப்பற்றிப் பார்க்குமிடத்து தோன்றுவன வெல்லாம ஹாஸ்சரியமாயமைந்துள்ளன. எம்மருங்கும் ஹாஸ்சரியத்தை நாம் காண்பதன்றியும் எத்திசையும் ஊடுருவிக்கிடப்பதொன்றும் ஹாஸ்சரியமாகவே விளங்கும். வானத்தைநோக்க ஆண்டு, கடற்கரை மணலை யெண்ணினும் எண்ணுதற் கருமையாகி யாண்டும் சலித்துழலும் அண்டகோடிகளை வியப்புடன்கண்டு வியப்பிலாழ்கின்றோம். இப்பூமியை நோக்குழி, அதன்கண் ஊரும் புழுமுதல ஆறறிவடைந்த நரனீறாகக்கிடந்த ஜீவராசிகளைக் குறித்த நிச்சய ஞானத்தை யுணரப்பெறாது பயஸம்பிரமத்துடன் இறும்பூதெய்தி நிற்கின்றோம். **இங்குமங்கும் எங்கும்** என்ற சப்தங்களை யுன்னி யுன்னி யொன்றுந் தோன்றாது மயங்கி நிற்கின்றோம். "இவ்வண்டத்தை யளந்தோம்." "சந்திர சூர்யர்களை இவ்வளவு கனமுள்ள கிரஹங்களெனத் தெரிந்தோம். அண்டங்களினிடையிலுள்ள ஆகாசத்தை (Ether) ஒருவாறின்னதெனவு முணர்ந்தோம். எம்மையே யாவரென வுணர்கிலோம்" என முறையிட்டுப் பிரசங்கித்த பலகலைஞானிகளது சரித்திரத்தைப் படித்து, இனி யாமடையுங் கதியாதோ எந்தாய் என்று சிவனை விளித்து அரற்றுகின்றோம். உடற் சாத்திரத்தைச் சந்தித்து நமதுடலத்தைப்பற்றி யாசகித்தோம். உயிர்ச் சாத்திரத்தை யழைத்து நமதுயிர் லக்ஷணங்களை நீ கூறுகவென்றுசாவினும், மனச்சாத்திரத்தைத் தேடிப்பிடித்து எம்மனக் குரங்கின் சேட்டையை நீ கூறுதலுண்டு கொல் என்று பிரஸ்னித்தாம். ஜடஞானங்கள் யாவையும் விளித்து ஜம்டாற்பததி நீவிரறிதிரோ வெனக் கடாவினும். சித்சாத்திரத்தைக் கூஉய் நீ சித்திற்கலந்து மீண்டும் உன் சித்தமடைந்து வெளிப்போந்தனைபோலும் என்று கூறினும்.

இக்கலைகள் யாவும் நாணமுற்ற மகளிரெனத் தலைகுனிந்து பூமியை நோக்கி நின்றனவன்றி, எமது பிரஸ்னைகள் உத்தரம்பெறாது பயன்படாதொழிந்தன வென்பது சத்தியமேயாக, நமது தேகேந்திரியாதிகள் யாவும் ஹாஸ்சரியமயமென முடித்தாம்; பறையடித்தாம். நாம் உயிர்த்திருப்பதும் ஹாஸ்சரியமேயாம. இறந்தொழிவதும் ஹாஸ்சரியமேயாம். நமக்கு நாளே

ஹாஸ்சரியம். நம்மை யுணராது நாம் மயலடைந்துகிடந்ததும் வெகு ஹாஸ்சரியம். நமது பிரவர்த்திகள் யாவையும் தூண்டும் வாசனைகள் தாமும் அத்யந்த ஹாஸ்சரியம் தந்தை, தாய், தமர், தாரமெனக்கொண்டு மாழ்கியதும் விந்தையன்றே? பெண்டுபிள்ளை பண்டபதார்த்தங்களை வெறுத்து வெளியேறிய சிவஞானியும் நமக்கதிசயப்பொருளாவன் காணமின். யாவும் ஹாஸ்சரியம் போலும், எனவே ஹக்ஸ்லி, டிண்டால், முதலிய பௌதிக ஞானிகள் யாவருமே பகவானது சித்விலாசச் சிறப்பினை யளந்தறிவான் வாளுமெல்லாம் உழைத்துக் களைத்த புண்ணிய வடிவினரென்பது தெள்ளிய வறிவினர்க்கு வெள்ளிடை மலைபோற் றோன்றுமென்க.

**பிரகிருதீயோ:—** ஸர்வதா மாறுதலடைந்து கிடக்கு மொருதனிமுதல், அன்று சூரியனிடம் வாழப்பெற்ற பூதவணுக்கள், பிறைறை ஞான்று சந்திரனிடத்துச் சென்றுழன்றும, இன்றுதாவரத்தை யடைந்தும், நாளை விலங்கிற் புகுந்தும், பின்னர் மானிட சரீரத்தைப் போஷிததும் சலிப்புற் றொழியுமாயின், என் சொந்ததேகம், நீ சுகிக்கும் உடலம், அவள் களிக்குமாக்ருதி, அது வளர்க்கும் அங்கம் என்றெழுந்த வெற்றுச் சொற்றொடர்கட் கிடனேதோ புகல்வீரெனக் கூறிப்போந்த சாஸ்திரிகளோ பிரகிருதியைப்பொருளாய் மதிததற்கு மகுடஞ்சூட்டிக் களியாநிற்பர்? கேற்க:—

உலகாயதன் முழுப்பும் ஆசங்கைகட்குச சித்த சமாதானத்தோடு விடையிறுப்பது சாதுக்களுக்குக் கஷ்ட சாததியமான விஷயமொன்றன்று. அவன் கடாவுவதெல்லாங் கூடி—விஷய சுகதனைத நாணச்செய்யும் விஷயாதீதச் சுகமொன்று முண்டு கொல்?

அமிழ்தினு மாறறவினிய அறுசுவை யுண்டி யுகத்தலும், அரியமதிப்புள்ள அழகு பட்டாடை யுடுத்தலும், களப கஸ்தூரிககலவைப் பூச்சணிதலும், அப்ஸரஸ்திரீகளினு மதிகவனப்பு வாய்ந்த அரிவை மார்களை யநுபவித்தலும், அட்டாவதானி, தசாவதானி, சதாவதானி, சஹஸ்ராவதானி, வித்வான், மகாவித்வான், வண்ணக்களஞ்சியம், வெண்பாப்புலி, சண்டமாருதம், செந்தமிழ்ச் செல்வர், முத்தமிழ்விரகர், மோளரி, ஆளரி, இத்யாதிபட்டங்களைத் தாமே யேற்றலும், பிறாதரப் பெறலுமன்றோ நம்மால் ஆஸ்ரயிக்கக்கிடப்பன?

அவை நீங்கலாக, யாவர் யாணடெச்சுகங்களை நுகர்ந்தார்களென நாம் நேரே கண்டோம். நாம் பகுத்தறி வடையப்பெற்றதன் பிரயோசனமே, பஞ்சேந்திரிய வழிவரும் போகங்களை. முழுவுற்சாகத்துடன் புசிப்பதற்காக வேயன்றோ? என்பன்வாதி வியவஸ்தைகளேயாம். இத்தகைய சாப்பாட்டு ஞானிகளின் வருங்காலம் வெறுங்காலமா யொழிவதைச் சிந்திதுச் சாதுக்கள் துக்கத்திலாழ்ந்தனரென்க. பக்குவ ஹீனர்களான நமது உலகாயத மதச்

சோதரர்களையும் கடாக்கலையநாயாஸமாய் வீசியெறிவான் யாம் சில பிரஸ்னை களை யெழுப்புவோம்.

மக்கள் யாக்கையைச் சுமந்துழலும் எவரேனும் அவ்வவ்வமயத்துத் தத்த மக்குப் பிராரத்துவப் பலனாகக் கிடைக்கும் உணவாதிகளைச் சிறுமாம்சத்துண் டொன்றைக் கவ்வியுழலும் யாதொரு அல்பவிலங்கினது ஆஹ்லாதத்துடன் புசித்ததுண்டு கொலோ? **என்னை** நாய்க்குட்டித் துறுஞ்சும்போது அதன் பஞ் சேந்திரியமும் அதனிடமாக லீனமாதல் சத்தியமன்றோ? **மனுஷ்யனோ** பர மான்னம் புசிக்கும்போதும் தன் முழுமனதையும் அதன்கட் செலுத்த வல்ல னல்லன். அவன் சிற்றுண்டிக் கொள்ளுங்காலை, அவன்றனது காதொன்றைக் கேட்கா தொழிந்ததில்லை, கண்ணொன்று காணாது நின்ற தில்லை; மனமொ ன்றைச் சிந்தியாது கிடந்ததில்லை. கட்குடித்தது வெறியொடு உன்மத்தமென நடம்பயிலும் மனுஷ்ய விலங்கும் அன்று அக்குடியன் ... சுகாநுபவத்தினுங் கூடத் தன்னையொன்றனையே கருதாதொழிந்து அந்நேரம் வைப்பதரும் தன தல்பசுகப் பேற்றைப் பிறரும் தன்னோடு பாகித்துச் சுகிக்கக்கண்டு சுகிக்கின்றா னன்றே! (பிறரென்பார்-பந்து, சினேகர், யதுமுதலியோர் ஒழியக்கிடந்த தனது பெண்டு பிள்ளைகளாகவே யிருக்க:)

அறிவிற்சிறந்து விளங்குவோர் **பங்தி** போசனம் செய்யுங்கால், ஏதேனு மொரு சந்தோஷகரமான விஷயமொன்றைக்குறித்துச் சம்பாஷித்த வழியே விருந்துண்டுகளிப்பது கண்கூடன்றோ? சரச சம்பாஷணை காலக்ஷேபமே யன்னோருக்குச் சுகதையூட்டிய தென்றும், யாண்டும் பதின்மரை யொருங்கு சேர்ப்பித்தது ஜிஹ்வாசாபல்ய மாத்திரமே யன்றென்றும் பிரகாசமாயுணர்ந் தோமென்க.

நிற்க:—ஜாஜ்வல்லியமாய்ப் பிரகாசியா நின்ற நவமணிக் குவியல்கள் டா ல்வீசிக்கிடந்த ஆபரணாலங்கிருதையாகி வெண்பட்டுக்**கவுன்** (Gown) சிறக்க, விண்பட்டுக் காசிசரிகைச் **சாரி** யொன்றுடுத்தும், பழைமையும் புதுமையும் பொருந்தி யுறவாடிநகையாடற் கடையாளமென மததாப்புச்சரிகை ரவிக்கை யைத் தழுவிக்கிடந்த மகமல் பெட்டிகோட்டு (Petty Coat) கொண்டு தனது ஸ்வர்ணமேனியை மறைத்தும், இடையுண்டென நிர்தேசிப் பதற்கு உபகார மாய்க்கிடந்த தங்கவைர இடையா பரணமொன்று இடையிற் பிரகாசிக்கவும், பூரணச்சந்திரனைப் பழித்துப்பொலிவெய்திய திருமுகம், நட்சத்திரக்கூட்ட மோவென கண்டவா யாவரும் சங்கிக்கும்வண்ணம் தோன்றிய வயிரக்கா தோலை கண்டாபரணங்களினது பிரகாசமயம் சேர்ந்த வழி அமிர்த மயமான சந் திரிகையொளி ஜொலியா நிற்பவும், இடை யொடிய நடைகுலுக்கி, முகமினுக்கிக் கண்ணம் பெய்து வல்லுயிர் வாட்டிப் பிடியென ஒய்யலாய் மையல் ஊட்டி அசைந்த அமயம் எம்மருங்கும் கமகமவென்று மாரனைக்கூவும் நற்கந்த மெறி

யவும், பாதசரங்கள் கிண்கிணி முதலிய கட்டியம் கூறவும், முநீஸ்வரரையும் நொடியில் வெல்லும் மந்தஹாசம் நகைகளிற் றவழவும், கல்வியானும், பொருளானும், அந்தஸ்தானும் கௌரவமடைந்த பல பிரபுக்கள் விஜயம் செய்யாநின்ற மணிமண்டபத்தே பிரசன்னமாகி (பிரவேசித்து) க் குயில், குழல், யாழ் இவற்றைப் பழித்தகுரலுடன்பாடி, தேவகானமூட்டி, சரஸஸல்லாபங்களை வழங்கிச் சதஸை களிப்பெனுங் கருங்கடலி லமிழ்த்திக்கரை யேருதலககண் பட்டழியவிட் டாடல்காணும் பொதுமகள் விலைகூறி வியாபாரஞ் செய்யக்கிடந்த சுகரூப விரயத்திற் கன்னியதா வொன்றை மக்கள் யாண்டும் அடையாமலே ஒழிந்தனர் கொல்லோ ?

ஸ்வப்பிரயோசனமே யுணராது பரப்பிரயோசனார்த்தமாகவே எக்காலமுமுழைத்துக் காலங்கடத்தும் இல்லறத் துறவிகளை இக்கலிகாலத்தும், நாமருமையாகவேனும் காணப்பெற்றிலமோ ? "புஸ்தகம ஹஸ்த பூஷணம்" என்ற முதுமொழிக்கிணங்கச் சர்க்கதா காலக்ஷேபம் கலைஞானப் பயிற்சிக் காலக்ஷேபம் செய்பவரும் ஆயிரமல்ல பதினாயிரமல்ல லக்ஷக்கணக்கினு மடங்குவரோ? வானசாஸ்திர ஞானியொருவன் சர்மானுஷ்யமான ஏகாந்த உன்னதஸ்தானத்திலிருந்த வழிக்கிரஹங்களினது உற்பத்தி, சலிப்பு, பரிணமிப்பு, லயம் முதலிய அதிநுட்ப அரிய விஷயங்களை யுணர்ந்து சுகிக்கும் சுகமும் பொதுசுகந்தாமேயோ ? சூரியோதயமாவதும், அஸ்தமிப்பது முணரப்பெறாது சிற்சில சமயம் மனவடிவமைந்து நின்ற உயர்கணித, பூத பௌதிக, உயிர் உற்பத்தி, உணர் உற்பத்தி, ஞானவுற்பத்தி சாஸ்திராதிகளைச் சாகோபசாமையாய் ஆய்ந்தறிந்த பண்டித பண்டிதைகள் சோற்றுத் துருதியைத்தானோ அருமை பாராட்டியவராகக்கோடற்பாலர்? மற்றும் சிலர், மனம் சேரலொலலாத அரிய நிலைகளில் அறிவைப் பிரகாசிக்கச் செய்து ஏதோ நவீன வற்புத சுகமொன்றனை யநுபவித்தல் சாலுமென வேதநகள் பறை யறையா நின்றதை நாம் ஏரேதுவாய் நிராகரித் தொதுக்குவதற் கிடமேனதோ சொல்லீர் ? நாமறியப்பெறாத யாவும் பொய்ம்மையேயோ? நாமறியாத நமதுமூளை ஹிருதயம்யாவும் சூன்யந்தாமோ? நாம் காணப்பெறாத லண்டன், பாரிஸ் முதலிய நன்னகரங்கள் யாவும் பொய்ப் பொருளேயோ? நாமுணராமதாழிந்தநமது மூதாதைகள் அனைவரும் பொய்ப் பட்டுப் போயினரோ ? சப்தஸ்பர்ஸரூப ரஸகந்த திகள் இந்திரஞாலம் போலுமெனக்கண்டு, மனவமைதியோடு வாணாட் கடத்திச் சுகித்த சாகரடீஸ் என்ற கிரீக்ஞானியாவார் அரசனாணையால் தமக்குக்கொடுக்கப்பட்ட விஷத்தை யகங்கோணாமல் முகங்கோணாமற் பானம்பண்ணிப் பரலோகவாழ்வெய்திய பொழுதத்து விஷயவின்பங்களைச் சிந்தித்தழுதேயோ உயிரைத் துறந்தனர் ?

ஞானான்னம் கிடைக்கப் பெறாது பட்டினியாய்ப் பல்லூழிகாலம் வருந்திக் கிடந்த பல்லாயிரம் பிரஜைகட்கு ஒருவாறு அன்னோர் பக்குவத்திற் கேற்

பப் பதிஞானமூட்டி யுபகரித்த மகம்மது நபியும், அஞ்ஞான நீங்கிச் சுஞ்ஞான மோங்கப் பூமியிலவதரித்துச் சேரனப் பிரபஞ்சத்தை இரக்ஷிப்பான் சிலுவை யிலறையுண்டு பாபிகள் பெரும்பாபத்தைத் தொலைப்பான் தம்மின்னுயிரைப் பலியாய்த் தந்த தேவகுமாரன் ஏசுவும், "அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம், பூரியார் கண்ணுமுள"வென்ற குறளுண்மையை யிடித்துப் போதிப்பான் கருதிப் போந்த மூர்த்தமென அருளே வடிவெடுத்த தெனத் தோன்றி அருளிலார்க்கருளையே வழங்கி, அருட்பெருஞ் செல்வ ராய் விளங்கிய பௌத்தமுனி சிரேஷ்டரும், "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறைவிளங்க, பூதபரம்பரைபொலியப் புனிதவாய்மலர்ந்தழுது' பிறப்பிலியை யழைத்து இறப்பிலியாய் நின்ற நங்குருநாதன் ஸ்ரீஞ்ஞான சம் பந்தவள்ளற் பெருமானும், ஏனைய வைதிக சைவ சமயாசாரிய சுவாமிகளும், ஸ்ரீ பாஷ்யகார ரென்பாருள்ளிட்ட வைணவமதத்திலகோத்தமரும், மற்றும் புண்ணியவடிவினர் பிறரும் மெய்மை யொறுத்துப் பொய்மைத்தான் ஆசிரயி த்து நின்றன ராவரேயோ?

மேலே விவகரித்த இத்யாதி நியாய சல்லாபங்களாற் பரனைப் பிரபஞ்சத் தைவிட்டகற்று மாற்றலமைந்த வாணமகன் யாவனொருவனும் கிடையா னென்பது சர்வஸாமஞ் சஸமே யாயிற்றென்க. யாண்டும் வியாபித்துப் பிர பஞ்சத்திற் காதாரமாய்க்கிடந்த ஆகாச பூதம் நம தறியாமைக்கிரங்கி பொய்ட் பட்டுப்போகக் காண்கிலமே!!.

அற்றேனும் கடவுண்மாட்டுக் கருத்தைச் செலுத்தவல்ல அறிவாளராய் சீரருக்கே மெய்ஞ்ஞானச் செல்வம் அமையும்; ஏனையோர்க்கமையா வெனச் சிறுபாலார் பிரசங்கியாநிற்பர். இஃதெமக்கு உடன் பாடன்றாம்

"பொய்மை யொழித்துப் புறப்பட்டேன் மன்றாடும்
ஐயரைக் கண்டேனடி—அம்மா
ஐயரைக் கண்டேனடி"

என்னும் திருவருட் பிரகாசவள்ளலாரது திவ்யவாசகம் சத்தியமேனும், மல வாழ்வுதுச்சமென் றொதுக்கிச் சிவசாயுஜ்ய வமலவாழ்வடைந்த ஞானசூர்யரே யன்றிச் சிறுவாழ்வைக்கோரி,

"வீரனிருளன் காட்டேரி வெருளனெண்டி சாமுண்டி, தூற்றித்தூண்டி நல்லண்ணன் தொட்டியச்சின்னன் பெரியண்ணன் மாரி முனியன் சங்கிலி யும் மாடன் கறுப்பன் பாவாடை மூரிக்காத்தான் குழியரிசி மோகினி சத்த கன்னிகையும், சேரி மன்னரன் மின்னிடையான் சிறுகாட்டுடையான் பனை மரத்தான், மாரியாண்டி வழிபறித்தான் மலையன் எரியன் சிலம்பாயி, இடை யன் நல்லான் ஊமையொடு வீறுங்கல்லன் பெத்தாச்சி வீட்டுத்தெய்வமுத லான"

க்ஷுத்ரதேவதைகளைக் காமியார்த்தமா யுபாசிக்கும் ஞான சூன்யராயி னோரும் உற்றுநோக்கியவழிப்பகவத் கடாக்ஷத்திற்குப் பாத்திரராகுமுண்மை காணுதிர் !!

**அர்ச்சாராதனம்** :—அடாதடாதெனப் பன்றமுழக்கும் பண்பினர் எவ ரும் அறிவாராதனத்தால் அஃதே, அப்போதே அக்கணமே அகண்டாகார போகவெள்ளத்தழுந்தி யாநந்தமயமா யமர்ந்தனரோ வறியேம் !

சர்வேஸ்வரனது படைப்பிலடங்கும் சோமசூர்யாக்னியாதி விகிருதிகளை யும், ஸ்தபதிகளாலமைக்கப்படும் பஞ்சலோக விக்ரஹங்களையும், **மறந்தும்** தொழாப்படாதென்பார் **நாகாமிருகமெனச்** சலிப்பின்றி யலைந்தலைந்துழலும் மனசினது பரிணமவிக்ரகஹகத்தையும் தொழுவதெவன் ?

அவாங்மனோகோசரம் பிரஹ்மம், என்கிற கொள்கையைத் தழுவும் மேதாவியர், அப்பிரம்மம் நேத்ரேந்திரியத்திற்கு விஷயமாகும் கல்லிலும் செம்பிலும் அமையாதெனல் அடுத்ததே ; மீண்டுந் திரிகரணங்களு ளொன் றாய மனசிற்கு ஸ்வப்பன வுலகென விஷயமாகும் அர்ச்சையொன்றனை யவர் பூஜிப்பதென்ன ? கல்லும் செம்பும் ஜடமென்பார்மனமும் ஜடமேயென்றறி யார்போலும்.

அசத்தான ஸ்தூலபூத விக்ரஹம் பொருள்படுமோ அதன் ஆராதனை பலன் தருமோ வெனக்கடாவும் கல்வி கேள்விகளாய கனஐசுவரியத்தை யார்ஜ ஜித்தோர், அசத்தான தம்மனோ சூக்ஷ்மபூத விக்ரஹத்தை யாராதித்துப் பயன் பெறுமா றெங்ஙனம்? முப்பத்துமுக்கோடி கடவுளர்க் குழுவிருத்தல் சம்பாவித மேயோ வென்பாரை ஏகமாயெங்கும் வியாபித்துள்ள ஒரு பரவஸ்து பல்லாயிர ங்கோடி அண்டங்களாயும் தோன்றுவனை எற்றேறுவெனவினவில் யாதுகூறு வர்? என்ன செய்வர்? அஃதங்ஙனமாக :—பூர்வ ஜன்மமின்று, கன்மமின்று, மறு ஜனனமின்று, என்று நீட்டியும், பிரஸ்னித்தும். ஏகேஸ்வரவாதிகளாகிய நமது சோதரர்கள் போதருவாராயினர். அற்றேல், புல் பூடாதி தோற்றப்பேதங்கட் கும், தனிகர் ஆதுலராதி நிலைபேதங்கட்கும், குருடர், செவிடராதி குறை யுற்றோர் பேதங்கட்கும், இவைபோன்ற வனந்தபேதங்கட்கும் இடன் எங்ஙன முண்டாயதோ கூறுவராக உழைப்பின்றி யிவர்கள் உறுதியடைவார்கள் போலும், உழவின்றி அன்னமருந்துவர்போலும். கல்வியானும், கேள்வியானும், ஞானத்தானும், சீலத்தானும், குணத்தானும் மேம்பட்டோரா சிலர் கந்தைசுற் றிக் கையேற்றுண்டு கழிபெருந்துன்பாழி லாழ்ந்திருப்பவும் அவர்களல்லாதோர் பலர் யோக்யதையின்றி ஐந்தடுக்கு அழகு மாளிகையில் அறுசுவைப்போனக மமர்ந்து புசித்து அஸ்வாரூட ராயணிபெற வுலவி இந்திரபோக மீண்டைத் துயத்து விளங்கவும் காரணமென்னோ ?

“ அறத்தாறி துவெனவேண்டா சிவிகை
பொறுத்தானோடூர்ந்தானிடை.”

என்றதெய்வப்புலமைத்திருவள்ளுவனர் உரை வெற்றுரையாங்கொலோ? ஒருகாலுமாகாது. மேலும், மறுபிறப்பின்றேல், இப்பிறப்பில் பகவத்குணநுபவங்களிலாழ்ந்து சத்கர்மத்தையே வளர்த்து, ஆத்மவிசாரணையைத் தலைக்கட்டி சாக்ஷாத்காரமடைந்து மோக்ஷத்திற்கருகராயுள்ளோரொழிய காமம், வெகுளி, மயக்கமாயமுக்குற்றவயத்தராய், யானெனதென்னும் அகந்தை மமதைகளிலாழ்ந்து துஷ்கிருத்யதுரந்தரராய் விஷயாந்தரங்களை விருத்திசெய்து,

" மணிநகை யாரே தெய்வம்
வாக்குப தேசங் கொங்கைத்
துணைகுரு பீடம் பாதத்
துணைவரு டுவேத பூஜை
அணைவதே முத்தி யாசா
னின்னமு மறியாய் போலுங்
கணிகையர் முகத்திற் கூறுங்
காமனு கமங்க ளென்றான்."

என்று கூறிய ஒரு மாணவகனையொத்துலவும் மற்றையோர் அடையுங்கதி என்னும்? ஆகவே முற்பிறப்பும், மேற்பிறப்பும் உண்டென்பதும்,

" எவ்வினையேனுமொன் றிழைக்கினீறிலா
அவ்வினையேபயனளிந்தல்செய்யுமால்
செய்வினையல்லதுதெய்வமென்செயும்
மௌவலந்துளவணிமார்பமற்றரோ,"

வென்றெழுந்த ஸ்ரீபாகவதமஹாபுராணவாக்கியார்த்தப்படி கர்மமே தநுகரணபுவனபோகங்களைக் கூட்டுவிக்குமென்பதும் பசுமரத்தாணிபோல் நாட்டப்பட்டதென்க.

பின்னும், பக்ஷியாதிகள் பக்ஷணம்பண்ணவே படைக்கப்பட்டனவென்றும் அதுபற்றி அவைகளைப்புசித்தல் பாபஹேதுவன்றுமெனவும் வேதபாஹ்யர் சிலர் கூறுகிற்பர். இக்கூற்று மெமதுகொள்கைக்கு மாறேயாம்.

" அம்மாவெனவலறவாருயிரைக்கொன்றருந்தி
இம்மானிடரெல்லாமின்புற்றிருக்கின்றார்
அம்மாவெனுஞ்சத்தங்கேட்டகன்றமாதவர்க்கும்
பொய்ம்மாநிரயமென்றற்புசித்தவர்கென்சொல்லுவதே."

என்றம்,

" கொல்லாவிரதங்கொண்டவரேநல்லோர்
மற்றல்லாதார்யாரோவறியேன்பராபரமே." என்றும்,

" தன்னூன்பெருக்கற்குத்தான்பிறிதூனுண்பா
னெங்ஙனமாளுமருள்."

என்றும், அநுபவஞானசீலர்களெடுத்தாண்டுள்ளாராகையான் அவ்வான்றோர் ஆட்சியையே பிரமாணமாகக்கொண்டது மன்றி தற்கால பூதபௌதிகசாஸ்திரிகளின் றுணிபும் சாக்ஷாத் மணிவாசகப்பிரான்,

" புல்லாகிப்பூடாய்ப்புழுவாய்மரமாகிப்
பல்விருகமாகிப்பறவையாய்ப்பாம்பாகிக்
கல்லாய்மனிதராய்ப்பேயாய்க்கணங்களாய்
வல்லசுரராகிமுனிவராய்த்தேவராய்ச்
செல்லாஅநின்றவித்தாவரசங்கமத்து
ளெல்லாப்பிறப்பும்பிறந்திளைத்தேனெம்பெருமான்."

என்று கட்டளையிட்ட பாசுரத்தினது முடிவும் ஒத்திருப்பது நோக்கியும், மனுஷ்ய சரீரத்தினுய் அருமையா யமைக்கப்பட்ட யந்திர உறுப்புக்களை ஈஸ்வரன் மக்கள் க்ஷேமார்த்தம் பட்டொழியவே வகுத்திருப்பரேல் அவர் சாவஞ்ஞர் என்னல் எட்டுணையும் பொருந்தாதெனும் யுக்திப்பிரமாணத்தையும் நிர்வஹித்தும் அன்னோ கக்ஷியைப் பூர்வபக்ஷப்படுத்தி எமது ஜீவகாருண்ய பக்ஷத்தைச் செவ்வனே சித்தாந்தப்படுத்தினுமென்க.

அற்றேனும்,

" அந்நியநூலின்விதியவிரோதமேல் உன்னேல்பழுதென்றுளத்து."

என்று மேலோர் பணித்ததைப் பணிவுடன் பின்பற்றி வாழ்வேமாய் நவீனப் புறமதப்பிர வர்த்தகர்களான பேசாவியா அவிரோதக் கூற்றையும் அவிரோதமாகக் கொண்டே அவலம்பிக்கின்று மென்க. எமக்கு யெவர் எம்மதத்தராயினும் சம்மதமே! அவரவர் அவரவா மதத்தையே போற்றி வாழவேண்டுவதும் நியதமே யாம். அவ்வவ் மதப்போலிகளை மாத்திரம் சாதுக்கள் வெறுப்பதும் சகஜம். உதாரணமாக, ஏகேஸ்வர வாதிகள் விஷயத்தில் எம்க்கு ஒருநாளும் பகுமான புததியில்லாமற் போனதில்லை. ஒருசமயம் உதயமாகி மண்ணுலகத்தே ஞானவொளியைவீசி அஸ்தமித்த ராஜாராம் மோஹன் என்ற ஞானபானுவை மீண்டும் இப்பூவுலக அஞ்ஞானவிருளை யொழிப்பான் உதயமாயபடிப்பராபரன் எஞ்ஞான்று திருவுள்ளங்கொள்வரேயோ வெனத திருவருளை யாண்டும் சிந்தித்து நிற்கின்றும். ஆஸ்திகப்போலிகள் விஷயத்தில்மாத்திரமே எமக்கு எப்போதும் துவேஷமுண்டாகிறதுண்மை. பிரமசமாஜ மந்திரங்களில் ஆஸ்திகவாதம்பேசி மகிழும் சிலர்மந்திரத்தைவிட்டு நீங்கியவக்கணமே, விபூதி கண்டிகையணிந்து சிவஸ்வரூபங்களது மங்கலவிக்ரஹங்களை நூற்றுக்கணக்காய்ப்பெற்ற தங்கள் பூஜைவிடுதிக

ளில் ஆராதித்த காக்ஷியைக் கண்ணால் நேரில்கண்டார் நமது போலிகளை எத்துணை விவேவிகளாகக் கொள்வார். ஐயகோ! 'யாம் பிரமசமாஜிகள்' என்று பலகால் எம்முன் பரக்கக்கட்டிய சிலபுண்ணியர் தங்கள் தாய் தந்தையர் கைலை சென்றபோதும் வைகுண்டம்காண நீங்கியபோதும் எங்கள் (ஆரியஹிந்துக்களது) ஆசாரியர்களாகும் சத்பிராஹ்மணர்களை அன்னதாய்தந்தையரினது ஈமக்கடன்முதலியவைகளை முடிக்கும்படி தேடியடையாமல் விட்டனரன்றே! இதென்கொலோ! அம்மவோ!! இத்தகைய ஏமேஸ்வர வாதிகளிற் பலர் மணவினையை யக்ஞசான்றாய் வேதவிதித்துக்களைக்கொண்டு செய்யாது விட்டனரில்லையே. இஃதென்ன விந்தை! தமது ஸமாஜத்துயிரென நின்ற ஆசார்யரும், உள்ளபடியே விக்ரஹாராதனையையொழித்தவரும், ஞானாசிரியரைத் தவிர்த்து மற்றவரெவராயிருப்பினுமயாவர் தாக்ஷண்யத்தையும் கருதி வணங்கேனென்றறைகூவித்தமது மனோநிடத் தைச் சிறுபிராயத்திலேயேவெளிப்படுத்தியவரும், பரனைப்பரிவுடன் பற்றித்தே காலங்கடத்தியமேதாவியும், செங்கோல் திரணமும் வழுவாது செங்கோல்செலுத்தி சகல நற்குணசம்பந்நையாயும், உயிர்கண்மாட்டு உலவாக்கருணைபூண்ட உத்தமியாயும், இந்தியர் க்ஷேமத்தையே எஞ்ஞான்றும் அபேக்ஷித்துவாழ்ந்த சுசீலையாயுமிருந்த இறைவனது அம்ஸமாம் லோக சம்ரக்ஷணி விக்டோரியாசக்ரவர்த்தினிப்பெருமாட்டியார் சந்நிதானமடையப்பெற்று அவரால் நன்குமதிக்கப்பெற்றவரும் பல்லூழிகாலம் வங்காளநன்னாட்டாரிழைத்த நற்றவமே உருத்தரித்துவந்ததெனத் தோன்றினவருமான மஹான் பெருந்தகை-ஞானவள்ளல் கேசவசந்திரஸேனர் பரதவர்ஷமாம் புண்ய பூமியில், ஞானதாதாக்களாம் முனிசிரேஷ்டர்கள், பிரதீக உபாசனைவித்திட்டு, ஜீவகாருண்யமாம் நீர்பாய்ச்சி ஸ்மிருதி புராணேதிகாசமாம் வேலியிட்டு அபரஞானமாம் காவல்வைத்து வளர்த்த விக்ரஹாராதனை விருக்ஷமீன்ற தீங்கனியென்னத் திகழ்ந்தது ஒற்றைஞான்றும் கலைஞானக் களஞ்சியமென வொளிரும் ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களில் கலைஞான விக்ரகங்களாய்வாழும் அநந்தம் பிரபல பண்டித பண்டிதைகளால் தெய்வமெனக்கருதியே பூசிக்கப்பெற்ற ஸ்ரீ ராம கிருஷ்ண பரமாம்ஸ தேவரிடம் கொண்டு ஆத்மபந்துத்தவமே எம்மார்க்கத்தினின்றும், ஒரு மார்க்கத்தையும் இகழ்ந்துகூறாது தம்மார்க்கத்துவாராநற்கதியடைதல் சாலுமென்றெழுந்த நல்லோர் கூற்றை நிதர்சனப்படுத்திய துணாவீர்!

வேதங்கள் பற்பல வவசரங்களில் **பரமாத்மா, பரமேஸ்வரன், ஜகத்பிதா, சர்வதிருக்விபு:, விஸ்வாத்மா, சின்மய:, பரப்பிரஹ்ம சனாதநம்,** என்று வந்தித்த எங்களப்பனை, பிரகிருதத்தில் **ஐயவையா** வெனவரற்றிய கேசவசந்திரர் பரமாம்ஸரினது நட்பைப்பெற்ற பின்னர், தம்மிறுதிகாலம்வரை அம்மையம்மே எனப்போற்றி வாழ்வடைந்த விஷயம் அவரது திவ்ய உண்மைச் சரித்திரத்தின்கட் பெறப்பட்டதன்றே!

பரமாம்ஸர் அம்பாள் அருட் பிரசாதத்தைப் பெற்றுச் சுகித்த ஞானவிக்ரஹம். ஏகேஸ்வரவாத சபையின தாசார்ய மூர்த்தமோ, வர்ணாஸ்ரமவிதிகளை யதிக்கிரமித் தொழுகியவர்—அநேகேஸ்வரவாத விரோதி - குருட்டு நம்பிக்கை கூடாவொழுக்கம் என்றவர் யாவர் பகைக்கினும் விக்ரஹங்களை வணங்கேமென்றவர் :—உபயபுண்ய மூர்த்தங்களினது சுத்தாந்த:கரணப்பரிணாமப் பிரதிபலநவிசேஷணங்களை யுணரப் பெற்றார்க்கே இம்மஹான்கள் பரஸ்பரம் பாராட்டிய ஒருமையின் பெருமை வெளிப்படும்.

பண்டிதத்வ பாமரத்வ ஏற்றத்தாழ்வு பக்குவத்தளவே கணிக்கத்தக்கதொன்றுபோலும். குழவியறி வுற்றார்பலர்—குமரவறிவுற்றார் சிலர் - முதிர்ந்தவறிவடைந்தார் வெகுசிலர் - அறிவே யானோர் அருமையருமை என்று கோடலுண்மை யேனும், சர்வஜீவராசிகளும், உணர்ந்தேனும, உணராதேனும் சாஸ்வதப பொருளினையே நாடிக் கிடக்குமென்று மறைமுழங்குதல் நிராக்ஷேபமென்க. எனவே, மதுரைவீரனைக் கொஞ்சி யாவேசம் கொண்டோனும், **சிவோக** நிலையின் றானந்திப்போரும், மக்களேறும், மக்கட்பதரும், பிறன்பொருள்வைளவும் மானிடக் குரங்கும், ஆதுலர்க்குத் தம்பொருளைத்தந்து ரக்ஷிக்கும் நரேந்திரர்களும், பிறன்மனை தழுவும் மனுஷநாயும், அந்நியன் பத்நி எம்மையீன்ற தாயேயென்ற மனுஷ்ய தெய்வங்களும், யாவரும் இறுதியில் அடையும்பயன் ஒரு தன்மைத்தே, இறுதியில் ஒடுங்குமிடம் ஒன்றே. காலாந்தரத்தில் காணக்கிடக்கும் காக்ஷி ஏகமே என்பது கரதலாமலகம் போல் விளங்குமென்க.

“ விரும்புஞ் சரியை முதன் மெய்ஞ்ஞான நான்கும் - அரும்புமலர் காய்கனிபோலன்றோ பராபரமே” எனக் கூறிப்போந்த ஸ்ரீ தாயுமானாரோ இதற்குச் சான்றாவர். அரும்பே மலர்க்கும், மலரோ காய்க்கும், காயேகனிக்குங் காரணமாகியதுபோல, சரியையே கிரியைக்கும், கிரியையே யோகத்திற்கும், யோகமே ஞானத்திற்கும் காரணமாக் கொள்ளக் கிடந்தமை காண்க. கனியாயினித்தல் காயினிடத்தும், மலராய் மணத்தல் அரும்பினிடத்தும் ஒளித்து நின்றமை கிராஹ்ய சக்தியுடையாரே யறிவர்போலும். ஒன்றினிடத்தில்லாத வொன்று நவீனமாய் வெளிப்படுதல் சார்பன்றே! **உள்ளது போகாது, இல்லதுவாராது**, என்பதே பிரமாணம். விருக்ஷ ஆகாரம் வித்தினிடத்துச் சத்திரூபமாய் வொடுங்கி யொளித்தும், வித்தினிடத் தொளித்த சத்திபிற்பட்டு விருக்ஷாகாரமாய்ப் பரிணமிப் படைந்ததூஉம் சூக்ஷ்மவறிவுடையாரே காண்பர். சுக்லசுரோணித சையோகத்தால் நேர்ந்த அணுப்புழுக்குழாம் தினேதினே பக்குவபபட்டுப் பூரித்துப் பாரித்துப் பிண்டமாய் வெளிப்போந்ததைக் காண்டிர்! அவ்வணுப்புழுக் குழாததை உயிர்ச் சாத்திர பண்டிதர் பரீக்ஷிக்குங்கால், இன்னவை குரங்காய்வளரும். இன்னவைநாயா யொழியும், இன்னவை நரியாயூளையிடும், இன்னவை கழுதையாய் முடியும், இன்னவை

நரனாய் ஒங்கும், இன்னவை மகாஞானியின் புண்யதேகமாய் நீளும், என்று சித்தாந்தம் செய்யமுடியா தென்று கூறினர்! யாரறிவார் பேரறிவை! ஹேசர் வேஸ்வர! ஹேதயாளு! பூமியிலூரும் புழுக்கள் யாங்களோ வறிவோம் நுமது திருவுள்ளம்! ஆதிபகவ! நுமதாற்றலை எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும் உள்ளம் நடுங்குமே!

"சரிதையிலே ஈசன் ஜடவடிவாய் நின்றான் கிரியையிலே மந்திரத்திற் கிட்டியருகிருந்தான் ஊனமிலா யோகத்தில் உள்ளொளியாயே நின்றான் ஞானமதிற்றா னயினான்"—என்றும்,

"சரிதையில் ஆணவம்கால் சரிந்திடும்
கிரியையில் அரைமலம் கெடுதியுற்றிடும்
மருவுயோகத்தின் முக்கான் மடிந்திடும்
விரிசிவ ஞானத்தின் முற்றும் வீயுமே."

என்றும், எடுத்தாண்ட ஆப்தர் மொழியைச் சத்பிரமாணமாகக் கண்டடங்கு வோமாக.

என்ற போதினும், அநார்யக் கொள்கைகள் யாண்டுஞ் சிறவாதழியு மன்றே! சிறுமக்களிடத்தும் முற்று மருவருப்பைத் தரத்தக்க சிறுமதச் செயல்களை அவ்வப்போதே கண்டித்து ரக்ஷித்தல் மேதாவிகளினது கடனே யாமென்க. எம்மதமும் எமக்குச் சமமதமெனக் கோடன் மாத்திரத்தானே, **பைசாசோர்பாசனை, ஜடோபாசனை நிர்வாண ஸ்திரீயுபாசனை, மூடதெய்வ வழிபாடென வெழுந்த வியபசாரம்**, முதலிய ஹேயமார்க்கங்களைப் பெரியோர் யாண்டும் வெறுக்காது ஆதரவு செய்யாரென்க. என்னை! அவரவர் சமயவுணர்ச்சி அவரவரறிவைப் பொறுத்ததேயாக, சுத்தசாமான்ய னையும் முதியவறிவினர் ஆநாதரவு செய்தொதுக்குதல் யாங்கன மென்று சங்கிதால்:—நன்று கடாயினாய்;

சிற்றறிவு பேரறிவாகாதெனினும், அஃது, முற்றுமறி வின்மை யென்ற ஆணவத்தினின்றும் பிரத்யேகப் படுத்தி யறிதலொல்லாத வொன்றன்றே யெனக் கூறிமறுக்க! அர்ச்சாராதனை யாவர்க்கும் ஒரோவழி யத்தியாவசியமே யெனக் கோடன் மாத்திரத்தானே வேசைத்தாசியே நம்மனோரது சிவாலய விஷ்ணுவாலயங்களில் சுவாமி கார்யார்த்தமாய்ப் பிரயோசனப் படத்தக்கவள் என்று கோடலு மவசியமேயோ! வேசையின் தாசத்வம் எம்பெருமான் அடையப்பெறாராயின் அவர் திருவுலாவரத் திருவுள்ளங் கொள்ளாரோயோ? தாசிசகிதராய் எங்களப் பன்புறம் போந்தாராயின் மாத்திரமோ எம்பெரியோர் அவரைத்தெரிசிக்க ஒருப்படா நிற்பர் கூறுமின். வேதவித்துக்கள் சாமகீதம் பாடி பின்றொடரும் எங்கோவை பொதுமகளோ வழிகாட்டி யீர்த்துச் செல்வது. இதுகிடக்க மற்றொன்றைக் கூறப்புகுதும்.

பரமேஸ்வரனைச் சிவ:, விஷ்ணு: பிரமஹ, முதலியவாய திவ்ய நாமங்களாலழைத்தல் சால்புடைத்தே யென்ற மாத்திரத்தானே பரனை முற்றும் மறந்து பாபகிருத்ய கர்த்தர்களாயொழியும் முழுமக்கள் எனச்செயல்களாய நரபலியிடல், பசுபலியிடல், மருளடைதல், பொய்க்குறி கூறல், பொய்யாவேசமாதல் முதலியவற்றைத் தலையெடுத் தாடவும் அவகாசம் கொடுப்பரோ எம்பெருமக்கள்! வேதங்கள்—"சுடலையாடி," "பேயோடாடி" "பூதநாதன் எனவந்தித்த வெம்பெருமானை லோகநாசனப் பிரளயஸ்மசானத்திலடையப்" பெறாது மக்கள், ஊர்ப்புறத்துள்ள இடுகாட்டிற் காண்பான் சேறலோ புத்தி? அச்சோ! பரிதாபம் பரிதாபம்! பிறவிப் பேதைமை செய்பிற்களிம்பெனப் பிடித்தாட்டும் மந்தபுத்திகட்கு நல்லறிவுச் சுடர்கொளுவியுபகரிக்க யாவராற்றிரம்ம?

. பாற்கடலினமர்ந்த சயநத்தின் மீதுறி துயிலமர்ந்த அருட்கோலமே, சிதம்பரத்தே நடமாடும் சபாநாயகப் பெருவள்ளற் பெருங்கோல மெனக்காணுதொழிந்தார ஆயிரமாயிரங் கண்ணைத்தான் பெற்றென்? இத்தகையோர் பிரஜைகட்குபதேசிக்க வெளிவருதல் குருடாமகுக் குருடர் வழிகாட்டிய படியாமென்க.

முறம்போலும், உரல்போலும், உலக்கைபோலும், தூடப்பம்போலும் எனச்சிததாந்தம் செய்த யானைகண்ட குருடாகதையே யென்ன பலசமயங்கள் பரமேஸ்வரனை அவனுகாத பற்பல பதார்த்தங்களெனக் கூறி ஒன்றையொன்று விரோதியாநிற்கும் போலும். யானையைப் பாராத பிறவிக் குருடன் பூனையையேனும் கண்டானில்லையென்பது சொல்லாமலே வெளியாகும்.

பரமார்த்த மேதுமுணராச சிறுசமயவாதிகள் அதிகாரிகளாயனதிகாரிகளாகக் கோடல் ஒறாஸ்ச் சரியேயோ! சொற்சம்பிரமம் கட்டிமகிழும் சிறியர்குழாம், தனிவழிச்சென்ற திராவிட தேசத்தினரிருவர் வாழைப்பழம் அரடிபண்டு தனிதனி உசிதபதார்த்த மெனச் சொல்வழக்கிட்டு, அப்பழத்தை நேரிலகண்ட மாத்திரத்தானே சொற் சண்டை யொழிந்து சுகிர்தமடைந்த சிறுகதையைச சிந்தித்துய்வராக!

பச்சோந்தி யொன்றைக் காணுதுகண்ட விருவா அறிவீனர் அதன் நிறத்தைக்குறித்து வீணவாதம் தொடுத்து அலக்கண்பட்டு பச்சோந்தியின் நிறம் மாறலைப் பண்டுணர்ந்த மூன்றாமொருவன் இந்நூதனவிவேகிகட்கு புத்தி பண்ணியபோது க்ஷேமம அடைந்து ஞானக்ஷாம மொழிந்த ஹிதிகாசமுமன்றே சிறுசமயச் சிறவரிடம் சமர்ப்பிக்கத் தக்கதாயுள்ளது, ஓர் பெருஞ்சாலையினிடையிலமைக்கப்பட்ட பிரதிமை யேந்திக்கிடந்தவேலொன்றைப் பரஸ்பரம எதிர்முகமாகச்சாலையிற் சந்தித்த இருவர் குதிரை வீரர்தனித்தனி இதுவெள்ளிவேலே! இதுதங்கவேலே! என்று அறைகூவிச் சண்டையிட்டு வலியற்று வீழ்ந்தனராக அந்தப்பிரதேசவாசி யொருவன் அவண்போந்து நிகழ்ந்தவிஷ

யங்களை யுணர்ந்து அவர்களறியாமைக்கிரங்கி அப்பிரதிமை தாங்கியவேலின் இருபுறத்தையும் மதியிழந்த அவ்விருவர்க்கும் காட்டி.

ஞானசுடர் கொளுவிய சிறுகாதை யொன்று ஐரோப்பிய தேசங்களிற் கர்ணபரம் பரையாய் வழங்கி வருவதையும் மதச்சண்டைக்கு முந்தும் விவேகிகள் சிந்தித்துய்வராக.

யாதொரு கட்டிடம் நூதனமாயமைக்கப்படும் காலத்து, அதன்மேல் மாடியின்கண் தொழில செய்யவேண்டி ஒருவன் அம்மேல் மாடியை நூலேணி கொண்டும், ஒருவன் அக்கட்டிடத்தைச் சார்ந்தபடி வழியாலும், மூன்றாவான் ஒருகோல் கொண்டும், நாலாவான் ஓரகயிற்றின் வழியிவர்ந்தும் சேர்வதுபோல் ஜகதீசனை அனந்த மார்க்கங்களான் அநந்தயார்க்கங்கள் அடைவான்முயலு மென்பது விசதப்பட்டது போலும்.

"வேறுபடும் சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளே நின்விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோனவாரிதியாம்
நதித்திரள்போல் வயங்கிற்றம்மா."

என்றார் தாயுமானாரும். தமிழும் தமிழ்நாட்டுச் செல்வர்களும் இழைத்த பெருந்தவத்தின் பயனாகத்தோன்றிய வித்தவவடிவினர் வேறவசரங்களிற் கட்டளை யிட்ட "சைவசமயமே சமயம்", "வைதிக சைவ மழகிழதந்தோ", "இச்சயம் போலின்று" என்பனவாதி உண்மைகளை அறிஞர் சிந்தித்துத் தெளிந்திடுவராக, இஃதந்நிபூதி மான்களிடம் குருமுகமாய்க் கண்டுணரத் தக்க தோன்றும். கிழக்கு மேற்கறியான் வழக்குப்பேசப் புகுந்தானென, சமயநெறி சிறிது முணரப்பெறாத சிலபாலிசர் இத்தகைப் பெருந்தகையாரது தூஷணையையும், ஸ்ரீயப்பதியின தவதார விக்ரஹங்களாய் விளங்கிய ஸ்ரீ ராமபிரான், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி முதலியோரது தூஷணையையும் பாலும் பழமு மெனக்கொண்டுழலா நின்றனர். அம்மம்ம! அவர் கொடுமை யென்னே! என்னே! பிருந்தாவனத்துக் கோபிகைகளிடமாகக் கண்ணன் நடாத்திய லீலையை அன்பிலாப் பேதை மாக்களோ அறியவல்லார்!

"ஆபிர மடைந் தபராதம் தோய்ந்து நான்
தூயனென்று மால்சூளுற சாற்றினன்
காயமுங் கரணமுங் கடந்த தன்மையால்
நீயுமந் நிலையிலே நிற்கப்பாலையே"

என்று சிவஞான வள்ளலார்கட்டளை யிட்டபடியும். மெய்யன்பரென நடித்து வாய் ஞானம் பேசி காயாதி தோஷ வசத்தராயுழன்று நிரயப்பாழடையும் பாமரரோ பகவான் திருவிளையாட்டை யுணரவல்லார்.

**பிரஸ்தா நத்திரயத்தி** லொன்றாகப் பேசப்பட்டு வர்த்திக்கும் கீதையிற் போந்துள விஷயங்கள் ஒரோவழி யொன்றை யொன்று விரோதிப்பதாகக் கண்டு கண்ணிழந்த ஸ்தூலவறிவினரோ கீதாசார்யன திருதயத்தை யுணர்ந்தனராவர். தர்க்கம், வியாகரணம், நியாயம், மீமாஞ்சை யுணர்ந்த மாத்திரத்தானே கீதை அநதிகாரிக்குப் பிரகாசமாகுங் கொல்? அதிதீவிரபக்கு விகட்கன்றோ ஸ்வாநுபூதிச் செல்வர்கள் அதன்கட் பெறப்பட்ட கூடார்த்தங்களை வெள்ளிடைமலைபோல் விளக்கிக் காட்டுகிற்பர். எனவே பக்குவஹீனர்களான ஞானசூன்யர் தெய்விக நூல்கள் விஷயமாய் அவசர புத்தியால் மூர்க்க சித்தாந்தம் செய்யாதடங்குவதே புததியென்பதை யீண்டைத்தெரிவிக்கின்றாம். நிற்க:—சமயப்பொறுமை வளர்ப்பான் மற்றும்பல புண்ணியர் எடுத்தோதிய பாசுரங்களையும் எடுத்துக்கொண்ட விஷயத்தை ஊர்ஜ்ஜிதப்படுப்பான் கருதியுதகரிப்பாம்.

"விலகி வீழருவித்தாரை வேறுவேறாகவோடிக்
குலநதிப்பாலி வைப்பினேகமாய்க் கூடுந்தோற்ற
மலகில் பல்வழியு மூதாரணிமையி னொன்றுமாறும்
பலபல மதமுமீற்றினொரு வழிப்படலும் போலும்."

என்று சைவசமயத்தைப் பிரகாசப்படுத்திய சிவஞான முனிவர்கள் கூறினின்றனர்.

"வேதம்பல் பக்குவமோர்ந் தொரு வீட்டினுக்
கோதும்பல்லாற் றனுமூந் தீபற
உண்மை கண்டார்க் கேகமூந் தீபற"

என அவிரோத வுந்தியாரின் கட்போந்துள தொடர்களும் ஆரியர் சகோதர வாஞ்ஞையை வளர்க்கத்தக்கதாயுள்ளது கண்மின்!

"அருள்வித் திட்டுக்கருணைநீர் பாய்ச்சி
வேதமென்னும் பாதபம் வளர்த்தனை
பாதமதனிற் பாடுபயன் பலவே

அவற்றுள்

"இலைகொண்டு வந்தனர் பலரே இலையோ ரிஇத்
தளிர்கொண்டு வந்தனர் பலரே தளிரொரி இ
யரும் பொடுமலர் பிஞ்சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டு கொண்டுவந்தனர் பலரே."

என்ற ஞானத்திருவாளர் அருளுபதேசமே யன்றோயாவரும் பரமோபதேசமாய்த் தழுவத் தக்கதாயுள்ள துணர்வீர்,

இலை, தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, காய், என்பன பற்பலர்க்கு அவ்வவ் வமயத்து இன்றியமையாதனவா யுள்ளன வென்று கோடல் ஸர்வஸம்பிரதி பந்தமேயாம்.

பேதை மாக்கள் கடவுளைக் கொடுங்கோன் மன்னனெனக் கண்டஞ்சி யடங்கி நடந்ததொரு சமயம். ஜீவகோடிகள் ஈசனை யன்புடையண்ணலாக் கொண்டடிமை செய்தின் புற்றதொரு சமயம். விற்பந்ந விவேகிகள் பலர் நம்மப்பனை எந்தாய் தந்தாய் என்றுபணிவுடன் சேர்ந்து போற்றியதொரு சம யம். வித்யாசாகரங்களான பண்டித சிரோமணிகள் சிற்சிலர் அம்மையே யன்பேயென் றரற்றியதொரு சமயம். இராகாதிகள் முற்றுமொழிந்து விராகமே வடிவென நின்ற வெம்பெருமக்கள் அகிலலோக சரண்யனைத் தத் தம் செல்வமக வெனப்பாவித்தழைத்துச் சந்தோஷித்ததொரு சமயம். பக வானைப் பாஹ்யேந்திரியங்களாற் பகிரங்கப் பிரதிமைகள் துவாரா சரியையா திகள் செய்தடைந்து மேன்மையுற்றோர் நூற்றிலொருவர். அந்தஸ்ஸத்வ முதிர்ச்சியான் தம்மனவாலயங்களில்சிற்சபேசனது அருவுருவத்திருமேனியை பிரதிஷ்டை செய்துப் பூசித்துப் புனிதரானோர் ஆயிரத்தி லொருவர். தூரஞ் சமீபமாய், யாவுமாயல்லவாய நின்ற நம்பனை இன்னுயிர்த் தோழனாய்க் கொண்டு அவனது திவ்ய சாந்நித்தியத்தை யடையப்பெற்ற சிறந்த மேதாவி யர் பதினாயிரத்திலொருவர். உள்ளன்புள்ள மாதரே யென்னச் சரண்யனைத் தம்பிராணபதியாய்ச் சிந்தித்து அவனது கருணை வடிவைத் தழுவாது தழுவிக் கலந்து சுகித்தோர் லக்ஷத்திலொருவர். சச்சிதாநந்த வருட் பெருங்கடற் படிந்து, தாமொழிந்து, சிவாநுபூதிச் செல்வராய் விளங்குநர்கோடா கோடியி லொருவர் கண்டீர்!

சிருஷ்டியில் ஒரு நிமிஷநேரமேனும் ஒரு சிறு பரமாணுவும் செயலற்றுக் கிடப்பது கூடாமையாமே! இருந்தவிடத்தே ஓரல்ப பதார்த்தமும் இருந் தேயொழிவதும் கூடாமையாமே! முக்திஸ்தான மொன்றே சலநமற்ற தென்றபடி. ஒவ்வோர் பதார்த்தமும் தினேதினே சந்தர்ப்பத்திற் கேற்றபடி அதனதன் கர்மபரிபாககாரணமாகத் தக்க பரிணமிப்படைந்தபடியே விஸ் ராந்தி ஸ்தானத்தை நோக்கிச் செல்லுமன்றே!

**சித்சடம்** :—என்ற சொற்றொடர சொன்மாத்திரத்தி லுண்மையாகு மேயொழிய விசாரணையில் சித்தென்றும், ஜடமென்றும், இதுவென்றும், அது வென்றும் எது வென்றும் கணிக்கலாகாததூஉம், அவசர பேதத்தான் **சித்சட** தர்மர்களை யுடையதாய்க் காணப்பட்டும், சிஜ்ஜடங்களை யூடுருவி நின் றும், சிஜ்ஜடாதீதமாயும் ஒன்றை யெதிரிட்டறியும் சிற்றறிவாகாது அறிவே தத்ஸ்வரூபமாயும், தாமொழிந்து ததாகாரமாய் நின்ற நிர்ம்மல வறிவினர் க்கேஅநுபூதி மாத்திரத்தானே விளங்கக்கூடியஅவாங்மநோகோசர பரவஸ்து

வாகும் பெருவாழ்வின் மாயாவிபூதியாம்இந்திர ஞாலக்காட்சியே யாமென்ப. கேவலம் ஜடமா யிப்போது தோன்று மவையாவும் ஒருசமயம் தாவரப்பொருளாக மாறியேவரல்வேண்டும். இயற்கையின் சுபாவ ் யீண்டையோ துதும். இக்கணம் தாவரமாய் நிற்குமவையாவும், ஊர்வன, பறப்பன, கிடப்பனமுதலிய ஜந்துவர்க்கங்களாக மாறியேயொழியும். அவ்வவை மிருகாதிகளாய மேல்வரும் காலமொன்றுண்டு. அவ்விலங்காதிகளே காலாந்தரத்தில மக்கள் யோனியிற் சனிக்கும், மொத்தத்தில் மானிடக்குரங்காதிகள் நீடூழிகாலம் பிறந்திறந்தலக் கணுற்றே சிற்றறிவும் அடையப் பாலனை வென்ப. மக்களிற் சாமான்யராய்க் கிடப்பவர் மேல்வரும் ஜநநங்களிலாயினும் மேலோராய் விளங்குவர். முதிர்ந்தவறி வெய்தியோருள் அதி தீவரபக்குவத்தை யடையாத காம்ய கர்மாநுஷ்டர்கள் ஸ்வர்காதிபதவிக ளெய்திச் சுகித்து அவையும் வெறுத்து மீண்டும் கர்ம பூமியிற் பிறந்து யோகிருந்து மெய்ஞ்ஞானமடைந்து பரனடியடையாநிற்பரன்றே? நிஷ்காம்ய கர்மாநுஷ்டாநப் பிரவர்த்தகர்களான பிரமுகர்கள் நிகழும் ஜநநத்திலேயே ஜீவன் முத்தர்களாய் விளங்கி இல்லறத்துறவை நடாத்தியும், அல்லாக் கால் புறத்துறவுக் கேற்பவகத்துறவும் பூண்டு அவதூதாதி யாசிரமங்களை யவலம்பித்து மிகுந்துநின்ற பிராரப்தத்தின் பயனுக நேர்ந்த தேகம் நழுகிய போழ்தத்துச் சிவத்திலிரண்டறக் கலந்து பிறப்பின்மையெய்திச் சுகிப்பர் கண்டீர். இம்மண்ணுலகத்தே அவ்வபபோது தோன்றி நிலவிய ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு பக்குவத்தை யுத்தேசித்து ஒவ்வோரவசரங்களில் பற்பல நன்மைகளை நாடியே யெழுந்த தென்றபடி.

தேனுண்ணும் குழவிக்குச் தேனும், பாலுண்ணும் குழவிக்குப் பாலும், சோறுண்ணும் மகவுக்குச் சோறும் ஊட்டியுபகரிக்கும் தாயே யறிவாள் தம்மக்கட்குப் பிரயோசனமாகும் பதார்த்தங்களை.

அவள் தேகாரோக்யம்பெற்ற தஞ்சிறுவனுக்குச் சிற்றுணக்கொடுத்து, பிணியுற்றதஞ் சிறுமிக்குக் கைக்கு மருந்தை யூட்டியது அவளது காருண்யமாகாமலென்னுங்கொல் ?

கீதையில் பகவான் சமயங்களெல்லாம்முத்துக்களாகவும்,தாம் அவற்றின் கோவைக் காதாரமாகிய சரடாகவு மமைந்துள்ளா ராகக்கூறிய உண்மை மேலே உதகரித்த உண்மைகளை நிறுத்தியவாறறிக. எனவே, நம்மதம் எம்மதித்திற்கும் சம்மதமென்பது நிஸ்ஸந்தேகம். எல்லாமா யல்லவுமாய் நின்றபடியால் அம்மதமோ எவ்விதத்தினுலேனும் ஜீவகோடிகள் பாழாகாது பயிராய்த் தழைக்கவேண்டு மென்பதையே மேற்கொண்ட தொன்றெனக.

" எம்மதத்தோர் எவ்வகை நிட்டை சொல்லினும்
சம்மதமே யெமக்குந்தீபற
தற்போதமாய்க்கு மேலுந்தீபற "

என ஆன்றோர் கட்டளையிட்டுள்ள சமய நலம் நாம் எடுத்துக்கொண்ட விஷய த்தை முற்றும் ஆதரவு செய்ரதென்க. செய்யாது விடலெவன்? மேற்புல பூத பௌதிக சாஸ்திர சாகைகளும் அவை யொழியக்கிடந்த கலை ஞானக் கடல்களு மன்றே இற்றை ஞான்று வேதசிரசில் துலங்கும் நஞ்சமயாதீதப் பெரும்பேற்றைப் பூசிப்பனவாயின.

சூந்யத்தினிடமாகப் (பிரளயாநந்தரம்) பிரபஞ்சத்தோற்றங்கள் வெளிப் படும் கிரமத்தில், பிரகிருதத்தில், தனிப்பெருஞ் சுடர்ப்பிழம்பு உதயமாக, அதினின்றும் கமனுகமனச் சக்தியால் அஃதிறுகியோர் வட்டவடி (Circular form) வெய்திய போழ்தத்துப் பல சிறு துண்டுகளாக அதின் சிற்சில பாகங் கள் எறிசக்தியால் பூதாகாச வெளியினிடமாக வீசி எறியப்பட்டன வென்றும், அநந்தரம் (அன்னணம் வெளிப்போந்த பேரொளிப் பிழம்பின் பழைய பகுதி கள் தாமே பல கிரகங்களாய் அவ்வவ்விடத்துப் பரிணமித்து இறுகிய அவ் வொளிப் பிழம்பே சூர்யனும் ஏற்ப: அச்சுடர்க்கிரஹத்தைச் சுற்றிச் சுற்றி ஒரு வித கவர்ச்சிச்சக்தியால் சலியா நின்றனவென்றும் வானசாஸ்திரம் முழங்கு வதை யூகித்துணர்வார்க்கு மேலே பிரஸ்தாபித்த பலகோடி சமயங்கட்கும் உயிரென நின்று அவையிற்றை அவ்வவ்வங்கங்கட்கேற்ப வாடல் கண்டு இறுதியிற்றன் மயமாக்கிச் சுகத்தை யூட்டும் ஒரு பெருஞ்சமயம் எந்தக் காலத் தும் எந்தத்தேசத்தும் மலையிலக்கென்னப் பெறப்பட்டு நின்றதென்ற உண் மை உதயமாகுமன்றே.

> "தன்னுளே திரைத்தெழுந் தரங்க வெண்டடங்கடல்
> தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
> நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
> நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின் கணின்றதே"

என்ற திருமழிசை யாழ்வார் திவ்யவாக்கானும் இவ்விஷயம் இனிது போத ரும்.

தமது சிஷ்யவர்க்கத்தினது இளம்பக்குவத்தை யுத்தேசித்து ஆரம்பத் தில் "ஹே! பரலோக பிதாவே" என்றற்றொடக்கத்துபாசனையை வளர்ப் பான் போதித்த தேவகுமாரன் ஏசுகிறிஸ்து, அநந்தரம் "அஹமேவ பிதா மஹ:" வென்று கூறி "அஹமேவ பரமாத்மா" வென்றோதியதும், "தேஹோதேவாலம்" என்றுணாத்தியதும், தந்தேகத்தை முடித்த கொலைஞரை வாழ்த்தித் தம் தெய்விகத்தை நாட்டிய மரபும், மகம்மதியரி லொருசாரார் சூபீஸ் என்ற வகுப்பினர் "அநல்ஹக்" என்ற மந்திரத்தை ஆண்டுவரும் நேர் மையையும், கான்ட் (Kant) என்ற ஜர்மானிய தேசத்து விஞ்ஞானியாவார் காலதேசாதிகள் விஷயமாய்ச் செபத சித்தாந்தத்தையும், ஹக்ஸ்லி, டிண் டால் (Huxly, Tyndall) முதலிய கலைஞானச் செல்வர்கள் செய்த சிறந்த

பெருநூற்களினது முடிபையும், கீத், சோபனர், டெனிசன், கார்லைல், எமர்சன் டால்ஸ்டாய் (Soethu, Schopenhar, Tennyson, Carlyle, Emerson, Count, Tolstoi) முதலியோராய பிரபலகவீஸ்வரர்களுடையவும், தத்வ ஞானிகளுடைய ஹ்ருதயத்தையும் இற்றைஞான்று அறிவான தெய்வத்தை அறிவாய் நின்று அறிவாலடைவான் சராசர சேதனசேதன விசாரணை முடித்துப் பிண்டத்தை யொத்தது பிரஹ்மாண்ட மென்றுணர்ந்து, அகம்புறமற்ற வறிவினுக்கு அகத்துலகும் புறத்துலகும் ஆபாசமாமென்று நிர்ணயம் செய்து, தேகத்தை யானென்றுந் தத்துவங்களினது செயலை யென தென்றுமபிமானிக்கும் மாயாபிராந்தி யொழிந்து, தத்துவ நியதிகளேந்து, எஞ்சி நின்ற தன்னைத் தரிசித்து, அன்னணம் நேர்ந்த தற்றெரிசனையால் மகா வாக்யங்களின் லக்ஷியார்த்தம் வெளிப்பட இன்பதுன்ப சுகதுக்காதி துவித பதார்த்தங்களி னர்த்தத்தில் மயங்கிய அஹம் பொய்க்கனவா யொழிய, உண்மை யறிவாநந்த வடிவாம் பரிபூரணத்தலைவனே தானாக விளங்கப்பெற்று; சஜாதி விஜாதி ஸ்வகதபேதமற்று மங்கலவடியாய் நின்ற சிவத்திலிரண்டறக் கலந்து சிவோக மென்றிருந்திடலே ஞானத்தின் வரம்பாகு மோக்ஷமாகுமென்று பக்குவிகட்குபதேசித்த பரமாம்ச மூர்த்தத்தினது திருவருட் பிரசாதத்தைப் பெற்றுப் பொலிவுற்று உலகெங்கும் அரியேறெனை வேதாந்த கர்ச்சனைசெய்த எங்குருமணி ஸ்ரீமத் விவேகாநந்தப் பேராளன் ஐரோப்பா அமெரிக்கா முதலிய கண்டங்களிலடைந்துள்ள அபார கௌரவங்களையும் ஆழ்ந்து யோசிக்கும் புத்திமான்கள் எம்மாற்றுணியப் பட்ட விஷயத்தை முற்றுமே யாமோதித்து இன்புறுவரென்க.

என்றால் மேற்கூறிய யாவும் வேதசம்மதமேயாம். அவ்வேதமோ யாண்டும் யாவர்க்கும் பொதுவாயுள்ளதன்றே! ஆன்மகோடிகட்கெல்லாம் அஃதே தாரகமன்றோ? அதை விரோதித்த கொள்கைகள் யாண்டும் மருந்துக்கும் கிடையாவே. அஃதான்மாக்களது பரிபக்குவத்தை யறிந்தன்றோ அவ்வவைகளை அறிவையூட்டிப் போஷிக்குமென மூதறிவினர் பேசாநிற்பர். வேதம் அநுசிதமென்பார் அதைச்சார்ந்தெழுந்த ஆகமாதிகளைத் தழுவிக் கொஞ்சலெவன்? வேதத்தினதந்தத்திற் பிரகாசிக்கும் உண்மையைக் கடந்த சித்தாந்தமொன்றுதலை யெடுத்தாடலொண்ணுமோ?

சத்தியமும் நித்தியமுமாய் வேதத்திற்கு விருத்தமான தந்திரமொன்றுளதேல், அஃது அறிவாகிய யந்திரத்திற் படுமேல் சின்னபின்னப்பட்டொழியாதோ? அபௌருஷயமான சுருதிகட்கு பாஹ்யமான போலிச்சாத்திரமொன்றெழுமாயின் அதை யாவரங்கீகரிப்பர்?மேற்புல விஞ்ஞானிகள் கொள்வரோ? பூதபௌதிக சாஸ்திரிகளது சதசிலஃதேறுமே? வேதத்தினந்தமாயுபநிஷத்தென்று துதிக்கப்பெற்று, சுயம்புவாயும், சுயம்பிரகாசமாயும், சிவப்

பிரசாதமாயும், பிரணவாகாரமாயும், பிரணவத்தினதுட் பொருளாயும்,விளக்க முற்றுத் தத்வஞானிகளால்தழுவப்பட்டு முத்திக்கு வித்தாய் முடிந்த பதத்திற்கும் மாறான கருத்தொன்றுலவுவதும் உசிதமேயோ ? திருவருள் கடாக்ஷிக்க உண்மையுணர்ந்து சாக்ஷாத்காரானுபவத்தால் பரமாத்ம தெரிசனைசெய்து பெருவாழ்வடைந்த பெரியர் உலகமுய்யுமாறு ஜடஜீவபரபேதா பேத சம்பந்தா சம்பந்த முதலிய இன்னோரன்னவற்றைத் தெரிவித்துள்ள முதல்நூலேவே தம். முதல்வனையறிவிக்கும் நூல் முதல்நூல் என்று கோடலும் எற்புடைத்தே காலாந்தரங்களிற் புராதன மதப்பிர வர்த்தகர்களாய் விளங்கிய பெரியோர் யாவரும் அவ்வப்போது கூறிப்போந்த யாவுமே வேதமெனக்கோடல் அமைவுடைத்தென ஸ்ரீமத் விவேகாநந்த ஸ்வாமிகள் பற்பல வவசரங்களிற் கூறியுள்ளார்கள். ஒருகால் நடந்த சம்பவம் மறுபடி மறுபடி ஏனோ நடக்கக்கூடாது? பரதகண்டத்தினர் நீங்கலாக வேனைய கண்டத்துப் பிரஜைகளை கடவுள் (அவர் சிவனாகட்டும், விஷ்ணுவாகட்டும், மற்று யாவராகட்டும்) யாண்டும் ஆட்கொள்ளாது கைவிடுதல் அவர் அபார கருணைக்கழகேயோ !

புத்தரென்ன, கன்பியூசியஸ் என்ன, ஜொரோஷ்டரென்ன, கிறிஸ்துவென்ன, மகம்மது நபியென்ன, இன்னோரன்ன ஞானதாதாக்கள் ஒவ்வொருவரும் வேதங்களையே அருளிச்செய்தனர்களென்பது உத்தம சாதுக்களினது சர்வோத் கிருஷ்டமான சித்தாந்தமேயென்க. அதா அன்றியும், மேலே நாம் பிரஸ்தாபித்த மேதாவிகள் ஒவ்வொருவரும் பழைய சமயத்தையே தாங்கள் போதிப்பான் வெளிப்போந்ததாகவும் கூறியுள்ளநேர்மையும் நாம் சிந்தித்துய் வோமாக. கீதாசாரியன் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலநத்தை யுத்தேசித்தும், அதர்மத்தை யொழித்துத் தர்மத்தை யோங்கச் செய்வான்றிருவுளங் கொண்டும், காலாந்தரங்களிற் றாமே அவதரிப்பதாகப் பார்த்தனுக்குக் கூறிப் போந்த வவசரத்தை யாம் யீண்டைத் தெரிசித்தலத்தி யாவசியமன்றே ? மீண்டும் ஒரோவழி கண்ண னெம்பெருமான் எங்கேயெங்கே அபாரசக்தி வெளிப்பட்டுப் பிரஜைகளை யிழுக்குமோ அங்கேயங்கே யாமேதேன்றியுள்ளதாக உலகம் காணுமாக வென்று அறைகூவிய பெற்றியையும் யாம் யிவண் எடுத் தோதினுமென்க !

"ஆத்மாவாரே ! திரஷ்டவ்யோ !
சுரோதவ்யோ ! மந்தவ்யோ ! நிதித்தியாசிதவ்யஸ்ச"

என்ற பிருஹதாரண்யத்து மந்திரமன்றோ மேலே உதகரித்த கீதையினது 4-ம் அத்தியாயத்து முற்பகுதியிற் பெறப்பட்ட மந்திரசிரவணுநு சந்தான விஷயமாய்ச் சமர்ப்பிக்கத் தக்கதாயுள்ளது காண்மோ ! இத்யாதி அத் யோத்கிருஷ்ட சுருதி பஹுளங்களை மேலோர் எடுத்தாளக் கண்டும், கேட்

டும் அநந்தரம் துவேஷ புத்தி வசத்தராய்க் கிறிஸ்துவாதிப் பெரியோரை வேத பாஹ்யர்களெனக் கோடலமை வுடைத்தேயோ?

எனவே, **வேதம் அநாதி** என்றெழுந்த கூற்றின தர்த்த புஷ்டியானது, அஃது சிவப்பிரசாதம், விஷ்ணுப் பிரசாதம் எனப்பிரசங்கிப்பதல்ல. மந்திரத் திரஷ்டர்களினது திருவாக்கு: பிரஹ்மக்கியானிகளினது கூற்று: சிவாநுபவச் செல்வரிட்ட கட்டளை: பரமபதநாதனை வந்திந்தேத்தும் புண்ணிய மூர்த்தங்களினது ஸ்வாநுபவம் - என்றென்றே கொள்ளக் கிடந்தமையைக் காண்க.

"சிவம் அத்வைதம் சாந்தம் சதுர்த்தம்"

என்ற மாண்டூக்கியத்து மந்திரத்தொடரிலும்

"தத்விஷ்ணோ! பரமம்பதம்"

என்று பெறப்பட்ட கேனோபநிடதத்தினது மந்திரப்பகுதியினும் போந்துள்ளசிவ:—விஷ்ணு: என்ற சப்தங்கட்கு அதிஷ்டான தேவதையா யுள்ள பராபரவஸ்து வருவதுமல்ல, போவதுமல்ல, ஆடுவதுமல்ல, ஆட்டுவதுமல்ல, உண்பதுமல்ல, ஊட்டுவதுமல்ல, சொல்வதுமல்ல, கேட்பது மல்ல, நிற்பதுமல்ல, நடப்பதுமல்ல, என்றசத்தியங்களை வேதாதிகள் எஞ்ஞான்றும பறையறைவதை யுணர்ந்தும் யாம் சிவத்தையேனும் விஷ்ணுவையேனும் சுட்டறிவிற்கு விஷயமாகக்கூடிய கண்டவடிவினராகப்பேசவும் வாய்கூசுமன்றே! பிரபஞ்சத்தை சிவகாரமெனக்கொண்ட வைதிக உத்தம சாம்பவரன்றோ இதை யங்கீகரியாநிற்பர். முத்தியிலும் முப்பொருளைவிடாது தொடர்ந்த துவைதிகளன்றோ சிவோத்கர்ஷ நூல்களைவைக்கும் அபார்த்தம்கூறி அபராதத்திற்குள்ளாவர்காண்டிர். அற்றேனும், அநாதிநித்யத்வம்பெற்றமுப்பொருளுண்டெனல் வேத விரோதமென்றால். வேதத்தைத்தானும் அநாதியென்று கோடல் யாங்ஙனம் ஏற்புடைத்தோவென ஆசங்கித்தால் நன்று கடாயினாய் யாம் வேத வேதாந்தத்தை யநாதியென்று கொண்டோ மேனும், அவ்வேதவேதாந்தங்கட்குச் சிவத்தை யல்லது பிரம்மத்தை யல்லது நாராயணனையன்றி அவகாச மில்லையென முடித்தோமாக:—சிவத்திற் கிரண்டாவதும், அநாதி சத்ய நித்யத்வ ஸ்வயம்பிரகாச பதார்த்தமென வொப்பிய தில்லையில்லை யென்று கூறிமறுத் தொழிக்க.

என்னணம் பூமியினது கிராஹ்ய கவர்ச்சிச் சத்தியானது மக்களதை யறிந்தவிடத்தும் அறியாதொழிந்த காலத்தும் வொரு படித்தரமாய்க் கிடந்ததெனக்கோடல் உண்மையாகுமோ அன்னணமே, சிவாநு பூதிச் செல்வர் ஏராளமாய்ப் பெருகியுள்ள போழ்தத்தும், அன்ன செல்வவான்கள் கிடைப்ப

தருமையாய்க் கழிந்தகாலத்தும், யாண்டும் **சிவஞானம்** இல்பொருளா யொழிந்ததோர் காலவரையறையில்லை யில்லை யில்லையே யென்னும் சித்தாந்தத்தை யவலம்பித்து வேதம் அநாதியெனப் பேரியோர் கூறுகிற்பர் கேட்டிர்! எனவே, ஸ்வர்க்காதி போகபோக்யங்களை யடைவான் யாகாதிகளை விதித்த வேதத்தினது கர்மகாண்டத்தையும், சித்த சுத்தியை யடைவான் சரிதையாதிகளை விதித்த அதன் பக்திகாண்டத்தையும், உபயகாண்டங்களைத் தழுவி நின்ற இதரசாகைகளையும், அதனைந்தத்திற் பெறப்பட்ட ஞானகாண்டத்தினது உபதிஷ்டத உண்மைகளைநோக்க சாமான்யப் பிரயோசனத்தையேதரத்தக்கன வெனவும் முடித்தனராரியர்.

பக்திகாண்டத்தான் கர்மகாண்டமும், ஞானகாண்டத்தான் முற்பட்டவவ்விரண்டும் பூர்வபக்ஷமாகுமென்றபடி. என்றால் பிரகிருதத்தில் ஆரியர் அநுஷ்டானத்திலிருந்து அதன்கட்பெறப்பட்ட சந்திராதித்யராதி விக்ருதிப் பூசைமுதலியன உபதிஷ்டத மந்திரங்கள் பிற்பட்டுச் சித்தாந்தமானபோது பூர்வபக்ஷப்படுத்தப்பெற்றன வென்ப தொருதலை. மொத்தத்தில், வேத சிரசிற்றுலங்கும் சத்தியத்தையே வேத சம்பந்திகள் யாவரும் வேதமெனக் கொண்டார்களென்பது பல பிரபல பண்டித பண்டிதைகளி னபிப்பிராயம் போலும்.

என் மதமொன்றே சத்யம். உன்மத முழுவது முன்மத்த மெனப்பரக்கக் கூறி வெளிப்போந்த தற்போத சம்பந்திகள் யாவருமே அமெரிக்கா கண்டத்தினர்க்கு ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமிகள் எடுத்தோதிய மண்டூகக்காதையைச் சிரவணஞ் செய்து கிருதார்த்தர்களாக வேண்டி யவர்களா யுளரென்று யாம் அபிப்பிராயப்படுகிறோம். கர்ண பரம்பரையாய வந்த அச்சிறுகதை வருமாறு :—

பாழ்ங் கூபமொன்றன் கட்பன் னெடுநாள் உயிர்த்திருந்த மண்டூகம் ஒன்று ஒரு சிறுபோதும் அக்கிணற்றுலகன்றி மற்றொன்றை அறியும் ஆற்றலின்றிக் கிடந்ததாக :—அசந்தர்ப்பமாய்ச் சமுத்திரத்துத் தவளை யொன்று ஒரு சமயம் ஆண்டு விருந்தாய வந்து சேர்ந்ததாம். அங்ஙனம் போந்த **விருந்தை** நோக்கி கூபத்துதித்தது உனதிருப்பிடம் யாதோ? யாண்டையதோ? எத்தகைத்தோ? என்ன எழிலமைந்ததேயோ? என அவசரத்தோடு சாவியதாம். மற்றது, யான் சாகரவாசியென விடையிறுத்து மகிழ்ந்ததாம். நாட்டு **வளப்பத்**தை யெஞ்ஞான்றும் எட்டுணையும் அறியாது கிடந்த கிணற்றுத்தவளை சாகர விசாரணை செய்வானெழுந்து நீ கூறும் சாகரம் யான் வாழப்பெற்ற இப்பெருங் கூபத்தின தகலம், ஆழம், அழகைப்பெற்றதுண்டோ வென அதி வினயத்துடன் அதை மீண்டுங்கேட்ப, ஆழாழி கண்டது இறும்பூதெய்தி, மந்தஹாசம் தவழ்ந்த நகைகளைப் பிரகாசப்படுத்தி யான் கண்டு வந்த சாகரம் உன்னாலும், என்னாலும், பிறராலும், யாவராலும் இத்துணைச்சிறப்பு வாய்ந்த

தெனக் கணிக்கக்கூடாத தொன்றென்று சமாதானம் கூறியதாம். இதைச் செவியேற்ற சிறுமதி மற்றதனிடம் முற்றும் பிணக்கங்கொண்டு சீ-சீ-நீ கூறலுற்றது முற்றும் அசம்பாவிதமே!

உனததிகப் பிரசங்கம் என் சிறு மூளையிலேறுது ஏறுது! உனது கூற்றிற்கும் எனது சிற்றறிவினுக்கும் இரண்டாயிரம் காவதம் தூரம். எனது கிணற்றினும் (இந்த கிணறுதானும் இந்தத் தலையினது பாட்டன் பூட்டன் சம்பாதித்த பிதுரார்ஜ்ஜிதம்போலும்!) பெரிய பதார்த்தமொன்றிருக்கக் கூடுமென் றொருபோதும் நம்பேன்! நம்பேன்! போ! போ! நின்னை மதியே நின்கண்ணைமயர்கி மறைததுபோலும! நீ க்ஷணமேனும் என் முன்னில்லா தோடியொழியென்ற மூடப்பிரசங்கத்தைச் செய்து விருந்தாய்ப் போந்ததை வெளிப்படுத்தித் தான் வெளிப்படாது அக்கிணற்றுச் சுவர்க்கத தில் காலக்கிரமதகில் மாண்டொழிந்ததாய

"கூவலாமைகுரைகடலாமையைக்
கூவலோடொக்குமோகடலென்றல்போற்
பாவகாரிகள்பார்ப்பரிதென்பராற்
றேவதேவன்சிவன்பெருந்தன்மையே."

எண வெடுத்தாண்ட வாகீசமுனி சிரேஷ்டரது அருட்டிறத்தையும் யீண்டைச் சிந்திப்பதே நமது கடனேயாம்.

நாம் வாழாநின்ற இக்கர்மபூமியின்கண் இக்கதையைப் பிரயோகிக்கத் தக்க ஸ்தானபேதங்கட்கு அளவு சங்கியை இல்லை, இல்லை. மலையிலங்காய் நின்ற பாத்திரங்கள் கோடிக்கணக்கினு மடங்குவரோ? தாமடைந்த துக்கத்தையே யன்றோ பிரஜைகளிற் பெரும்பாலார் சுகம் சுகமெனக் கருதி வாழ்வடையாநிற்பர்? சீனதேசத்தில் ஓர் காலத்தில் ராஜத்துரோகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிட்சையடைந்து இருட்டறை யொன்றனில் நாற்பது வருஷகால மடைக்கப்பட்டுக் கிடந்த பிரபு வொருவர் தம்மைச்சிக்ஷித்த அரயன் இறந்தபின்னர் சிம்மாசனத்தை யடைந்த கான்முளையினது காருண்ய மேலீட்டால் சிறைச்சாலையினின்றும் விடுவிக்கப்பட்ட பின்னா மனுஷஸம்ஸர்க்கத்தையும், சூர்யகாந்தியையும் பொறுதவராகி அரசன் சமுகமடைந்து ஹே! சக்ரேஸ்வர! யான் சுதேச்சையாய்க் காலங்கடத்தலை நாடி ஸ்வதந்திரத்தையுர், இகலோகபோக போகயங்களை வேண்டி ஜன சமுகத்தையும், ஆயுள்விர்த்தி. மனோர்ச்சாகம் முதலிய இன்னோரன்னவற்றையு மீண்டுங் கருதி இந்தப் பிரகாசமான பூமியையும் விரும்பினேனல்லன்! அடியேனை பழைய இருட்டறையின் வாசத்திற்கும், பழைமையான எலிச்சமூக தெரிசனைக்கும், அனுப்பிவைத்து எனது ஸ்வதந்தரத்தையும் ஒழித்துப்போடல் வேண்டும். அல்லாக்கால் எனைக்கோறலே எனக்கின்பத்தைப் பயக்கத்தக்க

தொன்றெனக் கூறிப்போந்த கதையும் துன்பங்களையே இன்பங்களாய்க் கொண்டொழுகும் அறிவீனர் பலரிடத்தும் சமர்ப்பிக்கத் தக்கதாயுள்ள தென்பதை விசதப்படுத்தினுமென்க.

அமராவதிக் கிறைவனாகும் இந்திரன் ஓர் காலத்தில் மகருஷி யொருவர் சாபத்தினால் பெண்பன்றி யுருவந்தாங்கிக் குட்டிச் சேனையுடன் கானகத்தில் வர்த்தித்து வருகையில் அச்சாப நிவாரணகால முணர்ந்த தேவர்கள் அவணடைந்து முன்போலவே அச்சுரேந்திரனை தமதிறைவனாக்கக் கருதியும், மலதேக சம்பந்த தோஷத்தால் குட்டிகண் மீது அன்புபாராட்டி யுழலும் அவ்விறைவனிறையு மிணங்காமை கண்டு தேவர் வெருண்டு அம்மல தேகத்தை வெட்டிவீழ்த்தலும் ஸ்வயரூபம்பெற்ற அவ்விந்திரன் நாணமுற்றானாய்த் தேவர் குழாத்துடன் அமராவதியை யடைந்தனன் என்ற இதிகாசமும் சிறு சமயச் சிறுவர்க்குப் பிரயோசனப்படத்தக்க தொன்றாம். பெரும்பாலார் தாங்கள் அவலம்பித்துக் கிடக்கும் சாமான்யக் கொள்கைகளையும், அற்பவாதங்களையும், சுவல்பதெய்வங்களையும் எத்துணையொருவர் இடித்திடித்துக் கூறினும் நிவாரணம் செய்து சுகப்படச் சம்மதியாக ளென்றபடியாம் அன்றோ ரது சஞ்சித வினையின் பரிபாகம இருந்தநிறம் என்னே யென்னே!

இன்னோருக்கோ இகத்திலமையும் சமயங்கடந்த ஞானம்? இத்தகைப் பெரும்பேதையரோ அறியவல்லார் நம்மனவாக்குக் காயங்களைக் கடந்து நிற்றலையே குணமாகவுடைய குணரஹிதப் பெருங்கடலை!

சமயாதீதமான பழம்பொருளைச் சமயங்களெவையேனும் முற்றிலு மறிவதசாத்யமேயாம்.

"யதாநத்யா: ஸ்யந்தமாநா: ஸமுத்ரே
அஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய
ததாவித்வான் நாமரூபாத் விமுக்த:
பராத்பரம புருஷம் உபைதி திவ்யம்"

என முழங்கும் மறையன்றோ உண்மையை யுள்ளபடியே போதியா நின்றது கண்டீர்.

உப்பாலமைந்த பிரதிமை யொன்று ஒருகால் சாகரத்தை யாழங்காண எண்ணங்கொண்டு அதன்கட்போந்து உருக்கரைந்து மறைந்த சிறு கதை யொன்றை ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸ தேவர் சிஷ்யவர்க்கங்கட் கருளிச் செய்ததை யீண்டைச் சிந்தித்துத் ததாஸ்து கூறுவதே நமது ஒழியாக்கட னென்க. சிவராஜயோகத் தமர்ந்த சிவநேசச் செல்வரொருவரைச் சின்னாள் முன், யாம் எம்மாந்ம பந்துக்களாம் வைதிக சைவர் சிலருடன் சென்று பல்லூழிக் காலம் எம்பெரியோர்புரிந்த பெருந்தவத்தின் பயனாகத் தெரிசித்தோம். அப்போதே அவண்போந்த ஏகேசுவரவாதி யாவரொருவர் அம்

மஹானை நோக்கி "அடிகேள்! ஏழையேன் ஜகதீசனை யுணர்ந்தும் உணரா
தொழிந்தேன்; அவனுண்டென்பேன் ஒரு சமயம்; அவனுண்டோ வென்
பேன் ஒரு வேளை; அவனது சாந்நித்யத்தை யணுகி இகலுறுவேன் ஒரு
போது. அவனைக் காணப்பெறாது அவல முற்றொழிவேன் ஓர் காலம். அடி
யேற்கு நிச்சய ஞானத்தை யருள்வீராக" என விண்ணப்பித்தனராக அச்சிவ
ஞானியார் "அன்ப! நன்று கேட்டி, நின்னைத்தான் நீ யுள்ளபடி உணர்ந்தனை
கொல்?" எனக் கடாக்ஷித்தார். ஆஸ்திக சபையினது சம்பந்தி விடையொ
ன்று மிறுக்காது மௌனஞ் சாதித்ததை யாம் கண்ணுற் கண்டோம். அன்
றொருநாள் கல்லால விருக்ஷத்தின் நிழலமர்ந்து சின்முத்திராங்குசக் கோலங்
காட்டி, சனகராதியோர்க்கு "யத்தச் சப்தோபலக்ஷித:" எனச் சுருதி வந்
தித்த தம்மைக் கொடுத்துத் தாமல்லாதவற்றைக் கெடுத்து உபகரித்த ஸ்ரீ
தக்ஷிணா மூர்த்தமெனச் சைவமங்கலம் தழைக்கப்பெற்று விளங்கிய அப்புனிதர்
மீண்டும் நமதாஸ்திக நண்பரைக் கடைக்கணித்து "ஹே! புண்ணிய! பக
வானை நீ யுணர்ந்து முணராத ததிசயமன்றே! நீ மெய்யாகக்கண்ட பிரபஞ்சத்
தைத் தான் உள்ளபடியே உணர்ந்தனையோ? இந்திரியத்துவாரா வருஞானம்
ஒருபடித்தாயுள்ளதென நம்பததக்கதன்றே! ஒரோவழி, ஒவ்வோரிந்திரியம்
ஒவ்வொன்றைப் பொய்ப்படுத்தி விடுமென்ற சாஸ்திர முடிபை நீ யறிந்த
தில்லைபோலும். பதார்த்தங்களிலுள்ளபடியே யாண்டுமில்லாத குணங்களை
நமதிந்திரியங்கள் கற்பனையாகக் காட்டா நின்றனவென்ற ஐரோப்பியர் ஞா
னத்தை நீயவலம்பித்ததில்லைபோலும். யாண்டும் மாறுதலடைந்தே கிடக்கும்
நாமரூப சகிதத் தோற்றங்கள் விஷயமாய் என்னணம நிச்சய ஞானம் உனக்
குண்டாகும்? மேற்புல விஞ்ஞானிகளெவரேனும் இதுகாறும் ஜடம் இன்
னதென்ன லக்ஷணங்களைத் தானடைந்துள்ளதென வரம்பிட்டு முடிவுசெய்த
தாகக் காணப்படவில்லையே. இந்திரியாதீத நல்லறிவாலடையத்தக்க பிர
பஞ்சாதீதப் பெம்மானைச் சேட்டையில் குரங்கை வென்ற மனக்கருவி கொண்
டெட்டுவதெவன்? மனம் யாணடுளதோ ஆண்டு ஆணவம் குடிகொண்டுள
தாம். ஆணவம் இச்சையையே வளர்க்குமன்றே. இச்சை முக்கியமாய்ப்
பயத்தையும், இதர துக்கங்களையும் விர்த்தி செய்யாது விடுமேயோ? பயத்தை
வழியில் விட்டொழித்துத் தங்குருவுக்குபதேசம் செய்த சறசீடன் கதையைக்
கேட்டி: போலிப் பக்திமான்களது ஹிருதயமெனப் பிரகாசமற்றுப் பேரிருள்
மூடிய நடுநிசிப்போதொரு மூட குருவும் அவரது கள்ளமற்ற உள்ளமே யா
பரணமாகப்பூண்ட புதிய சிஷ்யனும் தனிவழிச் சென்றனராக, ஆணவ போ
தகாசிரியன் ஆணவ சம்பந்திகட் குபதேசித்து ஆணவ விர்த்தியையே செய்து
குரு தக்ஷிணையாய்ப்பெற்ற பொன்முடிப் பொன்றைத் தன் சீடனிடம்
பத்திரப் படுத்தும்படி கொடுத் திருந்தானேனும், அவ்வப்போது அப்
பெருஞ்சாலையினிடம் போந்த பற்பலரையும் விளித்து ஈண்டைப் பயமுள
தாங்கொல் எனக்கடாவிச் சென்றதைக் கண்டிறும்பூதெய்திய இளஞ்சீடன்

நன்று! நன்று! ! எங்குரு ஞானங்கிடந்தவாறு நன்று! எனச் சிந்தித்துத் தன்னிடம் கொடுக்கப்பட்ட பணத்தைச் சாலைப்புறத்தெறிந்து சென்றவன் மீண்டும் அஞ்ஞானம் பழுத்த பாதகன் வழிப்போக்க னொருவனைச் சந்தித்து வழியில் பயமுண்டோ வென உசாவியதைக்கேட்டு அம் மூழ்மகனை யணுகி நீவிர் பயமொழிந்து வாழ்க! யான் பயத்தை வழியில் ஒருகாவததூரத்தில் விட்டொழிந்து வந்தனன். இனி ஹரிநாம சங்கீர்த்தனம் செய்தற்குப் பிரதிபந்தகம் ஒன்றுமின்று என்று கூறக்கேட்ட மந்தபுத்தி மந்த பக்குவமொழியப்பெற்று பக்குவ மக்கணமே யடைந்து தன் சிஷ்யனையே குருவாகக் கொண்டு க்ஷேமமடைந்தனனென்ற கதை யொன்றுலவா என்றது ஆகவே நீ பனக்குரங்கைச் சுலபமாய் வெல்லுதற்குபாயமொன்று கூறுதும். எதை உண்டென நீ நம்பினலும் நம்பாமல விட்டாலும், நன்றன்னையே நீ யுண்டென நம்பாதொழிந்த துண்டோ? நம்பிய நீ உள்ளபடியே உன்னையேனும் உணர்ந்தாயில்லையே. உன்னை நீ யுணரப்பெற்றால் உன்தலைவனையும் நீ யுணரவல்லை. "தத்துவமசி சுவேதகேதோ" வென வெழுந்த வேதத்தை யீண்டைச் சிந்திக்கக்கடவை" என்று மெய்ஞ்ஞானப் பிரசங்கவாரி பொழிந்து அடியோங்களை யாட்கொண்டார். அவரது சிவம்பழுத்த திருமேனியின் எழிலைக் கண்கள் செய்த பாக்கியமாகக் கண்டு, வேதவித்தாம் அவரது வசநாம்ருதத்தைக் காணபுடத்தாலருந்தி ஆனந்தமடைந்த யாம சங்கல்பித்த மாத்திரத்தானே அண்டாண்ட சராசரங்களைப் படைத்தளித்துத் துடைக்கு மாற்றலமைந்த ஏக நாயகனது உபயபாதார விந்தங்களினைதிலங்கணத்தைக் கணமேனும் மறந்துணைப் பேம்! அவனதனந்த கல்யாண குணைதி சயங்களை எப்படி விரிக்கப் புகுவேம்!

"நைவஸ்த்ரீ ந புமா நேஷ நைசவாயம்,
நபும்ஸக: யத்யச்சரீர மாதத்தே,
தேந தேந ஸயுஜ்யதே"

எனவெளிப் போந்துலாவா நின்ற சுவேதாசுவதரம் உணரப் பெற்றுய நம்பிராணபந்துவை, ஆணென்றும், பெண்ணென்றும், அலியென்றும், அது வென்றும், இதுவென்றுங் கூறி வெளிவரல் அடாதடாதென முடித்து விச்ராந்தி யடைவோமாக.

இப்புண்ய பூமியை முன்னொருநாள் ஒருகுடைக் கீழடக்கியாண்ட செங்கோலேந்திய சக்ரேசுவர னொருவன் அக்காலத்தே பரதகண்டப் பிரதேச முழுமையும் தம்பிரசம்ஸை உலாவப் பெற்ற சித்தரொருவரைத்தம் சமூகத்திற்கு வரவழைத்துபசரித்துக் கடவுளைப்பற்றி யேதேனும் அவர் போதிக்கும்படி வரமிரந்தனனக, அப்பெரியாரிற் பெரியார், ஒருநாள், இருநாள், நான்குநாள், எட்டுநாள், ஈரெட்டுநாள், நாலெட்டுநாள், எட்டெட்டுநாள் என்றிரட்டித்த சங்கியையிலடங்கிய பலநாட்டவனை சொலலி, முடிவில் கடவுளைப்பற்

றிச் சிந்திக்கச் சிந்திக்க அவா நீண்டு நீண்டு தூரந்தூரமாகி மறைவதாகக் கூறிய அமிர்தவசனங்களே யாமிவண் எடுத்தாளத்தக்கவை யல்லவோ?

"பாங்குளநாந் தெரிந்துமெனத் துணிந்து கோடிப்
பழமறைக டனித்தனியே பாடிப் பாடி
யீங்குளதென் றுநுகுளதென் றோடி யோடி
யிளைத்திளைத்துத் தொடர்ந்துதொடர்ந் தெட்டுதோறும்
வாங்குபர வெளிமுழுதும் நீண்டு நீண்டு
மறைந்துமறைந் தொளிக்கின்ற மணியே யென்றுந்
தேங்குபரா னந்தவெள்ள மேசர
சிதானந்த வருட்சிவமே தேவ தேவே."

என்றுபதேசித்த குரு மொழியுஞ் ஸர்வஸம்பிரதிபந்நமாயிற்றெண்க. முன் ஞேரெடுத்தாண்ட அற்புதக்கதை மற்றுமொன்றுண்டு. அஃதும் ஈண்டையுத கரித்தலத்யாவசியகமேயாம்.

சித்த சுத்தியடைந்த பெரியவரொருவர் ஒருகாலத்தில் அகிலலோக நாய கனைநோக்கித் தவங்கிடந்து வெகு நாள் கழிந்தொழிந்தும் பகவான் பிரஸந்ந மாகாததை யுணர்ந்து வெறுப்புற்றுத் தேகத்தை யொழித் துயிர்துறப்பான் சமுத்திரக் கரையடைய, ஆண்டுக் கந்தனை யொத்த சுந்தரவடிவினன், சிறு வயதுப்பாலகனொரு குழந்தை பவ்ய லீலை யொன்றனைச் செய்யாநின்றதைப் பார்த்து வியப்படைந்து அவனை நோக்கி, ஹே! குழந்தாய்! இஃதென்னை நீ செய்யலுற்றது! சமுத்திரத்துச் சலத்தை முகந்து முகந்து இச்சிறுபாத்திரங் கொண்டுமணலிற் சேர்க்கின்றனைபோலும். இதனால் நீயடையும்பயன்யாதோ! என்றுசாவினர். சிறுவன் ஐய! யான் இச்சாகரத்தை வற்றச் செய்வான் இன்னணம் கர்மம்புரியாநின்றேன் என்றனனாக, முதியோன் முற்றுமிறும் பூதெய்தி "என்னை! இச்சமுத்திரத்தை நீயோ ஒழிக்கற்பாலை" எனமீண்டும் ஆசங்கித்தார். அதைச் செவியேற்ற சிறுவன் ஐய! யான் செயப்புகுந்த காரி யம் நீவிர பரமேசுவரனை யளந்தறியப் புகுந்ததைவிட ஆச்சரியமேயோ வென் றேற்ற விறையளித்துத் திருவுருக்கரந்தன னென்று கூறுப.

"அன்புசிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்புசிவமாவதாரு மறிகிலார்
அன்புசிவமாவதாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே"

என்ற திருமந்திரம் சித்தாந்தம், வேதாந்தம், யோகாந்தம், நாதாந்தம், போ தாந்தம், என்பனவாதிய யாவத அந்தங்களையும் தன்காப்பததி லடக்கிப் போந்

தனைக்காணுதிர் ! எந்த அந்தநதான் எம்பெருமான் அந்தத்தைக்கண்டு அந்த மடைந்து கிடந்ததோ கூறுவீர்.

“ இன்னதன்மைய னென்றறியாச் சிவன் ”, எனவும், “சித்தமுஞ் செல்லாச் சேட்சியன்காண்க” எனவும் எழுந்த திவ்யவசநங்களைப் “ பக்திவலையிற படுவோன் காண்க” என்றெழுந்த அற்புத அவசரத்துடன் பொருத்திப்பிரசங்கிப்பர் சாதுக்கள்

“ யே யதா மாம் ப்ரபத்யந்தே
தாம ஸ்ததைவ பஜாம்யஹம்”

என்றுபதேசித்த எமதண்ணல், எங்கள் கண்கண்ட தெய்வம், எமகள் மெய் கண்டமூர்த்தம், எம்மனோர் அறம் ஒழியப் பே திதத குருமணி, கண்ணன், கமலக்கண்ணன், கருமுகில்வண்ணன், கருணையண்ணல், எங்கோன், எம்மான லோகசம்ரக்ஷகன், லோகைகநாதன், தீனதயாளு, பார்த்தனுக்குத தன்னிடமே வைகலையைக் காட்டினோன், அவைக்களப்புக்கு அவதியுற்ற ஸ்திரீ ரத்நம் துரோபதைக்கு அஹம்முற்று மொழிந்தபோதே அபயஹஸ்தம்தந்து ரக்ஷித்தோன், சிஷ்டர்கள்சிஷ்டன், துஷ்டர்கள் துஷ்டன், இஷ்டர்களிஷ்டன், போலிகட்கு போலி, திருடருக்குத் திருடன், ஞானிகட்குத் தாரகப் பொருள், அஞ்ஞான விருளையே யபேக்ஷித்து அலமந்து கிடப்போரை அஞ்ஞான ஆஸ்தியை யமோகமாய்த்தந்து ஆடல்காணும் நங்கண்மணி, யாவரிடத்தும் துவேஷமொழிந்து, யாவரையும் கண்ணனுக் காணபோரது ஹிருத்புண்டரீகத்தையே கோயிலாக்கொண்டோன், தன்னையே எநர்தகோன், தன்னையன்றிவேறான சிவனையேனும், பிரமனையேனும், நாராயணனையேனும் அறியாத ஞானவள்ளல்,

“ ப்ரஹ்ம மார்ப்பணம் ப்ரஹ்மஹவிர்
ப்ரஹ்ம மாக்னௌ பிரஹ்மண ஹுதம்,
பிரஹ்ம மைவ தேந கந்தவ்யம்,
பிரஹ்மகர்ம ஸமாதிநா”

என்றெடுத்துரைத்த எம்பெருந்தகைப் பிரஹ்மாகார மூர்த்தம்,

“ மந்மநாபவ மத்பக்தோமத்யாஜீமாம் நமஸ்குரு
மாமேவைஷ்யஸிஸத்யந்தே ப்ரதிஜாநே ப்ரியோஸிமே”
“ஸர்வதர்மாந் பரித்யஜ்யமாமேகம் சரணம்வ்ரஜ
அஹம்த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமிமாசுச:”

என்றற்றொடக்கத்து மந்திரத்தைக் காண்டீபனுக்கு அநுக்ரஹித்துப் பிரபத்தியை யூட்டி யாட்கொண்ட ஞான விக்ரஹம், அண்டாண்ட பகிரண்ட பிரஹ்மாண்ட சராசர சேதநா சேதந பதார்த்தங்கள் யாவும் என்னுடைய லீலாவிபூதியே யாகுமெனக்கூறி யெம்மனோர்சகருளிய ஒரு பெருந்தெய்வம்,

எந்த எந்தக்காலாந்தரங்களில் எந்த எந்தத்தேசாந்தரங்களில் அந்தஎந்தப் பெரியோர் சிவாநுக்ரஹம் பெற்று உண்மையை யிடித்துரைப்பான் போந்தனரோ, அன்னோர் யாவரும் என தம்சமாவரெனக் கூறி அறிவுடை யுலகத்தை ஆனந்த சாகரத்தழுத்திய சச்சிதாநந்த அருட்பெருங்கோலம், மண்ணை யுண்டோன், துவேஷ புத்தி யொழியாது தம்தூஷணையையே பித்ரார்ஜிதமாகக் கொண்ட பாதகரை மண்ணையே யுண்பிப்போன், மாயன், முழுமக்கட் பதரை மயக்கி மாய்த்து முனிமக்களேற்றை முப்போதும் அடைந்து கிடப்போன், கலாஞான மஹறைதசுவர்யவான்கள் யாவராலும் இற்றை நாள் ஆதியநாதி என்றே துதிக்கப்பெற்றோன, சதாசார்யன், பிரஸ்தாநத்திரயத்தில் சிரோ பூஷணமாய் விளங்காநின்ற கீதையில் கடுகைத் துளைத்துக் கடலை யடைத்தென்னச் சதுர்வேத சாரத்தையும் உபநிஷத் கோவையையும் சர்வசாஸ்திரங்களையும் உலகிற் பரவியுள்ள ஸர்வமத முக்கிய சாராம்சங்களையும் ஒவ்வொரு சொற்றொடரினும் ஒவ்வொன்றும ஒளித்து அமைத்த எங்கள் தயாநிதி, அவன்றனது பெரும் புகழைப் புகழாது புகழ்ந்தமெய்யன்பர்கள துவேதத்தை நாணச் செய்த வசநாம்ருதத்தைச் சிரமேற் கொண்டு வாழ்வோமாக! ஹே! சச்சிதாநந்த ஹரீ! எம்மை அல்லற் கடற்படுத்த பாழ் வினையை நினது அளவிலா அன்பு சுட்டொழிப்பதாக! நினது திவ்ய மங்கள சாந்நித்யம் யாண்டும் தழைத்தோங்குக! நினது பரலோகப் பெருவாழ்வு இற்றை ஞான்றே எம்மை யடைக! கண்ணே வருக! கண்ணா வருக! எங்களன்பே வருக! கதியே வருக! தவமே வருக! ஐயா வருக! மெய்யே வருக! அம்மே வருகவருகவே! அவனருளலாதொன்றுங் கைகூடா தென்றார் விஞ்ஞானிகள். அவனருளின்றிக் கைகூடுவது வாய்ஞான மலவாழ்வே யென்க.

"அவாங் மநசகோசர:" என்று வேதங்கள் வந்தித்த நம்பனை அன்பாலன்றி யடைதல் சாத்யமோ கூற்ருலகீர்.

"யதோவாசோ நிவாத்தந்தே
அப்ராப்ய மநசாஸஹ"

என்று சுருதிமுழக்கிய முடிவுரையின் பயனை யாம் முழுவது மடைவோமாக.

"யாவரு மெவையுந் தானா யவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலனைந் திற்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரி னுள்ளால் யாதுமோர் பற்றி லாத
பாவனை யதனைக் கூடி லவனையுங் கூட லாமே"

என்ற வைணவ திலகர் திருவாக்கும் நம்மனோர்க்கீசுவர ஞானத்தை யூட்டி யுபகரிக்கு மென்க.

"நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
பன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாயா றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேற் புகழ்தக்க பொருளே யுன்னை
யென்னானா யென்னானா யென்னி னல்லா
லேழையேன் என்சொல்லி யேத்து கேனே".

எனவோதிய நஞ்சயயாசார்ய ஸ்வாமிகளது ஹ்ருதயத்தை யுணர்ந்தும், உத்தமவைதிக சைவர்கள் ஏனைய மதவாதிகளிடம் சோதர வாஞ்சையைச் செலுத்தாராய்த் தொடுவழக்கிட்டுத் திண்டாண்டப் பட்டு நிஷித்த கர்மங்களைச் செய்வான் முந்துவரேயோ? எம்மனோரை யாட்கொண்ட மெய்யடிகள் ஸ்ரீவாசகப் பெருந்தகையார் அருளிச்செய்த திராவிட வேதத்தின்கட போந்த "ஒரு நாமம் ஒருருவம் ஒன்று மில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ" வென்றெழுந்துலவும் அமிழ்தினுமினிய சொற்றொடரை அநுசந்தானம் செய்யாதுமறந்து, எஞ்ஞான்றும் நாமரூபாதீதமான நாமரூபராஹித்யப் பெருஞ் செல்வத்தைக் கைப்பற்றி அநுபவித்த லொழிந்து நமதறியாமையை நாட்டி, நாமரூபாதிகட்குப் பரத்வம் சூட்டி, சொற்சம்பிரமம் காட்டி, நாம் மகிழ் அடைவான் முயலல, யாதொரு பேதைதன் சாயலைச் சிறைப் படுத்துவானுதல், புதைத்தொழிப்பானுதல் அநுசித சங்கல்பமேற்கொண்டு அப் பிரதிவிம்பத்தை மெய்யென மயங்கித் துரத்தித் துரத்தி யலைந்தலைந்து அலக்கண் பட்டது போலு மென்ப. நாமரூபம் மாயையின் கூறுமாகையான் எப்போதும் மாறுதலடைதலையும், விகாரத்தையும், நிலையின்மையையும் குணங்களாக வுடைய தென்பது பெற்றாம். அம்மாயை தானும் அதை மெய்யென மகிழ்ந்தோரையே மயக்கி யாடல் காணுமெனக. அஃது சத்தே யெனமுடித்த மெய்ஞ்ஞானிகளாம் அளவிடலரிய ஆற்றலமைந்த எம்பெருமக்கள் சந்நிதானத்தில் அஃது உள்பொருளொன்றாகாது யாண்டுமில்பொருளெனவே முடிந்து பஞ்சாய்ப்பறந்தொழியு மென்க! அஃது அத்யாசம், அநிர்வசநீயம் ஒன்றே எம்மனோர் கூறி மகிழ்வர் போலும்.

"தோன்றின மறையும் மறைந்தன தோன்றும,
பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும்".

என்பதூஉம் சத்பிரமாண மன்றே!

இதுவெனச் சுட்டப் பெறாததே பிரஹ்மம். இது வெனச் சுட்டப் பெறும் யாவும் அசத்தே.

" த்ருசியம்சேஜ்ஜடிமாபவேத்" என்றார் வடமொழிச் சிவஞான போதாசிரியரும். **இது வல்ல, இது வல்ல, இது வல்ல** வென்ற நேதி நியாயமாத்திரத்தானே வேதம் தனது நாயகத்தை ஸ்துதிக்கு மென்று கூறுப.

உள்ளன்புள்ள யாதோர் உத்தமஸ்திரீமணியை அவளதின்னுயிர்ச் சகி விளித்துப் பரபுருடா பல்லோரைக் குறிப்பிட்டு, அன்ன புமான்களி லோவ்வொரு புருஷோத்தமனையும் தனித்தனிச் சுட்டிக்காட்டி இவரோ உன் பிராணபந்து, அவரோ உன் னின்னுயிர்த்துணைவர் என்று உசாவா நிற்ப, தப்புருடரல்லாளை இவரல்லா, அவரல்லா எனக்கூறி யொழித்து, ஆண்டுப் பின்னர்ப் போந்த தன்னினு மினிய தங்காதலனையே தோழி, " பொற்பாவாய், சித்திரத்தும் எழுதொணு வனப்பினன் தன்னைக் காணபவரைத் தம்மைமீண்டும் காணுராக்கும் மன்மதனை வென்ற இப் பாலபாஸ்கரனை நீயறிவை கொல்" எனக்கடாவியவமயம், புனமுறுவல் பூத்தாளாய மௌனமுற்று மனமற்றுத் தலைவணங்கி நின்ற காட்சியே யென்ன, பொருளல்ல வற்றைப் பொருளன்றெனமுழங்கிய மறை பரம் பொருளாம் பரமசிவனைப் பிரஸ்தாபியாது பிரஸ்தாபிக்கு மென்று கூறுவர் விஞ்ஞான சிலர். ' அதுவானல், அதுவாவர், அதுவே சொல்லும்" என்றார் சங்கோமள மணியும் **அது வாதல்**, மனமாதி அந்தக் கரணப்பிரதிபந்தகங்கள் தலை தூக்கியாடும்வரை கைகூடாதே. வீட்டை வீட்டினிடமே யடையற்பாலரன்றோ மெய்ஞ்ஞானிகளும் மெய்யடியார்களுமாவர். இறந்த பின்னர் மக்கள் கைலை சென்றும், வைகுண்டம் சேர்ந்தும், பரலோகங்கண்டும், வாழ்வடைதல் உலகம் கண்டதில்லை. எம்மனோர்கண்டதில்லை. யாமும் கண்டதில்லை மக்களிற் பெரியர் தமது ஜீவகாலத்தே, இருந்த விடத்திருந்தே வீட்டை யெய்திச் சுகித்ததூஉம், சுகிக்கின்றதூஉம், இனியும் சுகிப்பரென்பதூஉம், கண்கூடாமன்றே '

" நன்று ஞானங் கடந்து போய் நல்லிந் திரிய மெல்லாமீர்க்
தொன்றாய்க் கிடந்த வருப்பெரும்பாழ் லப்பி லதனையுணர்ந்துணர்
சென்றங் கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்று [ந்து
லன்றே யப்போ தேவீடு அதுவே வீடு வீடாமே"

என்று போந்த கம்பீரத திருவாக்கைத், தெவிட்டாது தித்திக்கு மம்ருத ரசத்தை, அஞ்ஞானவிருளரிக்கும் மெய்ஞ்ஞானச் சுடரினை துவேஷதுஸ்சிந்தையைத் தூரத்தே துரத்தி யொழித்துத் தரிசித்து அடங்குவதாக பாமர உலகம்.

" மநயேவ மநுஷ்யாணும் காரணம் பந்தமோக்ஷயோ:"

என்று சுருதியே உண்மையை யுள்ளபடியே கூறிப் போந்த தென்றபடியும்.

" அஞ்ஞானப் ப்ரபவம் சர்வம்
ஞானேந ப்ரவி லீயதே

சங்கல்போ விவிக்த: கர்த்தா:
விசாரஸ் ஸைவாபர த்ருச:"

என்று மெய்வடிவினன், நங்கண்மணி, நங்கண்ணணிற் கருமணி, நங்கண் கண்ட தெய்வம், மெய்கண்ட சைவம், ஸரஸ்வதியை வெற்றிகொண்ட சாவஞ்ஞன், அம்பா சமேதனவதார விக்ரஹம், பொய்யையே கண்டு பொய்யையே விண்டு பொய்யையே யுண்டு பொய்யிற் பூரித்துப் பொய்யிற் பாரித்துப் பொய்யைக் கொட்டிப் பொய்யைத் தலைக்கட்டிப் பொய்யை வாரிப் பொய்யை வழங்கிப் பொய்யாய்க்கிடந்த வெம்மை ஸ்வப்ந மொழிப்பித்துச் சாக்ர மடைவித்துத் துரிய நிலையிலழுந்த மெய்யை யூட்டி மெய்யே யாக்கி மெய்வாழ்வடைவித்த நங்குரு பீடம், எம் சற்குரு மணியை யிற்றை நாள் உலக முழுமையும் ஞானம வீசித் திக்விஜயம் செயவான்றா னடிய தனிச்சுடரொளி, ஜகத்குருநாதன், ஞானவாரிதி, அட்டமாசித்திகளையும் அடிமை கொண்டோன், அட்டலக்ஷ்மிகளும் தமது சந்நிதானத்திற் சேவைசெய்து அவிர அவிரந்தோன், "ஸோகம்சிவோகம் சிவ:கேவலோஹம்" என்றோன், ஈரெட்டாண்டினெல்லா முணர்ந்து எல்லாமோதி எல்லாம் விளக்கினோன், பந்தமோக்ஷங்கள் என்று மின்றென்றோன், ஆரம்பவாதம் அநுசிதமென்றோன், பரிணாமவாதம் பற்றாதென்றோன், விவர்த்தவாதம் வேண்டுமேயென்றோன், அஜாடவாதம் அற்புதமென்றோன், உலகெலாமுணர வொண்ணாவொருவன், ஓதுதற்கரிய உத்தம மூர்த்தி, "கலையை மதிக்கும் புலவர் தமைச் சித்தர் குழாத்தைக் கடவுளரை, நிலையை மதிக்கு முனிவரரைத் திசைமாமுகனை நிரைவளையார், சிலையை மிதிக்கு நெடியோனை விழுங்கியுமிழா திறன்றாயைத் தலையை மிதித்த" **அல்லமன்**, துரியங்கடந்த பரநாத மூலத்தலத்து முளைத்த முழுமுதல், உயிராலவாலத்துணர்வெனீர் பாய்ச்சி வளர்ப்பார்க் கொளிபூத்தருள பழுத்த மலர்க் கற்பகம், உருகி யுருகி நெக்கு நெக்குள்ளுடைந்து கசிந்திட்டசும்பூறு முழுவலன்பிற்பழவடியாருள்ளத் தடத்திலூற்றெடுக்கும் பெருகு பரமாநந்த வெள்ளப் பெருக்கு, சிறியேம் பெற்றபெரும்பேறு, அன்பிலேம் மூர்ச்சித்த அன்பருக்கங்ஙனே யமிர்த சஞ்சீவிபோல்வந்தாநந்த மழைபொழியுமுகில், இற்றை நாள் உலகெலாம்ஞானிகள் சிரோபூஷணமென்றே துதிக்கப்பெற்ற குருமணி, ஐரோப்பிய மஹாகலைஞான சூரியர் 19-ம் நூற்றாண்டிற் கண்ட நவீன சாஸ்திரமுடிவுகளையும் மூவாயிர வருடமுன்பே சூசிப்பித்த தவவடிவம், ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளருளிய மெய்வீசும் திருவாக்கானுமன்றே உண்மையினிது போதருமென்ப. "கொள்ளித் தேள்கொட்டுண்டு குதித்தாடும் கள்ளுண்ட கள்ளமனக்குரங்கு" எனச் சிறப்பித்த புண்ணிய வடிவினரும் மெய்ம்மார்க்கத்தையே மீண்டைச் சூக்ஷ்மமாய்க் குறிப்பித்தனர்போலும். "மனக்குரங்கு வியப்ப என் மனக்குரங்கு நடித்த துடிப்படக்கி யாட்கொண்டதுணையே" என வெம்மானை வந்தித்த அருட் பிரகாசவள்ளற் பெருமானும் மனமடங்குந் திறத்தை நாடியே

யின்னணம் ஓதினுரென்க. அவரது ஞானம் கமழும் மெய்க்கூற்றை யவர் திருவாக்கு அருட்பாவல்லவென்று கூறத்துணிந்த பொய்க்கூற்றரோ யறிந் துணரவல்லார்? நம்மவர் பலர் நேரே கண்டு வாழ்ந்தனர்போலும் சைவசமய குரவர்களை. ஸ்ரீ வாகீசராதியோர் நமது நண்பர்கட்கு ஸ்வப்நத்திலெழுந்தருளி எங்கள் வாக்கே அருள்வாக்கு, இதரர்கள் சிவனுக்கிட்ட பாமாலை யாவும் மருள் வாக்கு என்றே கூறினர்போலும். அந்தோ! என்னதாழ்ந்த நிலைக்கு இந்தப்பிர தேசம் இப்போது வந்திருக்கிறது. நாலைந்து வருஷமுன் யாம் உதகமண்ட லத்தி னின்றும் இவண் (சென்னையில்) போந்திருந்த சமயம் திருமயிலைக் காபாலியினது வ்ருஷபாரூட மஹோத்ஸவத்தைக் காண்பான் சென்றிருந்த எமதன்பரொருவர் அவராண்டுக் கண்டுவந்த கஸ்மல காட்சியொன்றை யெ மக்கோதி யெம்மைச் சிலநேரம் துக்கக் கடற்படுத்தார். வேதை வழிகாட்டிச் செல்ல, வேதம் தம்புகழ்பாடிப் பின்றொடர திருவோலக்கம் காட்டிய உமாஸ ஹாயனை வேதம் அடுத்துச் செல்லவிட்டு யதையாதரவாகக் கொண்டு பின்பற் றிச்சென்ற ஆகமமேயென்னச் சில சைவர்குழாம் (பரம்பரைச் சைவரோ, நவீனசைவரோ, சித்தாந்தசைவரோ அத்வைதசைவரோ, அவாந்திரசைவரோ, பைரவசைவரோ, அல்லாக்கால் இவர்கள் யாவரும்சேர்ந்து வர்த்தித்த ஒரு பெருங்கூட்டமோ யாமறியோம்) சிவநாமசங்கீர்த்தநம் செய்தவழி ஸ்வஜனங் களை யின்பவெள்ளத் தாழ்த்திச்சென்றனராக:—அவண் போந்த உத்தமபிரா ஹ்மணச் செல்வரொருவர் உலகம் மெய்ஞ்ஞானக் களஞ்சியம் என்றும், பே ரின்பவிமல ஊற்றென்றும் போற்றிப் புகழக்கிடந்து முமுக்ஷுக்கள்" இன்ப மடைந்திருக்குங்காலத்தில் அமிர்தமயமான சந்திரிகையுடன் பரவசப்படுத் தும் கானரசமும் சேர்ந்தால் எப்படியோ அப்படியும், துன்பம் வந்தகால த்து எரிகின்ற கோடைப்பருவதத்திற்குத் தென்றல் எப்படியோ அப்படியும்" உதவும் சிறந்த உயிர்த்துணையாயும், தெவிட்டாத ஓர் திவ்யதோஜோ மயாநந்தத் திருப்பாற்கடலாயுமுள்ள ஸ்ரீ தாயுமானரது உபநிஷத சாரங் கொண்டு தித்திக்கும் அற்புதப்பாடல்களி லொன்றை மான்மழு வேந்திய கையும், கங்கை தங்கிய சடையும், மதிவதிந்தமௌலியும், கடுவமர்கண்ட மும், உமையமர் உருவமும், நெற்றியிற்றிகழ்ந்த வொற்றை நாட்டமும், எடு த்த பாதமும், தடுத்த செங்கையும், புள்ளியாடையும் ஒள்ளிதின் விளங்க "உருவக நர்த்தனத்தைப் புரிந்த சிற்சபேசவள்ள லெங்கோவைப் பாடுவான் கருதி யோரடி யெடுத்தோதியபோது அச்சைவ குழாத்தை யலங்காரம்செய்த சூத்திர சைவரொருவர் தம்மை மறந்து தாமசாகாரமாகி வெகுண்டெழுந்து "ஹே! பிராஹ்மண! இதென்னை யிது! தகாத வொழுக்கத்திற்றலையிட்டுக் கொண்டனிர்போலும்" நிறுத்தும் உமது பிரசங்கத்தை: தாயுமானராவது, அவர்பாட்டாவது, எங்கள் (இந்தசைவர் நேரே ஸ்ரீஞ்ஞான சம்பந்தர், வாகீசர் முதலியோரது பரம்பரையில் வந்தவர்போலும்) சம்பந்தர் பாட்டுடன் நின்று சமானிக்கத்தக்க யோக்யதையுடையதா? (சம்பந்தர்பாட்டும் தாயுமானர்

வாக்கும் குஸ்தி பிடிக்கவேண்டும் போலும்) எங்கள் பாட்டு அருட்பாட்டு. (சிவ,! சிவ !) · (யாம் இன்ன சொன்னுரென்றெழுதத் துணி யோம்) நீவிர் நடமின் நடமின்! யாம் சிவனையே புறம்பென்றொதுக்கும் ஆற்ற லமைந்த அடியர் பரம்பரையில் வந்தோம். தாயுமானுர் நாற்றமிங்கேன்? எமக் கேன்? சிதம்பரம் ராமலிங்கப் பிள்ளையின் மருட்பாவையும் யீண்டையோது வீர்போலும் ஒழிமின் ! ஒழிமின் ! நீவிர் சைவத்தைக் கெடுக்கப் போந்தவரே! என்று அதிகப் பிரசங்கமாரிபொழிந்து, அவரதன்பர் கூட்டத்தை மகிழ்வித் தனரென்று கேள்வியுற்றுப் பன்னெடு நாள் மனம்புழுங்கிக்கிடந்தனம். நிற்க; மனம்விரிதலே பிரவர்த்தித்துக்க மார்க்கம் மனங்குவிதலே நிவர்த்திச் சுக மார்க்கமென்று கூறுப.

“ நீயற்ற வந்நிலையே நிட்டை
யதியின்லையோ வாயற்றவினை பயங்காதே
நீபோகா யென்று முள்ளாய்
சும்மா விருக்கச் சுகமுண்டு”

என்றெடுத்தாண்டதவமுனி தாயுமானுர் வாக்கியாமிர்தத்தை யிவண் கர்ண புடத்தாலருந்திக் களிப்பெனுமளப்பரும் பெருங்கடலமிழும் பெருந்தவமிழை த்தாயென்க.

மக்களிற் பெரும்பாலாரின் சுவாநுபவத்தையும் ஈண்டைச் சிறிது சிந் திக்க எத்தனிப்பாம்.

எத்துணைச் சிறப்பினதாய செல்வ பலிதனுய் அமர்ந்து ஒருவன் வாழ் வானேனும், எத்துணைச் சிருங்காரலாவண்ய சமூகத்தினளாய பெண்ணரசை யொருவன் மருவினுனேனும் அவன் யதார்த்த சுகந்துய்த்தவவசரமுளதுகொ லென்றும், உளதேல் அஃதெத்தன்மைத் தென்றும் தெள்ளித் தெளிவோமாக.

சாக்கிரஸ்வப்பனுவஸ்தைகளொழியக்கிடந்த சுழுத்தியநுபவந்தான் சுகந் தருமென்பது புத்திமான்கள் யாவருக்கும் புலப்பட்டே நின்றது கண்டீர்! மன்னொடுக்கத்தால் தேகாதிப் பிரபஞ்சத்தோற்றமற்று நின்றுழித்தோன்று மின்பத்தை ஆசிரயிக்கும் புமானெருவன் புத்தி பூருவமாக வந்நிலை யடைந்து தற்றெரிசனுத்தமாய் நிகழும் நிரதிசயாநந்த நிமலப்பேற்றைக் காதலியாதிருத் தல் விந்தையினும் விந்தையன்றே ?

பரமேஸ்வரனது நித்திய சங்காரமே, அவரது சர்வ சங்காரப்பேற்றை யநுமானிக்குஞ் சாதனமாய முடிந்ததுணர்வீர். உள்ளபடியே பகலெல்லாம் க்ஷுத்பாதை யொழிப்பான் உழைத்துக்களைத்த ஏழையொருவனுக்கு நிசிக் கட்டன்னே யொழிக்கும் நித்திரை எத்துணை யவசியமாமோ அத்துணையும் எண்ணிக்கை கடந்தொழிந்த ஜந்மங்கள் எடுத்தெடுத்து ஸம்ஸாரப் பாழ்ங்கட

வில் வீழ்ந்து சுகதுக்கமாயலைகளில் மொததுண்டு அவதி வயப்பட்டழிந்து வருந்தும் ஜீவராசிகட்கு எவ்வளவுகால மவை பிறந்திறந்தவதி யுற்றொழிந்தனவோ அன்ன காலவரையறை மகா சுழித்தி மூடவேண்டிய தத்தியாவசியமே யெனப் பெரியோர கூறலுற்றது பட்டப்பகலாய் விளங்குமென்பதொரு தலை. இனி சாக்ராவத்தையிற் சுழுத்தி யெய்திச் சுகவடிவமர்ந்த புண்ய மூர்த்தங்களதருட்டிறத்தைப் பேசவெழுவாம்.

நிர்க்குணக்கடலாம் பரமேட்டியி னின்றெழுந்து, அவனையே யாசிரயித்துத்தழுவி யின்றுநந்தித்து அவருக்கபின்னமேனும் அவாந்திரமெனப் பேசப்பெற்று, லீலாமாத்திரத்தானே மூவராதியோரைச் சிருட்டித்து, அவ்வவரது **தாதாந்மிய பரிக்ரஹ** சத்திகள் யாவுமேயாகி யாடல்கண்டு, இறுதியிற் ஜீவராசிகள் தம்பெருமாயா சாகரத்தை ஞானநாவாய் கொண்டு கடந்து சுகத்தை நாடிச் சிவத்தை யடைவான் கடாக்ஷ வீக்ஷண்யலேசம் புரிந்து ஆநந்திக்கும் எம்மாநந்த வல்லித்தாயாம் பராபிருகிருதியை நாவார வாழ்த்தியேத்தி அவளதநுக்கிரஹத்தைப்பெற்று அநந்தரம் பராபரனை யடைந்து ஜீவபோதமுற்று மொழியப்பெற்று, சிவாகாரமெயதிச் சுகித்த மெய்ஞ்ஞானிகளதிலக்கணம் "பேய்போற்றிரிந்துப் பிணம்போற் கிடந்து" என்றற் றொடக்கத்த செய்யுளால் பிரகாசமாதலையா முணர்வோமாக.

"தாயுடன் சென்று பின் தாதையைக் கூடி' என முதியோரிட்டவாணையும் பரப்பிரயோசனார்த்தமே யென்க. உந்நத பதவியடைந்து நரேந்திரபோகம் துயக்கும் யாதொரு கௌரவ குடும்பத்து ஆர்யபிரபு ஸ்திரீரத்நத்தை வியவகார வேளையில் அவளிடம் பிரஸ்தாபிக்க வேண்டிக் கிடந்த வியவகாரங்கள் விஷயமாய் அவள் சமுகமடைந்த ஆரியபுமான்களெவரும் திரைப்புறத்திருந்தே தங்கடங்கள் பிரார்த்தனைகளை விண்ணப்பிப்பராகவும், அவளீன்றெடுத்த செல்வச் சிறுவர்களும், தவத்தால்வந்த சிறுமியர் குழாமுமேதிரையை நீக்கி அவள் சமுகம் நேரேகண்டு அவளால் கொஞ்சித்தழுவப் பெற்று மெய்க்களிப்படைந்து பூரிப்பது கண்கூடன்றே? "சேய்போலிருப்பர் கண்டீர் உண்மை ஞானந்தெளிந்தவரே" என்றார் மெய்யடிகளும்.

தம்மருமைக் குழவிகட்கு பால்ய லீலைபுரிவான்றும் தந்த சிறு பிரதிமையாதிகளைப் பாராட்டிச் சீராட்டிவிளையாடும் சந்தர்ப்பத்தே தம்வியவாகாரவேலையை முடித்து அச்செல்வச் சிறுமக்கள் விளையாட்டுப் பொருளைப் பின்னர் வீசியெறிந்து **அம்மையயமே,** யென்றழைத்தபோது அப்போதே யவண்போந்து அன்னோனைக் களிப்பிக்கும் நற்றாயென்ன, ஜகதாம்பிகை அன்பர்க்குப் பிரசாதித்த இகலோகபோக போக்யங்களை யன்னார் துய்த்தொழித்து விராகமேலீட்டால் ஹே! அம்ப! என லோகநாயகியை விளித்தழைத்த வமயம் சிற்சத்தி யெந்தாய் அக்கணமே பிரஸந்நமாகி யாட்கொண்டடியனை யப்பனி

டமே சோப்பிப்பனென்றே சகல சாஸ்திரங்களும் விதந்தோதிடும் கண்டீர். அய்யன் சந்நிதியடையப்பெற்றார் திறம்பேச யாவராற்றிரமம்!!

"என்னையுந் தன்னையும் வேறா, யெண்ணாத வண்ணம் இரண்டற நிற்க சொன்னதுமோவொரு சொல்லே அந்தச்சொல்லால் விளைந்த சுகத்தை யென் சொல்வேன்" எனப்பொன்மொழி புகன்ற புண்ணியரே யதை யுணர்ந்தனர் போலும்.

"விளையுஞ் சிவாநந்த பூமி, அந்தவெட்டவெளி நணணித்துட்ட விருளாங்களையைக் களைந்துபின் பார்த்தேன், ஐயன்களையன்றிமற்றொன்றுங் கண்டிலன்றோழி" என்று ஜீவபோதம கழலநின்ற அநுபவத்தை ஜீவபோதம் பட்டொழிவான் அருளிய பொன்மொழிச் செல்வர், அநந்தரம். "கண்ட என்னையும் கண்டிலன் என்னேடி தோழி" என்று சிவபோத ஸ்வாநுபவத்தைச் சொல்லாமற் சொன்ன திறதறை நினையாமல் நினைதநுச் சுநிப்போமாக. தாயுமானர் சிவமாய நின்ற சிவநிலையை யாங்ஙனம் சமாதி பிரிந்த போழ்தத்து பஹிர் முகப்பட்டமநாதி அந்தகரணங்களா லுணர்ந்து ஞானேந்திரியங்கள் ஞான சுகமடைய வாக்கான் வெளியிடலொல்லு மென்றாசங்கித்தால் நன்று கடாயினாய் தன்னின்னுயிர்க் காதலனைத் தழுவித் தானொழியக் கிடந்தவளாய் நின்ற வழியே சிற்சுகாநுபவும் பெற்று வாழ்வடைந்த இயற்கையின் மணங்கமழ் இனிய கூந்தலைப்பெற்ற தர்மபத்நி, வியவகார வேளையிற்றானருநதிய யின்ப ரசத்தை யுன்னி யுன்னிக் களிப்பிலாழ்ந்து சமயம் வாய்த்துழி வாய்த்துழித் தனது உயிர்ச்சிலதியருடன் அங்ஙிகரற்ற வின்ப நுகர்சசியை மதலைச் சொற்கொண்டு நகையாடி நாகுழற வுரையாடி நின்றும், சட்சிந்திரியங்கொண்டு யாண்டும் பிரசங்கித்தும் ஆநந்தம் பூததுக் தோன்றிய வநுபவத்தை நீவிர் உணர்கவென விடையிறுத்து அவர் சங்கை யொழிக்க. அவ்வியாஜ கருணைமூர்த்தியா மெம்பிரான்றொண்டரைச் சிறப்பித்துச் சிறந்தெழுந்த "பிரஹ்மாநந்தம், பரமசுகதம், கேவலம் ஞானமூர்த்திம் என்றற்றொடக்கத்து திவ்ய மந்திரங்களும் அன்னார் அடைந்த பேராநந்தப் பெருவாழ்வை ஒருவாறு சூக்ஷ்மமாய் சூசிப்பித்தன வென்க.

"பெற்றவட்கே தெரியு மந்தவருத்தம்" என்றுபதேசித்த சற்குரு மொழியும் லோக க்ஷேமார்த்தம் முத்தென மணியென யுதிர்ந்த தென்றபடி, சிற்றின்பமே பேரின்பத்தை யநுமானித்தற்குப் பெருங்கருவி யாதலான் (மரக்காலைக் கொண்டன்றோ அம்பாரத்தை யளப்பர்) பேரின்பம் **பேச்சே** யென்பாரை நாம் அதிவிநயத்தோடொன்று கேட்கிறோம். எதிர்மறை ஞானங்கொண்டாரா சித்த சமாதானத்துடன் விடை யொன்று தேடுவாராக.

"இகத்துள சுகத்திற் களவுசெய்கோலாய
பரத்துள சுகத்தை வரித்த சித்திரமாய்"

கவீஸ்வரர் பேசக்கிடந்த சிற்றின்பத்தையேனும் இன்னோரன்ன தன்மைத்தென முடித்துக்கூறுமாற்றலமைந்தார் யாவரோ கூறுவீர்! நீவிர் கூறுவதொன்றுண்டேல் அஃதூழிக்காற்றிற் பூழிப்பஞ்சு போலாமே. உத்தம வயதடைந்தவ ளைதைகளாம் காமநலி சான்றாய் மணந்த தர்ம பத்னிமார்களை அவர்களது மநோரதத்தைப் பூர்த்தி செய்யாது பர்த்ரு சோகத்தாற் பிரிவாற்றாது அவலமுற்றுக் கிடப்பவிட்டு, காலகூட விஷத்தை வென்ற உள்ளத்தைப் பெற்றும் ஜஹன் மோஹந வடிவமைந்த பலவேசைகள் கண் வலைப்பட்டு அஹோராத்திரம் அன்னாரோடு கூடிக் கிரீடித்துச் சுகித்தநந்தேசதநுப் பிரபுக்களேனும் சிற்றின்பம் இதுவென அதுவெனப் பரக்கப்பிரசங்கியாது விட்டனரிதென் கொலோ?

பரஸ்பரம் மெய்ப்பபாச திருஷ்டியான் ஸ்பூர்த்தியும் ஆர்த்தியுமடைந்து பூரண ஐக்கிய சந்தோஷம் பூத்து இயல்பாயுண்டான மெய்க்கவர்ச்சியான் பரவசப்பட்டுக் கூடிச்சுகித்த ஸ்திரீபுமான்களெவரேனும் தங்களநுபவங்களைச் சொற்றொடர் கொண்டு விரித்தனரன்றே! இஃதென்ன விந்தை "காமனுமிரதியும் கலந்த காக்ஷியாமென"க் காதலிருவர்கருத் தொத்து ஆதரவு பட்டவின்பத்தை "காத லொன்றீதுமோர் கள்ளின் றோற்றமே" வென ஆரியர் கூறிய வழக்கையேனும் உலக மறியாமற் போன தெவன்? வியவகார மிழுக்கப்பிரியாது பிரிந்து அந்யதேசம் சேர்ந்த காதலன், தங்காதலித்தீயிடையிட்ட பூங்கொடி போலச் சாம்பினாள் போலும் என்றுணர்ந்தனனாய் உருகி ஸ்மரணை யற்று ஈற்ப, அவளதுருவெளித் தோற்றம் கண்டுயிர்த்தெழுந்தவநுபவ மறிந்தாரே சிவசம்பந்திகள், சிவனதுருவத்திருமேனியை வியவகார நேரமெல்லாம் காணா ஈற்பர் என்றுணர வல்லார். "பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ" வென்ற நேர்மையை யுணர்ந்தும், சிவஞானச் செல்வர்கள், பேசாது பேசிமகிழும பெரும்பேற்றை யறியவல்லார் சிவனை யன்றியாவராவரோ கூறீர். ஐந்து பேரறிவும் ஆநந்த மெய்திநின்ற அவசரமே சிற்றின்ப மென்பார் பெரியர். ஆண்டு மநம் உண்டேனும் வழக்கு யாண்டும் சிறவாதே. மநமொழிந்த நிலை யிரண்டற்றதன்றே. பர்த்ரு பத்நி யாவாராதுவித நோக்க மொழிந்து அரைக்கணம் அத்துவிதம் பெற்றதே இன்பம் பயந்த தென்ப. அவ்வின்பத்தையும் ஸ்திரீபுமான்களா வார்த்த்த மிடமே பெற்றன ரென்ற உண்மை ஆழ்ந்து யோசிப்பார்க்குக் பிரகாசப்படும்போலும். வெற்றெலும்பைக் கடித்துக்களித்த சிறுநாயொன்று தன்பற்களிடைப்போந்த உதிரத்தையே யுறிஞ்சிக்கிடந்ததே சான்றாம். க்ஷணபங்குரமான காமத்தாலடைந்த சுகம் க்ஷணத்திலேயே மாறி யொழிவதான் அஃது சிற்றின்பமெனவொதுக்கப்பெற்றதென்க. அஃதும் அறுசுவையிலொன்றாக வேனும், வேறாகவேனும், பேச லொவலாது மயக்குவதொன்றாய் முடிந்ததால் அதையே யறியாதொழிந்தனா மக்கள் எனச் சித்தாந்தம் செய்தனர் வித்வமணிகள்.

எனவேதாமொழிந்து ததாகாரயாகி, பாபபுண்ய ராஹித்யம் பெற்று நின்ற ஜீவபோதம் கெட்ட ஜீவன் முததரது அநுபவ சித்தமான பேரின்பப் பெரும் பேற்றினைச் சிற்றறிவுடையேம் என்னணம் விரிக்கப்புகுவேம்.

“ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள
விளப்பருங் கரணமோர் நான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத்து விகமே யாக
விந்துவாழ் சடையானாடு மானந்த
வெல்லையிறனிப் பெருங் கூத்தின்
வந்தபேருவகை வெள்ளத்துட்டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

என்று ஸ்ரீ சேக்கிழார் விதந்துபோற்றிய சமயாசார்ய மூர்த்தத்தினது மெய்யன்பின் திறத்தை யுலகம் சிந்திக்க! ஆளுடைய நம்பிகள் அடைந்த இவ்வாழ்வன்றோ சத்கர்மபலனாகும். இஃதன்றோ பக்தி. இதுவன்றோ யோகம். இதுவே யன்றோ மெய்ஞ்ஞானம். இந்த திவ்யாவசரத்தைச் சிந்தித்த சாதுக்களே ஞானிகளாவரென்றால் எம்மையாண்ட வடிகள் ஞானமே திரண்டோருருவெடுத்த தெனப்போந்த அப்பிராகிருத சரீரி யாவரென்று கோடலமைவுடைத்தாம்.

கிறிஸ்தவ சமயச்சித்தரொருவா, பராபரனோடு கலந்தநுபவித்த சுகத்தை, அந்தக் கரணத்தை யதிக்கிரமித்த **சாந்தம்** என விதந்தோதின நேர்மையையும் சர்வ சமயவாதிகளும் நிச்சயித்துணர்வான் முயற்சி மேற்கொண்டொழுகுவராக! பௌத்தமதத் தலைவர், வர்ணபேதங்களை முடித்து, பண்டிதர் பாமரர், சிஷ்டர், துஷ்டா, அரையன், ஆண்டி, பெரியர், சிறியர், ஆண், பெண், யாவர்க்கும் விநியோகித்த **நிர்வாண ஞானமும்** பேரின்ப வாதமே யென்க! அஃது ஸ்வாநுபவ மாத்திரத்தானே யுணரற்பால தொன்றாதலானும், அதை வாக்குமனாதி தர்மங்கள் எட்டா வாகையானும் அதன் வசப்பட்ட பெரியர் குழாத்தெவரேனும் அதையும் எட்டுணையும் இன்னேரன்ன இலக்கண மமைந்ததென வெடுத்தோதாது விட்டாராகையானும் யீண்டை வேறொன்றுங் கூற வியலாது விடுத்தாம். வியவகார நேரமெல்லாம் சமாதி சுகமடையப்பெற்ற சிவநேசச்செல்வரிடம் பரிவுடன் சென்று பணிவோடு தங்குறைகளை விண்ணப்பித்து அவர்களநுக்கிரஹப்பிரசாதம பெற்று ஸ்வாநுபூதி யடைந்துய்வர் பக்குவம் பழுத்த பண்டிதர்.

மேலே விசாரித்த இத்தியாதி நியாய பஹுளங்களான், தம் சந்நிதி யடையப்பெற்று மநமிறக்கப்பெற்ற மாத்திரத்தானே, சுகாகார வம்ருதத்தை

யூட்டி யுபகரியாநின்ற தேவதேவன் ஒருவரே பல சமயங்களினும் அதுவது வாய் நின்று நடனம் புரிந்தார் என்ற உண்மை பிரகாசமாவதான், '**தெய்வ மிகமேல்**, எனத்தெருட்டிய மூதாட்டியினது ஹிருதயம் பூரணமாய் வெளிப்பட்டு நின்றதுணர்வீர்! மறையும் "ஏகம்சத்விப்ரா: பஹுதாவதந்தி எனக் கோஷியா நின்றதன்றே! பொருள் ஒன்றே. அதைப் பல பல விதமாயோதுவர் முதியோர் என்பதே வேத சம்மதம் காணமோ.

"மைவிடா தெழுநீல கண்ட குருவே
விஷ்ணு வடிவான ஞான குருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே
மதங்கடொறு நின்ற குருவே"

என்பதே பரமசித்தாந்தம்.

இனி வேதாகம ஸ்மிருதி புராணேதிகாசாதிகள் கூறலுற்ற பரமனது திரிமூர்த்தித் திவ்யாஸ்வரூப லக்ஷணங்களை விசாரிக்கப்புகுவாம்.

"கடுகைத் துளைத்து கடலை யடைத்தது'போல சர்வோத்கிருஷ்டமான வேதாந்தத் தத்வங்களையும் ஒருமித்து உருட்டித்திரட்டிச் சாரசங்கிரஹமாகச் செய்யப்பட்ட **ஓம்** என்ற மூலப்பிரணவமந்திரமன்றே, பரனது ரூடி நாமமும் மெய்ப்பிரதீகையுமாகும் (அ + உ + ம்) அகர, உகர, மகரங்களான் அம்மந்திரம் ஆக்கப்பெற்றமை யுணர்ந்தவழி திரிமூர்த்தித் திவ்ய ஸ்வரூப லக்ஷணம் விஷயமாகுமென்பதொரு தலை. வாய் பிளந்த அவசரம் **அகரம்** பிறந்தது. பிளந்தவாய் மூட யெத்தனித்த அவசரம் **உகரம்** தோன்றியது. மூடிய தருவாயில் **ம்** காரம் சப்தித்ததை யறிதிர். வாய் பிளந்து மூடுமிடையிலன்றே, சப்தங்கள் யாவும், சர்வபாஷைகளும் வெளியாகும் எனவே, பிரணவத்தைச் சப்தயாதாரமென வேதாதிகள் வந்தியாநின்றன. **சப்தமே** ஜகத் ஸ்ருஷ்டிக்குக் காரணமாமே! "சப்த ஸ்ருஷ்டம் ஜகத்" என வோதியது சுருதி எங்களப்பன் திருக்கரமேந்திய டமரகமும் அவனே சர்வ பிரபஞ்சத்தோற்றத்திற்குக் காரணமான காரணகாரியங் கடந்த கண்மணி யென்ற வுண்மையைச் சூசிப்பிக்கும் பிரதீகையாகுங் கண்டீர். அகரம் ஸ்ருஷ்டியையும், உகரம் திதியையும் மகாரம் ஸம்ஹாரத்தையும் சூசிப்பித்தன. அகரம் பிரமனுக்கிடம், உகரம் விஷ்ணுவினிடம், மகாரம் சிவனிடம் என்று கூறுப. அகரத்தினிடமாய் விரிந்து, உகரத்தினிடம் பரிணமம் பெற்று, விளங்கும் சப்த ரூபநாத சத்தி, மகாரத்தினிடம் ஒடுங்கி நின்ற காட்சியைக் காண்க. கானரசத்தை யருந்திக் களித்த புமான்கள் மகாரத்திற் கான மொடுங்கி நின்ற திவ்ய அவஸரத்துத் தங்கள் மநமும் தற்சமயத்திற் கொடுங்கி யோர்வித சுகாநந்த வாரியிற்றோய்ந்து நின்றதைக் காண்டிர். அகரம் சாக்கிரத்தையும், உகரம் ஸ்வப்நத்தையும், மகாரம் சுழுத்தியையும் குறிப்பிக்கும் என்று பெரியோர் கூறலுற்ற

வழக்கு மொன்றுண்டு. அகர, உகர, மகாரங்களாகாது, அதீதமாகி, அவை பிறப் பிடமாகி அவை ஜீவிக்குமிடமாகி, அவை ஒடுங்குமிடமாகி, அவைகட் கதிஷ் டானமாகி நின்ற பிரணவசத்தியினது **நாலாம் பாதம்** (சதுர்த்தம்) அன்றே மூன்றாகி, அவா பிறப்பிடமாகி, அவாகட்குப் பிரசாதிக்கு மிடமாகி, அவர் களை ஒடுக்கொண்ட விடமாகி, அவைகளொழியக்கிடந்த தனியிடமாகி அவர்கட் கதீதமாகி அவைகட் கதிஷ்டான சைதந்யமாகி, யாவருமாகி, யாவையுமாகி, அல்லவாகி நின்ற நிர்க்குண நிரதிசயானந்தச் சுகவாரிதியா மெம்பெருமானை குறிப்பிக்கும் பிரதீகையாய் நின்றது மானாமோ.

“சிவம் அத்வைதம் சாந்தம் சதுர்த்தம்” என வந்தித்தது மாண்டூக்கிய சுருதி.

பிரணவமாதாவினது அபார கௌரவத்தினது மகிமை, ஆரிய ஹிந்து வேதபாஷ்யமெனப் பேசங்கிடந்த பல மதச் சாஸ்திரங்களினும் பெறப்பட்ட துண்மையெனவும் வந்தது உத்யோகபரவியடைந்த வடமேற்கு மாகாணத்து அத்வைத ஞானகுருவமெனப் பிரகாசியாநின்ற மெஞ்ஞானப் பிரமுகரொருவர் கூறலுற்றார். கிறிஸ்தவப் பெருந்தயவாதிகள் பராபரவஸ்துவிற்கிட்டு மகிழ்ந்த அரிய பெரிய திருநாமதேயமாகிய பிரணவமே எல்லாருபமாயுள்ளதென்று அவர் சித்தாந்தப்படுத்துவாரா.

மகம்மதியமதச் செல்வராகிய மகம்மது நபிப்பிரபு ஜகதீசனதாஞ்ஞை யால் ஞானவான்களாய் வந்த கரமமபெற்று எழுதப்புகுந்த மகம்மதிய பெருவேத மாகிய **கொறனில்** பிரகிருதியில், “அலீப்—லாம்—மீம்,” என்ற மகாவாக் கிய மந்திரம் பெறப்பட்டு அவைகளை யாவும் (பிரபஞ்சத்தோற்றம் யாவு மாம் எனசிலர் அபிப்பிராயப் படுகின்றனர்போலும்) என்ற தெய்வவாக்கினை யும் அநந்தரம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் நமது வேதவித்தாவார் பிரகாசமா யெழுதி வெளியிட்டுள்ளார். “**அலீப், லாம் மீம்.**” என்ற தெய்விக சப்தங் கள் (அ + உ + ம்) (ஓம்) என்ற சட்டமமெனு அறைகூவியும் நமது பண்டித வள்ளற்பெருமான் தெரிவியாநின்றார். மற்று, சமய சாத்திரங்கள் ஒவ்வோர்சார் நின்று **ஓமோ** மெனறு கோஷியாநின்றதுமன்றி, சராசர சேதநா சேதந பதார்த்தங்கள் யாவுமே ஓமோ மெனவும், பரமனைப் பேரிட்டு யாண்டும் அழை யா நின்றமையுங் காண்பாமன்றோ. அன்றுயிர்த்த குழவி வாய்திறந்து குவ என் றழும்போது **அகரமும்** ஆச்சரிய குறியாக ஆ! ஹா! ஹா! ஹா! முத லியனவும், ஒருவனைவிளிக்குமிடத்து ஓ! ஹோ! என்பனவும், அழும்போது **உங், உங், உங்** என்பனவாதியும், சிரிக்கும்போது ஹாம், ஹூம், ஹூம் முதலியனவும் பிர ணவத்தினது சங்கேதப் பிரகாசமாவதை யுணர்திர். அகரத்தினது விகாரம், இதரவுயிர்ச்சப்தங்களும், மெய்யெழுத்துக்கள் உயிர் சப்திப்பதற்கேதுவான பல அவசரங்களுமாம் முடிந்ததையும் உலகம் கவனிக்குமாக. **காலம், தேசம், காரணகாரியபாவம்** (Time, Space, and Causation, இவைகட் கப்பால்

யாண்டும் நின்றது சிவம். இவைகட் கிப்பால் யாண்டும்நின்றது ஜீவன். நடு வண் உள்ளதோர் மறைப்பு. அம்மறைப்புத்தானே ஜீவன், சிவனைப் பலவிதத் தோற்ற (நாமரூப)ங்களாகக் காணக்கிடந்தமைக்குக் காரணமாயுள்ள துணர் வீர். ஒன்று பலவாய்த் தோற்றிடினும் ஒன்று பலவாதல் முற்றுமசங்கதம். முற்றும் நியாயவிரோதம். முற்றும் சாஸ்திரயுக்தி விருத்தம். பச்சைக் கண் ணுடித்துவாரா வொருபொருளைக் கண்டவழி அஃது பச்சையாய்த் தோன்று தொழியுமேயோ?

பொருள் பச்சைநிறமாவதுண்டேயோ? ஒருபோழ்து மாகாது. அங்ஙன மே, பிரம்மத்தை மாயையை முன்னிட்டு தரிசித்தவழி அப்பிரம்மம் பல்வேறு பொருட்கூட்டமாய்த் தோன்றுமென்பதி லாக்ஷேபமில்லையாம். மயக்கம் யாரு க்கேயோ, மயக்கம் பிரம்மத்துக்கன்றோ? யென நீவிர் கடாவினால், பிரம்மம் மயங்குவதொன்றன்று. மற்று, மயக்கசகிதப் பொருளினுக்கே மயக்கம் நேர்ந்த தென்றுகூறி மறுப்பம். ஜீவன் பிரமமன்றோவெனின், பிரமமன்றே. அவன் பிரமத்திற்கிரண்டாம் பதார்த்தமாவனோவென வாசங்கித்தால் பிரமத்தைத் தவிர்த்து ஜீவனென்பான் ஒருவன்யாண்டு மில்லையேனும் ஜீவன் ஒருபோ தும் பிரம்மமாஞனில்லை. ஜீவனுண்டோவென நீவிர் கடாவின் உண்டு. அசத் யமாய், தோற்றமாத்திரமாய், அஞ்ஞானமயமாய், அநிர்வசநீய சம்பந்தமாய் இந்திரஜாலம்போலும் கானலிற் ஜலம்போலும் என்று விடையிறுப்பம். இல் லாதஜீவனுக்கு அனுபவம் (உலக வின்பதுன்ப அனுபவங்கள்) என்னணம் நேர்ந்ததோவெனின்—ஸ்வப்நத்தில் ஒருவன் பணம் ஆர்ஜ்ஜித்தவழியும், காதலி யைத் தழுவியவழியும், பிறப்பைக் கண்டவழியும், புலிக்குப் பயந்தவழியும், பூனையைக் கொன்றவழியும் என்ற காம்பீர்யமாய்ப் பிரதி கூறுவம். உள்ள ஜீவனை இல்லாத ஜீவன் எந்தசமயம் உணராதுணருதலொல்லுமென நீவிர் ஞானங்கண்டு கேட்பின், ஸ்வப்நத்திற் போந்த வொருவன், விழிப்பு நிலையை யடையக்கிடந்த வமயத்திற்குச் சற்று முன்பாக என்னணம் தான் ஸ்வப்நத் தில் அழுந்திக் கிடந்தானென்று அறிந்தானோ, அன்னணமே ராகமுழு வது மொழிந்து சாந்தநிலையை யடுத்த ஒருவன்தான் (ஜீவன்) யாண்டும் பொய்யே யெனவும், (தந்நிலைவன் சிவன்தாமே) யாண்டும் மெய்யெனவும் உணருமாற்ற லுடையனென்று கூறுதும். அப்பால் நின்ற சிவத்தை யிப்பாற் கிடந்த ஜீவன் ஆருமை மேற்கொண்டழைத்தவழி, திரை நீக்கப்படு மென்க. அப்பால் நின்றதை என்னணம் அழைப்பது. ஓம் என்றழைத்தபே சால் புடைததாமென்ப. அழைத்தவழி, அப்பால் நின்றதாமெனச் சப்திர து நாதங் காட்டி, நாதமோட்டி, தாழ்ப்பாள் பிரதிபந்தத்தை நீக்குமென்றுகூறுப. திரை யொழியப்பெறவே, ஜீவன் சிவத்தை முன்னிலைச் சுட்டப்படாதத மென்ற அஞ்ஞானத்தைத் தவிர்த்து, அது தானாய்நிற்ப, இவனே யவனெனமாறி, யாண்டும் இவனிருந்தா னில்லையென்ற அறிவேயாகி, தனை கல்லவற்றைக்

தானென மயங்கிக்கிடந்துத் தன்னை யுணரப்பெறா தவலமுற்று அளவிறந்த காலம் அல்லற் கடலாழ்ந்ததாகக் கண்ட ஸ்வப்நங்கட்குக் காரணமான தனாத பின்ன மாயா வவாந்திர சக்தி ஸ்வாநுபூதியிற் காணப்பெறாது தன்னிலொடுங்கித் தன்னையே யிறுதியிற் பிரகாசிப்பித்த அருமைக்கிரங்கிச் சிரித்து உலகம், இவன் பேயனோ, பித்தனோ உந்மத்தப்பாலகனேயோ வெனக்கூறி மயங்கிக்கிடப்ப விளங்குவன் கண்டீர் ஜீவனிறந்து சிவம் பழுத்த ஜீவன் முத்தன்.

"அசுவத்த மென்றொரு மாமதி
லிரண்டுரும் பறவைகள் வாழும்
நச்சுமங் கொருபறவை யம்மரக் கனிநன்று
நன்றெனத் தின்னும்
மெச்சு மங்கொருபறவை நின்று தெளிவியங்
கியப் பொருளாக
வைச்சுமாமறை செவ்வை யெய்ன வதுதவா
றறிவாயே."

என்ற கைவல்யச் செய்யுளீண்டை யுதகரிக்கப்பெற்று பெரும் பிரயோசனம் செய்தமையுணர்திர். நிற்க:—

மீண்டும் திரிமூர்த்தி விசாரணையைப் பரியாலோசிப்பாம். பரம்பொருள் அண்ட சராசரங்களை யீன்றபோது பிரம்மா வென்றழைக்கப் பெற்றாராம். சம்ரக்ஷித்த வவசரம் விஷ்ணு: வென்னும் நாமம் பெற்றார். துடைத்தொழித்த போழ்தத்து உருத்ரனெனப் பேசப்பெற்றார்.

"லோகேக்ஷ ஸ்ருஷ்டி கரணாத் ஸ்ரஷ்டா பிரஹ்மேதி கீயதே, விஷ்ணு: பாலயிதாதேவி சம்ஹார்த்தாஹம் ததிர்சயா:" வென்று கம்பீரமாய்ப் போந்த ருதரனுடைய திருவாக்கே சதபிரமாணமாமன்றோ! பொருள் ஒன்றே மூன்றுருவாய்க் காணப்பெற்றதே தவிர, மூன்று தனிப்பொருள் சித்தித்ததில்லையாம். அகண்டாகாரச சச்சிதாநந்தத தனிப்பொருள் விஷயமாய் ஒன்றிரண்டு என்ற பிரசங்கம் அசங்கதமாய் முடிந்தபடி, ஒன்றென்றதும் உபசாரமேயாம். "ஏகனனேகன் இறைவனடி வாழ்க" வென்ற திராவிட சூக்தியைத் தரிசிக்க. ஆடுகின்றவரும், ஆடல் கண்டவரும் ஏகனாயகனே யென்பதிற் றடையுண்டுகொலோ?

"யதோ விஸ்வம் சமுத்பூதம் யேநஜாதஞ்ச திஷ்டதி-யஸ்மிந் ஸர்வாணி லீயந்தே ஞேயம் தத்ப்ரபலக்ஷணை:" எந்த ஸ்தானத்தில் யாவும் பிறந்தனவோ, எந்தஸ்தானத்தில் யாவும் வாழ்வடையுமோ, எந்தஸ்தாநத்தை நோக்கி யாவும விஸ்ராந்தி யடைவான்றிரும்புமோ அந்தஸ்தானமே பிரஹ்மஸ்தாநமென்றறியென உபதிஷ்டதம் பறையறையா னின்றதன்றே. எனவே, விஷ்ணுவேபதி,

உருத்ரனேபதி, எஞ்சிநின்ற விருவர் பசுக்களென் றுரைக்கப்புகுதல் பசுத்வம் காரணமா யெழுந்ததோர் வியாபாரமென்க.

"மாதேசே ளம்பலத்தே திருநடஞ்செய் பாதமலரணிந்த பாதுகையின் புறத்தெழுந்த வணுக்கள், மாதேவ ருருத்திரர்க ளொருகோடி கோடிவளை பிடித்த நாரணர்களொரு கோடிகோடி, போதேயு நான்முகர்களொரு கோடி கோடி புரந்தரர்கள் பலகோடியாக வுருப்புனைந்தே, ஆதேயராகியிங்கே தொழில்புரிவாரென்றுலயர் திருவடிப் பெருமையாருணர்வார் தோழி" எனவும்

"தேவா கோவறியாத தேவதேவன், செழும் பொழில் கள்பயந்து காத்த ழிக்கு மற்றை, மூவர்கோனாய் நின்ற முதல்வன்மூதாதை மாதாளும் பாகத் தெந்தை" எனவும் சைவப் பெரியோர் ஆணையிட்டுள்ளது சத்தியமே. சுருதியும் "நாந்த: பிரஞ்ஞம் நபஹி:பிரஞ்ஞம் - மோபயத: பிரஞ்ஞம் - நபிரஞ் ஞானகனம் - நபிரஞ்ஞம் - நாபிரஞ்ஞம் - அதிர்ஷ்ட - மவ்யவஹாராய - மகிராஹ்ய - மலக்ஷண மசிந்திய - மவ்யபதேஸ்ய-மேகாதவமிய -பிரத்யஸாரம்- பிரபஞ்சோ பசமம் - சாந்தம் - சிவம் அத்வைதம் - சதுர்த்தம்-மந்யந்தே- ஸஆத்மா - ஸவிஞ்ஞேய :" என்றோலமிட்டு, சிவம் திரிமூர்த்திகளை, (திரிகுணங்களை. காலதேச வாத்தமானங்களை, திரைலோக்யத்தை, மூன்றெனப் பேசப்பெறும் பலவற்றையும்) யதிஷ்டித்து அமூர்த்த மப்பிராகிருதமாயுள்ள தெனத் தெரிவித்தது நீங்கலாகவும், "பிரஹ்ம விஷ்ணுருத்ரேந்திராஸ் ஸம் பிரஸூயந்தே நகாரணம் ; காரணந்து த்யேயசம்பு :" என்று முழங்கி பிரஹ்மா, விஷ்ணு, உருத்ரன் இந்திரன் முதலியோா பகவான் படைப்பிலடங்கி நகாரணமென வொதுக்கப் பெற்றாரக சம்பு சப்தவாச்யரே, சாவகாரண காரணரெனக் கோடலமைவுடைத்தா மென்றோதியதையும், மெய்ஞ்ஞானத் தையாசிரயித்த வனைவரும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளா ரென்பதும் உண்மையேயாம். மேலும் வேதம், மற்றோரவசரத்தில் "பராத்பரதரோப் பிரஹ்மா, தத்பராத் பரதோஹரி: தத்பராத் பரதோ ஈச : தஸ்மாத் துல்யோதிகோநஹி' என வறுதியிட்டு முடித்த நேர்மையையும் யாம்பரியாலோசிப்போமாக. ஈசாவாஸ்ய மிதம் ஸர்வம் என்றற்றொடக்கத்து "ஈசா வாஸ்யத்தினும், 'ஈஸ்வரஸ் ஸர்வபூதாநாம்" என்றற்றொடக்கத்திய பகவத்கீதா மந்திரத் தொடரினும் ஈசான:ஸர்வ வித்யாநாம் எனப் பெறப்பட்ட கேநோபநிடதத்தினும் ஈஸ:, ஈசான : என்ற சப்தங்கள் சிவனுக்குப் பரியாய நாமங்களாக மந்திரத் திரஷ்டர்கள் கொள்வாராக :—எம்பெருமான் ஸ்ரீ சங்கரனே திரிமூர்த்திகளில் சிரேஷ்டரென்றும், அவருக்குச் சமானமான கடவுளராவது அதிகமான பதார்த்தங்களாவது யாண்டு மில்லை யென்ற சுருதி முடிவையும் அறிஞர் ஆய்ந்தறிவராக. எம்பெருமான் கர்ப்பவாஸத்தை துர்வாசமென்று கூறி, துர்வாசரென்ற திருநாம மடையப் பெற்றதே சான்று மென்ப.

"ப்ருதிவ்யோபவ, ஆபஸ்ஸர்வ:, அக்நேருத்ர:, வாயுர்ப்பீம:, ஆகாசஸ்ய மகாதேவ: சூர்யஸ்யோக்ர : சந்திரஸ்ய ஸோம:, ஆத்மாந: பசுபதி :" என்று பரமனது அட்ட மூர்த்தங்களை வந்திரு சுருதியில் பெறப்பட்ட ஈஸ்வர நாமங்கள் யாவும் சிவபரமாய்க் காணப் பெறுதலையும் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளது முக்கியமாம். மேலும், விடையளோர் பல்வேறவ சரங்களில் "சிவ எவகேவல :," என்றவனது பரிபூர்ணத் வத்தைச் சிறப்பித்ததும், "சிவ ஏகோத்யேய :" "ஸ ஏகோருத்ர ந த்விதீயாய:" எனக்கூறிப் போந்து சிவமே (சிவனே யன்றி!) த்யேய பதார்த்தம (உபாஸ்யர்) எனப்பிரகாசமாய் முடித்து, முடித்தவழி ஏனைய கடவுளர (ஏனைய கடவுளருள ரென்பதே எம்முடைய சம்மதமல்ல) உபாசகரே என்று சூசிப்பித்த முறைமையையும் யீண்டைச் சிந்தித்து உண்மை யுணர முயலவோமாக.

"சிவ:" என்ற சப்தம், மங்கலம், எனப் பொருள்பட நின்றதாக :—சுக வாரிதியாய்க் கொள்ளக்கிடந்த காரண காரியமாதிகக் காரண பிரஹ்மம் கற்பித குறைநி தோஷங்களா யடைந்து நாமரூபங்களொடு சாயுஜ்யம் பெற்றவழி, நாமரூபங்கட்கு வேறுபொருள் தழுவி நிற்கும் ஜீவர்கள் நாமரூபம் பட்டொழிந்து மீண்டு மீண்டும் இன்னணம் இன்னணம் தோன்றி யோங்கி முடிந்து வினை வயத்தராய்க்கிடந்துழலும் பிரமாதி தேவர்களை யாண்டு மெஞ்ஞான்றும் கடந்து யாவுமா யல்லவாய் நின்ற தென்ற உண்மையே யீண்டைப்பட்டப் பகலெனப் பெறப் பட்டதென்க. பொற்கிரீடமும், பொற் சிலம்பும் பொற்காப்பும் பூஷணங் களை நோக்குழி வேற்றுமை யுடையன வாகவே எண்ணப்படினும், பொன் னையே நோக்குழியாங்கனம் ஒன்றி யொன்று விக்யாசப்படுவனவாகக்காணப் பெறும்! காரணத்தைத் தவிர்த்துக் காரியங்கள் வேறுங்கொல்? காரியப் பொருட் கூட்டத்திடைத்துக் காரணப் பொருளினது திர்ஷ்டி நாம் அடைய வேண்டிலமோ? பஞ்சையன்றி நாலுண்டுகொல்? நூலையன்றி யாடையுண்டு கொல்? சிவனை யன்றி ஜீவனுண்டுகொல்?

சிவத்தை யன்றிச் சிவனுண்டு கொல்? (ருத்ரன்) சிவத்தை யன்றிப் பிர மனுண்டுகொல் (சதுர்முகப் பிரஹ்மா) சிவத்தை யன்றி விஷ்ணுவுண்டுகொல் (காரியப் பிரஹ்மம்) சிவத்தையன்றிச் சத்தியுண்டுகொல்? லோகநாயகி எம் மன்னையினது புருஷரூப சத்தியன்றோ சாக்ஷாத் விஷ்ணுமூர்த்தி. நாராய ணன் என்ற சப்தம் ஹரிக்கு ரூடிநாமமும் சிவனுக்கு பரியாயநாமமுமாகுமென் பர் அறிஞர். இவ்வுண்மையை யிவண் இனிது பிரகாசப்படுத்துவாம். எந் தாய் ஸ்ரீ மஹாலக்ஷ்மி தேவியாரை நாராயணி யென சாஸ்திரம் யாண்டும் பேசக்காண்கிலமே. சிவனை நாராயண னென்றழைத்த வழி சிவை நாரா யணி யென்று பேசப்பட்டுள்ளதை பெரியோர் கூறு விற்பரன்றோ? ருத்ரன் ருத்ராணி; சங்கரன் – சங்கரி; பரமேஸ்வரன் – பரமேஸ்வரி; மகாதேவன் – மகாதேவி; என்பனவாதி ஆரியத் தொடர்களைத்தரிசிக்க: சுருதியும் "யோனி:

பவாநீ : புருஷோ விஷ்ணு குரோதேஸகாளி, சமரேசநாக " என்
வோதியதை யுணாவீா. எனவே, சிவனும், விஷ்ணுவும், சிவமும் சக்தியுமாய்
முடிந்த ரஹஸ்யத்தை உய்த்து நோக்குதிர் !

" சிவஸ்ச நாராயண " வென்றுரைக்க வேதமே சான்றாம் " மாதரு
தேவோபவ" "பிதருதேவோபவ" என முழங்கும் மந்திரங்களை யுணர்ந்தும்
லோகமாதாவையும், லோகநாயகனையும் எந்நிந்த சாதுக்கள் நாம்வழிமொ
சிவன் எங்களப்பன் - விஷ்ணு எங்கள் அம்மையப்பர் அப்பர் பெரியம்மா
அம்மையே சிரேஷ்டமோ? யாவரறிவார்? எங்களப்பனையன்றி வேறு தன்
னைக் கவகாசமேதோ கூறுவா. எங்களம்மையை யன்றி சிவம் என்னாம்
வாழ்வடையுமோ கூறீர். பேதைமாக்களே! பஸ்மாசுரனை யொழிப்பான்
விஷ்ணு சிவனைக்காக வெளிப்போந்தசால் சைவாகட்டென்ன கௌரவம்
தாழ்ந்துவிட்டதோ சொலீர்? பாணாசுரனுக்கடிமைப்பட்ட சிவனை அப்பா
ணனை வென்று கொளுக்கிணங்க கண்ணனுருவே புரிந்து பின் வாங்கியோடி
நடித்தாரென்றதால் எமது வைணவ சோதரர்க்கு மெத்த நத்த புதுமை
ளாவம் வந்தடைந்ததோ வறியேம். எங்களப்பனும் அம்மையும் அடியோங்களைக
(ஜீவராசிகளை) ரக்ஷிப்பான் திருவிளையாடல் புரிந்தனரென
றேயாம் துணிந்து கூறுவம். கடவுள் ஒருவரே யென்பது சர்வ சமய சம்மத
மாதலால் கடவுளிருவர் மூவர் பலர் முளைத்தெழுந்து அல்லல் வளர்த்து
அலக்கணப்பட்டு மாய்ந்தனரென்ற விஷயம் படிப்பறியா பெண்மணியும்
நகைக்கும் பான்மைத்தே என்பது ஸர்வ பிரதிபந்தமயாம். எந்த விஷ
யத்தையும் உண்மை விசாரணை செய்வான் வெளிப்போந்த நல்லோர் அவ்வவ
விஷயத்தை ஸ்தூலக் கண்கொண்டு பாராது ஞானக்கண் கொண்டு பார்க்கக்
கடவர்! " எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள்
காண்பதறிவு" என்றார் திருக்குறளாசிரியரும். ஞாயிறை ஸ்தூலக்கண்கொ
ண்டு பார்ப்போர் அவனைச் சாணளவுள்ளவனாக்வே காண்பாராயினும், சாஸ
திர நோக்கத்தாற் காண்பார் இப்பருமபூமியினும் பத்துநூறாயிரத்துணையோ
பெரிய பதார்த்தமாமென முடித்தே சாலும். குருளையாகிங்கும் சுடர்ந்தமெ
ழுகுவர்த்தி எரிந்தொழிந்த சம்பவத்தை மண்ணுற்ற வறியவராகள் அஃதில
பொருளாய்ப் போயதே யென்பாராகவும், வைஞ்ஞிக சாஸ்திரவல்லுநர், அஃ
துருமாறிற்றேனும் உள்பொருளாயக் கிடந்ததென்வே சித்தாந்தம் செய்தமைத
சாலும். மதச் சம்பந்த மொழியப்பெற்ற தயப்பந்து சிங்கராதியோர் சூன்யமாய
முடிந்தனரேனும் எனச் சாமானியர் கொண்டாடன்று மயங்கவும், அறிஞர்
அறறன்று அனமொ யாண்டொழிந்தாரேனும், யாண்டமைரல்லரென்ற அநு
பவ சித்தமாயுணரப்பெற்றது சான்றும். அடிநுனி யிரண்டுமொன்றாய்க
கிடந்த கோம்பொனறும் கிடைக்குமோ? நுனியுண்டல அடியுமுண
டன்றோ? நுனியு மடியுமுமல்ல, இடையு முண்டென்பதிற்றடையுண்டு

கொலோ? இன்றுயிர்த்த ஜீவன் ஈரெட்டாண்டுமுன் எங்கிருந்தனன்? அன்றியலேனல், இடையிறந்தொன்றவனவன்? இடையிற்றோன்றி வாழ்வடைந்தவன் இறப்பின்பொளித்த சேத்திரமெதோ? அன்றிருந்தவன் பிற்றைஞான்றெங்கு நிற்கின்றனன்? முன்னிலைவாக் கானறிவுடையில முளைப்பது யாங்ஙனம்? இப்போதுள்ளதோ [illegible] ஞானம் [illegible]? ஒவ்வொரு பதார்த்தமும் காரணகாரிய சம்பந்த சம்மந்த நாம பரிபாகங் கூட்டிய காலதேச வர்த்தமான பாவங்களை பேசிப்பதுண்மையாகவும், முன் பின்னற்றது மத்யகாலத்தே மூர்த்திகரம் பெற்றெழுமெவனோ? பிரயோகமாகை (ஸ்யாணையை) தேகத்தை விட்டகலச்செய்து இந்திரியத்தை விட்டோட்டிய (குளோரோபாரம்) Cloroform வாயுவயப்பட்ட ஜீவன் அரைநாள் நாழிகை நேரம் தன்னால் இயக்கப்பெற்ற தேகத்தின் உறுப்புக்களை வெட்டுண்டும், குத்துண்டும், அறுப்புண்டும், அவற்றியற்றலை யுணரப்பெறாது மறைந்தொளித்தனனேயும், மீண்டும் அவன்றன் உறுப்புக்களினிடம் குதித்து வையிற்றையாடல் கண்ட தெவன்? அவன் ஒளித்தவ்வயப்பாண்டு, பலரை விட்டு ஈரவ்வயம் மீண்டும் ஜனித்தனனேயோ? எனவே, ஜீவனுண்டெனப்பல விசாரப்படுகின்றோம். ஒரு ஜீவனை மற்றொரு ஜீவனறிதற்கு [illegible] ஒளித்து வாழ்வளித்து [illegible] யுணர்தற்குத் துவாரமாய் நின்ற பெருமான் ஒருவன் உளனென்ற சத்தியத்தையும் தாக்க சாத்தியமாய [illegible] அம்மூர்த்திகர அபிராகிருத அகண்ட பரிபூரண [illegible] பல்கோடியுண்டெனக் [illegible] அசங்க பாப முடிவதால் ஆன்ம வொன்றே சத்யம் அது [illegible] நாமரூபங்கொண்டு வர்த்தியா என்றதென்று தத்வ லக்ஷணங்களைச் [illegible] பிரகாசப்படுத்துகின்றோமன்ம. புத்திமான்களே [illegible] போதனைக்கு நேரமப்படி [illegible] போலும்.

திடம் பரம நாம ஒரு பெரிய மனுஷ்யனை சந்தித்த விட்டது நீவிர் வாழ்வடையும் ஸத்பப மணமுடைய கோவென வசாவ, அவர்யாம் இன்ன பங்களாவில வஷிக்கின்றும் என விடையிறுத்து நின்ற சமயபவத்தை யுணர்வீருலகீர். பெரிய மனுஷ்யனை பங்களா முழுவதுமோ வியாபித்துள்ளார் கூறுமின். யாதொரு விஷயத்தையும் அறிவைக்கொண்டே உலகங் காணுமாக. "மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்றருளிய முதியோர் முத்துவாக்கியத்தை முற்று மவமதியாமல் பரமேஸ்வரனை யடைவான் கருதி முன்னாட்கிரகங்கள் அந்தரங்க பிரகாச உபாசனைகளிற் பழகி அவனருந்த கல்யாண குணங்களையும் விடாதொருகித் திருவருள் கடாக்ஷிக்க அவன்றிருமேனியருளே யெனத்தெளிந்து அன்புருவாய் நின்று அவனருட்கடல் மூழ்கி பற்றொழிந்து கிடந்த புயலேதியோர் மீண்டும் தம்மையடைந்து மனமடைந்து போந்தபோது இந்திரியவாயிலாக வெளிப்பட்டு ஓயாத வியாபாரம் செய்து

திரிந்த மனதை ஒருவழிப்பட நிறுத்தி அதைத்தன்னைத்தானே படிக்கச்செய்து அந்தர்ப்பாஹ்ய யேந்திரியங்களின் பாகுபாட்டை யுணர்ந்து அவைகட் காதாரமாய் நின்றவிகார ரஹிதமான அறிவைத் தெரிசித்து, அவ்வறிவின் கண் ஆணவ சம்பந்தியான ஜீவன் லயமடைந்து இந்திரியாதீத வநந்த ரூபமாய்த் தாம் வெளிப்படற் குரிய சாதனா சாதயங்களைப் பழகி வருவதைக் காணுகிறீர்! நிஷ்காமிய கர்மயோகிகளாவார அபிமானத்தோடன் ஒன்றுஞ் செய்யாராகி, தங்கடங்கள் நிலைமைக்கேற்ற கடனை பகவத் சங்கல்பமெனக்கருதி முடித்து, பிராரத்வம் தூண்டத் தாங்கள் செய்யாநின்ற சத்கர்மங்களின் பிரயோசனத்தை ஈஸ்வரார்ப்பணம்செய்து தாமரையினின்ற ஜலம்போல் உலகத்தோடு பொருந்தியும் பொருந்தாதுவாழ்வடையும் பெற்றியும் மனக்குரங்கையடக்கும் வழியேயென்க. அம்மனம் அடைந்துள்ள அபாரகௌரவங்களை யாவரறியப்போகின்றார்? அம்மனமே யுணர்ந்ததோ உணராதொழிந்ததோயாமறியோம். அகண்டாகார விர்த்தியடைந்த ஆகாசப்பூதத்தை கூடவிழுங்கியேப்பமிட்டு கிடக்கும் அது. அதையறிய, அதை வெல்ல, அதை யடக்க, அதை வசப்படுத்த, அதைச் சித்தாய் மாற்ற பிரயத்தினிப்போர்கட்கும அசாத்யம் அசாத்யம்! இக்குருந்த விருக்ஷத் தடியில் நாம் அமர்ந்தோம் என்றபோது, அந்த இடத்தே வியாபித்தது மனம். இந்தப்பிரதேசம் என்றபோது, அந்தப்பிரதேச முழுவதும் வியாபித்தது. இந்த மாகாணம், இந்தக் கண்டம், இந்த வண்டம், பகிரண்டம், என்ற ஒவ்வொரு சொற்றொடரையும் பின் பற்றி யாண்டும் அது வியாபியாநின்றதைக்காண்மோ. கல்கத்தாவைக்கண்டு வந்த கண்கள் சென்னையின் ஒருமூலையிலொதுங்கி நிற்பவும், கல்கத்தா வென்ற மாத்திரத் தானே, ஆண்டுள்ள பகீரதிநதிப் பிரவாகத்தையும், சுபிரீம் கோர்ட்டு, தந்தியாபீசு, தபாலாபீசு, சக்ரவர்த்திப் பிரதிநிதியாரது இந்திரவனம் முதலியனவாய யாவற்றையும் கண்டுகளிக்கும் மனக் கண்ணைக் காண்மின்.

இந்தப் பாழ்மனம தான், மூவராதியோர்க்குந் தற்போதத்தை யூட்டியாடல் காணு நின்றதுணர்மீர். இது கிடப்ப மற்றொன்றைக் கூறிச் சந்தோஷப்பிக்கப் புகுதும். ஒருவன் நான் களைத்தேன், நான் பருத்தேன், நான் இளைத்தேன், நான் சுகித்தேன், நொந்தே னென்ற முறைமையே நேரியதோ? அற்றன்று: என் தேகம் களைத்தது பருத்தது, இளைத்தது என்மனம் சுகித்தது துக்கித்தது ஞானகரங்கள் செயலன, பால்மனம் நடந்தது நொந்தன, என் பனவாதிகள் தாமேயாயதமாகக் கொள்ளக் கிடப்பனவென முதியோர் கூறிப்போந்ததே சர்வஸாமஞ்ஜஸமேயோ?

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு மருளானா மாணாப்பிறப்பு" என்றஞ்ஞான விருளை வாட்டவெழுந்த தமிழ் வேதத்தொடராம் ஞாநபாநுவே நமது மனக்கண்ணுக் கொளி தந்து உள்பொருளை காணுமாற்றலையுந் தந்தது காண்மின். பொருளைப் பொருளாக வறிவதே யதை யுபாசிக்கபடியா மென்பர்.

பொருளல்லவற்றைப் பொருளென மயங்கும் அறிவினர்க்கோ பொருள் ஞானமுண்டாகும் கூறீர். பொருளை யுணரப்பெறாது பிரதீகையே பொருளெனச் சித்தாந்தம் செய்யா நின்ற போலிப் பேதை மாக்களோ பொருளிருந்த திக்கையேனும் உணர்ந்தனராவர்.

## வேதம்.

"ஏக மேவாத் விதீயம் பிரஹ்ம :"

"ஏக ஏவருத்ரோ நத்விதீயாயம் ஏகோருத்ரா : ஏகமேவா த்விதீயம்" எனக் கூறிப்போந்த தென்னையோ? இரண்டாவது பதார்த்தத்திற் கவகாசம் கொடாத பொருளன்றோ பிரஹ்மம்.

முன்னிலைச் சுட்டுப்பதார்த்தங்களை யேனும், படர்க்கைச்சிறு பெரும் பொய்ப்பொருட் கூட்டத்தையேனும் தவிர்த்து விளங்காத **தான்** (அவன் **தான்**) அவள் **தான்**; நீ **தான்**; நாம் **தாம்**; சிலா **தான்**; நாய் **தான்**; ஜடம் **தான்**; மலம் **தான்**; என்ற சொற்றொடர்க்கண் பிரகாசமாய் விளங்குவது; எம்மைத் தான்விட்டு நிற்குமாற்றலுடையுங்கொல்? **எம்மை** யகலவிட்டுச் **சிவம்** வர்த்திப்பது முண்மையேயோ? அஃதசம்பவம் : அசம்பவம். எமைவிட்டு யாம் நிற்ப தொன்றுண்டேல், சிவமும் எமைப் பிரிந்து, எதிர்ப்போந்து, எமக்குப் பிரகாசித்தல்சாலும். எம்மையாமே யென்னணம் எதிரிட்டறிவது? எமதறிவினறிவாய் நின்ற சிவத்தை யென்னணம் எமதறிவினின்றும் பிரித்து முன்னிலைச் சுட்டுப் பதார்த்தமாக வறிதலொல்லும்? "சிற்றம்பலமும் சிவனும் அருகிருக்க வெற்றம்பலந்தேடி விட்டோமே" என்றார் எம்மையாண்ட பட்டினத்தடிகள் "ஆலயமே காயம், அறிவே சிவலிங்கம்" என்றார் எங்கள் ஞானமூர்த்தம். "தேஹோ தேவாலய ப்ரோக்தஸ்ஸ ஜீவ : சிவ" என்றது சுருதி. எம்மெதிர் நின்ற தீபத்தையும், சுவற்றையும, நாய் தன்னையும், உணவாதிகளையும், சிறுவர் சிறுமியராதியோரையும், ஆழ்ந்தவாக்கையும், மேதாவியர் கூற்றையும், சித்தாந்தச் செல்வரையும், வேதாந்தப் பண்டிதரையும், விசிட்டாத்வைதப் பெரியோரையும், த்வைதப் புமான்களையும், யாவரையும், யாவையையும் சிவத்திலும், சிவம் துவாராவாகவுமேயாம் கண்டோ மென்பது சிவாநுபூதிச் செல்வரது சம்மதம்போலு மென்க. "பார்க்கின்ற மலரூடு நீயேயிருத்தி" என்ற பெரியரிற் பெரியர் இருதயத்தை யுணர்ந்துவாழ்வீர். "நீயலாற் பிறிது மற்றின்மை சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம் திருப்பெருந்துறை யுறைசிவனே, ஒன்று நீயல்லை, யன்றி யொன்றில்லை யாருன்னை யறியகிற்பாரே" என்ற தமிழ் வேதத்தை யாருமை மேற்கொண்டு சிந்தித்து நாமொழிந்து சிவமாகி நிற்பச்சிற்சுகோதயத்தை இருந்தவிடம் பெயராதிருந்தே அடைவோமாக. நாமரூபாதிகள் ஏகதேசமேயன்றி மற்றென்னுங்கொல்?

"மெய்ப் பொருள் மகேசனரன் வேதனரியானால்
மைப்பரு மகேசியுமை வாணி திருவாவை
இப்படியுமன்றி யவனெப்படி யெடுத்தான்
அப்படியுமாகுமுனை யாரறிய வல்லார்!"

என்ற ஆரியர் கூற்றினது அர்த்தபுஷ்டியை யாமீண்டைத் தரிசித்தபடியாம்.

ஞாதுருவன்றி ஞேயமில்லை. ஞேய மில்லாதபோது ஞாதுருவின்று ஞானமுமின்றாம். அறிபடு பொருளில்லாக்கால், அறிபவனில்லை. அற்புதப் பொருளில்லாக்கால், அற்புதமென்பா னொருவனில்லை. அன்பைச் செலுத் தத்தக்க இடமொன்றறியான் அன்புளனாதல் எங்ஙனமோ? அருளைப் பெறும் பதார்த்த மொன்றில்லாக்கால் அருளுடையா னொருவனிருத்தலும் பொய் பொய்யேயாம். வல்லியைத் தழுவாது வாழ்வடைவாருண்டு கொல்? புமானைச் சேராது புன்முறுவல் பூத்தாளுண்டேயோ? எனவே, சேதனா சேதனப் பிரபஞ்ச முண்டென்ப துண்மையேயாக, துவைதம் சித்தித்ததையுணர்வீர். துவைதக் கொடியை நாட்டுதிர். பல்வேறு பசுக்கூட்டங்களையும், பாசத்தையும், பசுபதியையும் காண்டிர்! எத்தனை எத்தனை பசுக்கள் பசுத்வம் ஒழியக் கிடப்பன வெனக் கணக்கிட்டுப்பாரீர். எத்தனை யெத்தனை பசுவர்க்கங்கள் பூரணம்பெற்றுச் சிவ சந்நிதானத்தில் அருக்கனில் விளக்கொளியென வாழ்ந்தனவென நோக்குதிர். எத்தனை எத்தனை பிரமஞதிப் பசுக்கள் பாசமகலாமல் பதியிற் கலவாமல் முத்திபெற்றனவென்றுசாவுவீர். சேதநத்தை யறிவிப்பானும், அசேதநத்தை இயக்குவிப்பானும், ஒருவன் வேண்டப் படலானும், ஒவ்வோர் ஜீவனுக்கும் சேதனா சேதனஞானத்தை யூட்டுவானும், அசேதன ஜடபதார்த்தங்களை யுயிரெனவின்று ஆடல் காணபானும்: எம்பெருமான் ஸ்ரீபாஷ்யகாரர்தாமேயோயீண்டைப் பின்னும் உலகத்தை ரக்ஷிக்கப் போந்துளரெனக் கண்டவர் கேட்டவர் யாவருமே சங்கிக்கும் வண்ணம் அறிஞர் ஸதம் சிற்றன்றலை வராகும் எங்கள் நீலமேனியன் கிருபாசாகரம், ஸ்ரீய: பதி ஸ்ரீமந்நாராயணன், வாசுதேவன், கண்ணனெங்கோமானதளவிறந்த கல்யாண குணாதிசயங்களை சதசிகள் யாவரும் தததம் மதங்கள் தற்செயலாயொழிந்து, வைணவமணிகளாய் அப்போதே மாறி யருந்தி யருந்தித் தெவிட்டாதருந்திச் சுகித்துச் சுகித்துச் சுகித்துமே சுகம்பெறச் சுகத்தையூட்டும் எங் கண்மணி குருமணி, * தவமணி முனிமணி ஹரிமணி யானார், ஜயஜய வெனவே பண்டிதர் போற்றும் பண்டித குருமணி ஸ்ரீமத் உபய வேதாந்தப் பிரவர்த்தகாசாரியர் கா. ஸ்ரீ. கோபாலாசாரிய சுவாமிகள் கருணைததும்பிக் கருணையேயாகி ஏழையா மெமக்குப்

---

* எமக்கு முதற்றமிழ்ப் பாஷாஞான சாகரத்தை யூன்றவும் சென்னைச் சர்வ கலா சாலைப் பிரதவர்த்தகரான பெரியோரிடம் இனி M A பட்டம்பெறவும் யாம் விளங்கவும் திருவுளங்கொண்டு எமக்கு உதவிபுரிந்தது கண்டு பண்டிதர் பெருமானென வொளிரும் அச்சுவாமிகளை யிற்றைநாள் எங்குருமணியாய்க்கொண்டு யாம் வாழ்வடைந்தோம் என்ற உண்மையைப் பாமர உலகம் உணர்ந்து அடங்குவதாக !!!

போதித்தவாறே, என்னணம் மாந்தமாதி ரோகங் கண்ட குழவினுக்கு அந்தந்த ரோகாதிகள் உடனே ஒழியவேண்டுமேயென்ற கவலை தாய் தந்தையர்க்குள்ளதாய் முடிந்ததோ, என்னணம் நோயுற்ற தமமகவின் க்ஷேமத்தை உள்ளபடியே யபேக்ஷித்துத் தாய் மருந்தூண்டு பத்திய உணவருந்துவளோ, அன்னணமே ஜீவராசிகளது பந்தமோக்ஷம் எம்பெருமான் ஆதிமூலத்தினது பந்தமோக்ஷமாகு மாதலான் பந்தமோக்ஷ ராஹித்தியம் பெற்றும், உண்மையில் முமுக்ஷுவா வானுமான ஒரு பரன் அசேதன சேதன பதார்த்தங்கள் ஜீவிப்பான் அவைகளிற் சர்வ வியாபகனாய் விளங்கவேண்டு மாதலானும், விசிட்டாத்வைதம் சிறந்த தூணர்வீர்! பார மார்த்திகப் பெரும் பதார்த்தத்தைத் தவிர்த்து ஒரு சிறு பரமாணுவும வாழ்வடைதல் அசங்கதமாதல் சுருதியுக்தி அநுபவ பூர்வகமாகப் பிரமாணமாவதான் அறிவானும் அறிவும், அறிபடு பொருளுமே ஒன்றெனை முடிந்ததால்—அத்வைதம் சத்திய மாதலுணர்வீர்! அம்மவோ! ஒன்று, இரண்டாயும், மூன்றாயும், பலவாயும் விரிந்ததா ரறிவமோ ரயோ! அவ்வொவான்றே யதை யுணர்ந்த தேயோ! "யாவையுஞ் சூனியம் சத்தெதிராதலின் சத்தேயறியாது" என்று பெரியோர் கூறியுள்ளாரே. சத்துதான் அசத்தை யுணர்ந்ததேயோ? ஒரு பரவஸ்துவே, அறிவானும், அறிபடு பொருளுமாய் விரிந்த விஷயம், மகாத் தாமதக மெட்டாவாம். சித்தேயசித்தான தை சித்தேயுணராதென்றுற சித்துமாகாது அசித்துமாகா தொழிந்த உலகம் அறியுங்கால? "பதியாகி யுறைபவனே பாசத்தாற் கட்டுண்டு பசுக்களாகி" எனவும், "நிற்பன நடப்பனயாவும் நேர்ந்திடிற் பொற்புறு சடையவனுருவம்போலுமால" எனவும், "நிற்கின்ற வெல்லாம் நெடுமாலென்றேயுராதார், கற்கின்ற வெல்லாம் கடை" எனவும் நம்பெரியோர் பணித்ததைப் பணிவுடன் பின்பற்றி வாழ்வேமாக! அஷ்டாக்ஷரப் பெருமானை வந்தித்த சமயம், வேதம் "ஸர்வகாரே, ஸர்வி நலபோ, ஏகோநாராயண:" எனத் துதித்ததின் பெரும்பயனை யாமடைவோமாக. **ஓம் நமோ நாராயணாய** என்றோதிய மஹான்கள **ஓம் சிவாயநம**: எனவாண்ட நேர்மையையும் நாம் ஆழ்ந்துணரக் கடமைப்பட்டோ மென்ப துண்மையேயாம். சிவ சகஸ்ரநாமங்களில் ஹரிநாமம் பேசப்பட்டமையும், விஷ்ணு ஸஹஸ்ர நாமங்களில் சிவ நாமம் கேழ்க்கப் பட்டமையும் அறிஞா அறிவைப் பிரகாசப் படுத்தியதைக் காண்மோ.

> "சிவாய விஷ்ணுரூபாய, சிவரூபாய விஷ்ணுவே
> சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு: விஷ்ணோஸ்ச ஹ்ருதயம்சிவ:"

என்பதன்றோ ஸ்கந்தனது உபதேசமாய் முடிந்தது காணீர்!

> " மத்பக்தா சங்கரத்துவேஷீ மத்வேஷீ சங்கரப்பிரிய":
> " தாவுபவ் நரகோயாந்தி யாவத சந்திரதிவாகரவ்"

என வெளிப்போந்துலவும் திவ்ய மந்திரமுமன்றே உண்மையை நிறுத்தி யாவர்க்கும் க்ஷேமத்தைச் செய்தது. "ஏகமான வுருவான நீயருளினு லனேக வுருவாகியே" வென்றற் றொடக்கத்துத் திராவிட ஸூக்தியும் எமதபிப்பிராயத்தையன்புடன் தழுவியதென்க.

" தாழ்சடையும் நீண்முடியும் மொண்மழுவுஞ் சக்கரமும்
சூழரவும் பொன்னுணும் தோன்றுமால்—சூழுந்
திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்றாயிசைந்து "

எனமகிழ்ந்து கட்டளையிட்ட ஆரியரமுத வுரையும் சைவவைணவர்கட்கு மெஞ்ஞானத்தையூட்டுந் தாயேயென்க. அன்பர் பாவிக்கும்வண்ணம் ஆவிர்ப்ப விக்கும் பேராற்றலுடைய பரப்பிரமம் ஒன்றே இன்னணம் லீலைபுரியாநின்ற தென்று மேலே உதகரித்த பிரமாணங்களால் ஏற்படுகிறது. ஒருவன் தன்னு யிர்க் காதலியுடன் அளவளாவி யின்புற்றிருந்து சுகமடையுஞ்சமையத்தும், புத்திரபாசமேலீட்டால் தன் குழவிகளைப் போஷித்துக் கொஞ்சுமமயத்தும் அதிகார உத்யோக சபபதமெதயதி ந்யாயவாயிலாக துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம்புரியு மவசரத்தும கோலமாறி நின்ற திலையோ? குணமாறி நின்றதிலையோ? ஸ்தலமாறி நின்றதிலையோ? தான் ஒருவனேயன்றி இன் ஞொன்னவற்றை முடிப்பான் தன்னிற்றன் அவகாசம் கொடுத்த மூவர் பேர் வழிகள் ஏற்பட்டனரேயோ? ஏனெ இந்த யுக்திப்பிரமாணத்தை யாம் சாக்ஷாத் சங்கரனது, சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனது ஸ்வப்பிரயோஜனமாகாது (அவன் வேண்டுதல் வேண்டாமையிலான்) பரப்பிரயோஜனுர்த்தமாகவே (' இமைப்பொழுது முபகார மல்லால் வேறொன்றியக்கா நிற்குணக் கடலாய் நின்ற வொன்றே என்றார் எங்குருவும்) பரமனிடம் கற்பிதமாகப் பேசப் பெறும் கிர்த்தியங்களிடமாக சமர்ப்பித்துச் சந்தோஷிக்கப்போகாது?

" ஒன்றவன்றானே, இரண்டவனின்னருள் நின்றனன் மூன்றனுள்" எனத் திருமந்திரமு மெழுந்து கூறாநின்றதன்றே. நமதுயர் நீதிச்சாலையினது பிரபல ஜட்ஜியாவாரொருவர் (சிவில் சைட்) (Civil side) வாதம்தொடுத்த ஒருவனுக்கு 5000-ரூபாய்க்கு டிக்ரீ (decree) கொடுத்தாரேனும், அவரே பிற்றைநாளவன் கொலைபுரிந்து செஷ்ஷன்ஸில் சார்ஜ் செய்யப்பட்டு. தம்முடைய சந்நிதானத்தில் (தாம் செஷன்ஸ் ஜட்ஜியாக வீற்றிருந்த சமயம்) கொண்டுவரப் பட்டபோது, அவன் துஷ்கிருத்தியம் ருசுப்படுத்தப்படவே தக்க சிட்சை விதித்தவனைத் துன்பப்படுத்தலும் கண்கூடன்றோ? எனவே, ராவணன்தவம் கிடந்தபோது அவனுக்குப் பிரஸன்னமாகிப் பிரசாதித்த சங்கரன் மீண்டும் அவன் றன்னை மறந்து தேவராதியோரை ஹிம்சித்தானாக ஸ்ரீ ராமமூர்த்தியாய்ப் பொய்யுலகத்தே போந்து அந்த ராவணேஸ்வரனையே நிக்ரஹசக்தியா

லொழித்து அவனுக்குச் சாயுஜ்ஜியம் தந்தாரெனக் கோடல் ஏற்புடைத்தன்றோ? "சிவ ஏகோத்தியேய:" என்ற சுருதி மீண்டும் "ராம ஏவ பரமாத்மா, ராம ஏவ பரப்பிரம்ஹ" வென வந்தித்ததென்னே? "சர்வம் நாராயணமயம ஜகத்" என்ற மந்திரம் சச்சிதானந்த ஹரியை யுணரப்பெறாத அஞ்ஞானிகளை யுத்தேசித்து பொய்ப்பட்டுப் போமோ கூறீர் பேதையுலகீர்.

எஜமானன் அவ்வப்போது, தம் விவகார விஷயங்களை முடிப்பான் கருதி எத்துணை எத்துணை மாறுபட்ட கோலங்கொண்டு வந்தானெனும் அவனிடத் தியல்பாயுண்டான அன்பை (மிருகத்திற்குள்ள மெய்யன்பு பல மனிதரிடத்தில் காண்கிலமே) பாராட்டும் சிறுநாய் அவனை ஒருபோதும் அந்நியனாய்க் கண்டு குரைக்காதென்றால் நாயறிவும் பெறாது நாடகம் புரியும்போலியன்பரை விவேகிகள் துரும்பாய் மதியாதொதுங்குவரென்பதிற் றடையுண்டுகொலோ? மதங்கொண்டு திரியும் மதத்தரே, வேதநிந்தை தெய்வநிந்தை பெரியார் நிந்தை புரிந்து பெருநரகத்திற் காளாமெயாழிவர் காணுதிர்!

"ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது வென்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே"

பித்யதே ஹ்ருதய கிரந்தி : சித்யந்தே சர்வ சம்சயா:
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே"

நாம் மேலே கூறிவந்த பலவித யோகங்களானும் கடவுளை யடைதல் கூடும். (யோகம்—சேர்தல்) எனவே முதலர்கள் விதயாஸநோக்கமின்றி நிஷ்காமியகர்மயோகிகளைக் கண்டவிடத்து அவர் ஆணையைச்சிரமேற்றும் மெய்ப்பக்தர்களை தரிசித்த வழி அப்பெரியருடன் கூடிநதுப் பரனைப் பஜித்தும். ராஜயோகிகள் சங்கத்தில் மநம் ஏகாக்கிரப்பட என்றும் ஞானிகளைச் சந்தித்தவிடத்து ஞானமே திருமேனியாகவும் என்றொழுகுவார்கள்.

எனவே, அன்புருவான சிவனை அவனது லீலாவிபூதியாம் அண்ட சராசர சேதனாசேதனப் பிரபஞ்சத் தோற்றங்களுமாம் சர்வ திருஸ்ய பதார்த்தங்களிடத்தும் அன்பை வளர்தது அன்பாலடைவோ மாக. சைவனையும், பௌத்தனையும், மகம்மதியனையும், கிறிஸ்துவனையும். நாத்திகனையுங் கூட பாரபட்சமின்றி நோக்கும் நோக்கமே சமரஸ நோக்கமாகும். துவைதி, அத்வைதி, விசிஷ்டாத்வைதி, என்பார் யாவருங்கூறும்.பொருளும் தேடும்பொருளும் ஒன்றே யெனத்துணிந்ததுஉம் சமரஸஞானமாகும்.

எந்தப்பொருளை அதிசூக்குமமாகச் சுருதி பிரஸ்தாபிக்குமோ அதையே ஸ்தூல வடிவாக புராணேதிகாசம் கற்பியாநிற்கும் எனக்கோடலே சமரஸ

ஞானப்பிரயோசன மாகுமென்ப. விவேகி, அவிவேகி, செல்வர் தரித்திரர், பிராஹ்மணன், சூத்ரன், சுமங்கிலி, அமங்கிலி, பெரியர், சிறியர்; சித்ஜடம் யாவரும் யாவும் பரமாத்ம வடிவமே யெனவுணர்ந்து உணர்ந்த வழியே நின்றொழுகுவதும் சமரஸஞானுநுபவ மென்று மேதாவிகள் கூறுகின்றனர்போலும். எம்மனோர் சிவத்தை யெங்கெங்குங் காணு நிற்பர். எம்மனோர் ஹரியைக்கண்ட கண்டவிடமெல்லாம் பார்ப்பர். எம்மனோர்க்கு இவர் சைவர், இவர் வைணவர், இவர் புத்தர், இவர் மகம்மதியர், இவர் கிறிஸ்துவர் என்ற பேத ஞானம் ஸ்வப்நத்திலுமில்லை.

யாவரும் யாவும் சிவமாய விளங்கு மெமக்கு. உலக முழுவதூஉம் ஹரியையேகண்டு களியாநிற்பர் ஞானிகள். எம்மதமும் சம்மதமெமக்கு. யாவரும் பெரியோரெமக்கு. அந்நியன் பத்நிதாயே யெமக்கு. வேசைத்தாசியும் சோதரி எமக்கு. எம்மனோர் வேசையைக கடாக்ஷிப்பரேல் அன்றே, அப்போதே அக்கணமே அவள் முமுக்ஷுவாய் நிற்பள். யாங்கள் படிப்பன யாவும் பரசிவ மந்திரம். யாங்கள் கருதுவபாவும் நாராயணவடிவம். யாங்கள் காண்பன யாவும் எம்பெருமான் கண்ணன்றிருக்கோலம். யாங்கள் சாம்பவ மணிகளைக் காணில் அடியேம் சைவரென்போம். யாஙகள ஸ்ரீ பாகவத சிரோமணிகளைத் தெரிசிரதவழி, யாஙகள் வைஷ்ணவபாததூளியே யென்றன்புடனறைவேம்: யாங்கள் மகம்மதியப் பெரியா குழாம்சேரும் பள்ளிவாசலை (Masjid) க்கண்டால் சிவ சிவ என்பம். கிறிஸ்துவ ஸ்திரீ புமான்கள் குழீஇருந்த கிறிஸ்துவ தேவாலயங்களைத் தெரிசிப்போமாகுல் ஹரி ஹரி என்பம். பிரஹ்மாகாரத்தை யாண்டும் எவரிடத்தும், தெரிசியா நிற்பம். சர்வம் விஷ்ணு மயம் ஜகத். சர்வம் சிவமயம் ஜகத். ஏக மேவாத்வித்யம் பிரஹ்ம: சத்யமேவ ஜயத்த !

பூனைக்கு ஞானமுண்டாயின் அது கடவுளையொரு பெரும்பூனையாய்த் தானேயறியும். புலியும் அங்ஙனமே புலிக்கடவுளையே காணுமன்றே. யானையோர் கடவுளை வேண்டின் அது யானைக்கடவுளையே யபேக்ஷிக்கும். சைவர் பூதி பூசிய பெம்மானையே யடைவர் வைணவர் தந்தெய்வத்திற்குத் திருநாமந்தரியா தொழியார். ஒருசாரார மோக்ஷத்திலும் பெரியபோகத்தைக் கோரா நிற்பர். ஒரு சாரார ஈஸ்வர சந்நிதானததில் பெண்டு பிள்ளைகளுடன் சாஸ்வதமாய் வாழ்வடைய விச்சிப்பர். ஒரு வகையார் சூன்யமா யொழிதலைப் பிரசங்கிபபா. பலர் பொருளை ஜடமெனக் கணிப்பர். பலர் இம்மண்ணுலகத்தையே யாவுமென்பர். பலர் எல்லாம் மனுகாரமென்பர். பலர் நரகத்தையேயாண்டும் காண்பர். சிலர் ஸ்வர்க்கத்தையே எங்கும் பார்ப்பர். சிற்சிலர் வைகுண்டம் தரிசிப்பர். கைலாசம் போவர். வெகு சிலர் சத்தியலோகமெய்திக்களிப்பா. ஏகதேசிகள் சத்தியமாய் விளங்குவர் கண்டீர். எது ஒருவனுக்கு மண்ணுலகாய்த் தோன்றியதோ அதுவே மற்றையோர்க்குத்

தனித்தனி முறையே அவரவர் மனோசங்கற்பம் காரணமாக இந்திரலோக மாகவும், விஷ்ணுலோகமாகவும், ஸ்ரீகைலாசமாகவும், பிரஹ்மலோகமாகவும் பரலோகமாகவும் தோன்றுமென்ப. மனோவிர்த்தி யொடுங்கும்போது, யாவத லோகங்களும் தன்னுளொடுங்கித் தானாய்விளங்கும் யாவும். எனவே பொய்ஞ் ஞான மொழிந்து மெய்ஞ்ஞான மடைந்து அடங்குவதாக பரம உலகம்.

"எங்கே யெங்கே மனமோடி யின்மையோ டென்ன வீழ்ந்தழுந்தும்
அங்கே யங்கே னெறிமுற்றி யகன்ற வழிநிறைவிட்டாய்"
"பதைத்தெழுந் துள்ளமா முதைப்பாய பறைக்கில்
உதைப்பாரங்கங்கே யென்றுரைக்கிற
மாயுமனப் பேயென்றுரைக்கிற"

எனவெழுந்த மெய்ஞ்ஞானிகளது வசனாமிர்தத்தை வாய்மடுத்துண்டு அஞ்ஞான உலகம் களைதெளிந்து சுகப்படுவதாக.

சைவரையும், வைணவரையும், மகம்மதியரையும், புத்தரையும், பிறரையும் நஞ்சைவப் பெரியோர்கள், நம வைணவப் பெரியோர்கள் ஒரே கண்ணாற் கண்டு களித்தல் சாத்தியமோ வெனக்கடாயின். நன்று கூறினாய். ஏனோ அது சாத்தியமாகாது. ஒன்று கூறு நும கேட்டி என விடையிறுத்து சந்தேக க்ஷபம். பல்வளம் பொருந்திப் பிரகாசியா நின்ற இசைசன்னையா நகரின்கண் ஆதுலர்க்குத் தந்தையும், தாயும், தெய்வமுமாய் நின்று அவரவரது குறையையும் மானத்தையும் காக்கும் கர்ணன் நாணுய கருணைவள்ளல், எந்தையை யிழந்த எமக்கு எந்தையாய் நின்று தரிக்கும் பெருமான்.

"விற்கதண்புனல் வேந்தனு மோங்குக"
"துடிகழிக் கோலே... 
னடிகழ் நிறகு மலகு"

என்று ஆசார்யர்களும், பரம புருஷோத்தமருங் கட்டளை யிட்டருளிய பிரமாணங்களின்படிக்கு ஜகந் மாதாவாக நாம் பாராட்டிவந்த சகலஸத் குணஸம்பந்நையாயும், உயிர்களிடத்து உலவாக் கருணை பூண்ட உத்தமியாயும் அரிசுபுரந் தசக்ரவர்த்தினியார் மறைந்து நம் பரசபிர்து ஏற்ற, அத்தருணத்து அஸ்தமித்த பாநுவேமீண்டு முதயமானதுபோலவும், நாம்கண்ணிழந்து பெற்றாங்கும், அத்தகைய ஜகந்மாதாவின் வைப்பயனுயும் :—"நாவிஷ்ணு: ப்ருத்வீபதி:" என்வும் "திருவுடை மன்னரைக் காணிற்றிருமாலைக் கண்டேனே என்னும்" எனவும் பெரியோர் பணித்தவாறு இறைவனது அம்சராயும் நமது ரக்ஷகராயும் விளங்கும (His Imperial Majesty Edward V1I) எட்வர்ட் சக்கிரவர்த்திப் பெருந்தகையாரது செங்கோன்மையைப் பெற்றோமாதலால், அவர்மாட்டு நமக்குள்ள விசுவாசத்தை ஏற்ற வண்ணங்காட்டி அவரருளுக்கு

உரியராக எந்நாளும் நடத்தலே நமதின்றியமையாக் கடனென எம்போல்வார் யாவர்க்கும் போதியா நின்ற எமதண்ணல், கிரீடி பாகனுய கண்ணன் அம்ஸமாவார், ராஜாசர் ராமசுவாமி முதலியார் Kt., C. I. E. F M. U. அவர்கள் ஏழைகட்கு ஆயிர மாயிரமாக் கணக்காய் ஆங்காங்கு மவ்வப்போதும் அன்புடன் அன்னமூட்டி யுபகரித்த கண்காக்ஷியை நேரேகண் டநுபவித்த யாம் அப்பெரியரிடத்து ஜாதி வித்யாச பாரபட்சத்தை யாண்டும் கண்டிலமே !! ஏனோ மற்றையோர் அவரைப் பின்பற்றி வாழப்போகாது ! உலகிர் ! இந்திரபோகமு மீண்டைத் துய்க்கு மெம்பிரபுவின தரண்மனையை யோர்நாள் அடைந்த யாம் அவரதிந்திரவன மெனத்தழைத்து விளங்கிய சோலையிற்கண்ட காக்ஷியொன்றை யீண்டெடுத்தோதுதும். நீண்டு பருத்த மாமரமொன்றனை அணைந்து கிடந்தது பூங்கொடியொன்று அதனைக் கண்டோம். உண்மை யுணர்ந்தோம். அங்கில நன்னாட்டை ஆதரவாகவே யணைந்துச் சுகித்த இந்தியாநாட்டின் நற்காக்ஷிபோலும் என்றே முடித்து எழில்பெற விளங்கினோம். நீண்டு பருத்து வயிரம்பற்றிய மரமே England (அங்கிலநாடு) அதையன்புடன் தழுவிய கொடியே India பரதவாஷம்) Englan புயாணைத்தவிர்த்து (India) வநிதைக்கு வாழ்வொன்றுண்டோ ?

மற்றோர்சார் யாம்கண்ட காக்ஷியைக் கூறுதும் கேளீர். ஒரு பசுமரத்தைப் பல பசுங்கொடிகள் சுற்றிச் சுற்றிப்படர்ந்து கிடந்தன. கண்ணனெம்மணணல் பிருந்தாவனத்தேகாட்டியகோல மிதுவோ வென்றேம்.

பலபல விருக்ஷத்திடையி லிடையில் புஷ்பச்செடிகள் புற்பூண்டு முதலியன செழித்தோங்காநிற்ப, மா,பலா, சந்தனம்,அசோகு,மந்தாரம் அடர்ந்த சோலைகள் கர்ப்பத்தின்கண் மல்லிகை முல்லை, இருவாக்ஷி ஷண்பகம் ரோஜா முதலிய புட்பச் செடிகள் பூத்துப் படர்தலை கண்ணுற் கணடோம். எனனணம் கூறுவேம். விசேஷசாலங்களில், அங்கில துரைகளும் துரைசாநிகளுமே கைகோத்து உறவாடி நகையாடி, பாலாடி மகிழ்வான் நெருங்கிநின்ற கோலமோ ஈதென்றேம். மற்றுமோர சார புதுமையைக்கண்டு நாயகன்றனைக் கரங்களாற் சுற்றித் தழுவி நின்ற நாயகியின் ஜாலம் விளக்கவே நின்றனவோ இவையெனக் கணித்தேம். இத்தகைய சிருங்கார கம்பீர கௌரவங்கள் ஒருங்கே யடையப்பெற்றுச் சிறந்த மாளிகைக் கதிபாரம் புண்ணியர் சமுகம் சேர்ந்தேம். சமுகம் கண்டோம் எம்மைக் காண்கிலோம்.

பிரபு எம்மை விளித்து வருகவென்றன்பொடு மொழிந்து மேல்மாடி சென்றனர். பிரபு கடாக்ஷ வீக்ஷண்ய லேசம் பெற்று கீழே நின்ற யாம் மேலே சென்றேம. அமராவதியைப் பழித்த கூடத்தைக்கண்டோம். யாம் கண்டுவந்தநவாப்பாலசாவென்று மயங்கினேம். உள்ளே சென்றேம் எமதுள்ளும் சென்றேம் இப்புறம் அப்புறம் எப்புறம் சோதியே கண்டோம் சோதியாய் முடிந்தோம். கண்ணாய் நின்றேம். கண்ணையு மிழந்தாம் இவ்வழி

அவ்வழி, எவ்வழி தாமும் நிலைக்கண்ணாடியேகண்டு பிரமித்தாம். எங்கெங்கும் பார்த்தாம்; எம்மையே கண்டாம்; மேலும் கண்டாம்; கீழும் கண்டாம்; யாண்டுஞ் சுற்றிச் சுற்றிப்பற்றிப்பார்த்தாம். யாமேவிளங்கினும். யாமாய் நின்றும். "அஹம் பிரஹ்மாஸ்மி" சத்தியமே என்றும். எந்தை ராமசாமி எந்தற்செல்வமும் முத்துகுமர ! தத்துவமசியை யுணர்திகொல் என்றார். அயமாத்மா பிரஹ்மா என்றும். ஆம்ஆம் பிரக்கியாநம் பிரஹ்மம் அன்றோ என்றேகூறி எந்தையுந்தாயுந் தாமேயாவார் முடித்தார ! முடித்தார் !

## ஓம் தத்ஸத் ஓம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

---

## முதல்வன் ஸ்துதி.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

---

## பிழைதிருத்தம்.

| பிழை. | பக்கம். | திருத்தம். |
|---|---|---|
| சோமசூர்யாதி | ... 2 | சனி சூர்யாதி. |
| உள்ள ஜீவனை | ... 50 | உள்ள சிவனை. |
| லேடி ஆனிபெசன்ட் | ... | மிசஸ் ஆனிபெசன்ட். |

**ஸமரஸஞான சந்திரிகை முற்றுப்பெற்றது.**

திருச்சிற்றம்பலம்.

---

PRINTED BY THOMPSON AND CO., BROADWAY, MADRAS.